விலை: 20.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 19 புதன்கிழமை (02.05.2018) தொலைபேசி 222 3378, 222 7329 ஒலி 134

UNION
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# நாம் அனுபவிக்கும் சுதந்திரம் பலரது குருதியில் உருவானது

## மே தின செய்தியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



**(கொழும்பு) மூன்று தசாப்த காலங்களாக இருந்த அசாதாரண சூழ்நிலைகளில் இருந்து விடுதலை பெற்று, ஜனநாயகப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் நாம் இன்று அனுபவிக்கும் சுதந்திரம் பலரது குருதியில் உருவானது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது மே தின செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

இன்று நாம் அனுபவிக்கும் சுதந்திரம் பலரது குருதியில் உருவானது என இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். மேதினச் செய்தி 24

## உழைக்கும் மக்களுக்கு துணிச்சல் வேண்டும்!

### பிரதமர் ரணில்

(கொழும்பு)

தமது உரிமைகளை வெற்றி கொள்வதுடன் நாட்டிற்காகத் தமது கடமைகளை நிறைவேற்றி அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு அனைத்து உழைக்கும் 24

## யாழ். பல்கலையில் தொழிலாளர் தினம்




23

## இன்று தேசிய துக்க தினம்

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை சிங்கள சினிமா துறையின் தந்தை என வர்ணிக்கப்படும் சர்வதேச புகழ் 23

## விடுதலைக்காக போராடியவர்களை நினைவுகூர ஒன்று சேருங்கள்

### ஜனநாயக போராளிகள் கட்சி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலை வேண்டி ஒன்றாக போராடிய நாம் விடுதலைக்காக போராடியவர்களை நினைவு கூருவதிலும் ஒன்று சேர வேண்டும் என ஜனநாயகப் போராளிகள் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவு தினம் தொடர்பாக ஜனநாயகப் போராளிகள் கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைத் தீவில் தமிழ் மக்களும் இறையாண்மை உள்ள ஆட்சி அதிகாரங்களுக்கு உரித்துடையவர்கள். இச்செல்நெறிப்போக்கு கடந்த காலங்களில் இடர்பாடுகளை எதிர்கொண்ட வேளைகளில் 24

## தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுச்சிப் பாடல்களுடன் யாழில் மே தினப் பேரணி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுச்சிப் பாடல்களின் ஒலிகளுக்கு மத்தியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தினப் பேரணி யாழில் இடம்பெற்றது.

நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் நெல்லியடி புதிய சந்தைப் பகுதியில் ஆரம்பமான இப்பேரணி, மைக்கல் விளையாட்டு மைதானம் வரை சென்றடைந்தது.

இதன்போது, தமிழரின் உரிமைகள், தமிழ் மக்களின் கோரிக்கைகள் மற்றும் தொழிலாளர் உரிமைகள் தொடர்பில் வாகன ஊர்திகளும் பேரணியில் பங் 24

## புதிய அமைச்சரவையில் நம்பிக்கையில்லை

### பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்



(கொழும்பு)

புதிய அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 24

## வெசாக் காலப் பகுதியில் சுற்றிவளைப்பில் 670 பேர் கைது

(கொழும்பு)

வெசாக் காலப்பகுதியில் நேற்று இரவுவரை மேற்கொண்ட சுற்றிவளைப்புக்களில் 670 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய 850க்கும் அதிகமான சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், இதன் போது 778 மதுபானம் 24

## தேர்தலில் வாக்கு வங்கியை இழந்த கூட்டமைப்பினர் திருந்துவார்கள் என நினைப்பது முட்டாள்தனம் - கஜேந்திரகுமார்




(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சித் தேர்தலில் தமது வாக்கு வங்கியை சுமார் இரண்டு இலட்சம் வாக்குகளால் இழந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் திருந்துவார்கள் என நாங்கள் எதிர்பார்த்தோம். அது எங்களுடைய முட்டாள்தனம். அவர்கள் திருந்தப்போவதில்லை 23

## புதிய இராஜாங்க, பிரதி அமைச்சர்கள் இன்று நியமனம்

(கொழும்பு)

இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களின் நியமனம் இன்று புதன்கிழமை இடம்பெறுமென ஜனாதிபதி தெரிவித்ததாக பொது நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். 24

## இனவாத அரசியலுக்குள் நாட்டு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்

### யாழில் இடம்பெற்ற ஜே.வி.பியின் மே தின கூட்டத்தில் அனுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

எமது நாட்டு மக்கள் ஆட்சியாளர்களால் தீவிர இனவாத அரசியலுக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள் 23

## கூட்டரசு எங்களை தொடர்ந்து ஏமாற்றினால் சர்வதேசத்துடன் சேர்ந்து தீர்மானம் எடுப்போம்

### மே தின உரையில் மாவை சேனாதிராசா எச்சரிக்கை

(கரணவாய்)

இந்த அரசாங்கம் எங்களை தொடர்ந்து ஏமாற்றினால் சர்வதேசத்துடன் இணைந்து ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டிவரும் என நல்லாட்சி அரசாங்கத்தை எச்சரிக்கை செய்யும் 23



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## அறிவித்தல்
## கேள்வி திறத்தல் பிற்போடல்
## யாழ்ப்பாணம் மாநகர சபை

18.04.2018ஆம் திகதி எம்மால் பிரசுரிக்கப்பட்ட சபை நிதி-2018இன் கீழான வீதி வேலைத்திட்டங்கள் தொடர்பான கேள்வி அறிவித்தலில் பந்தி 05, 06இல் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியான 19.04. 2018-03.05.2018 ஆனது 19.04.2018-17.05.2018 எனவும் பந்தி 07இல் குறிப்பிடப்பட்ட 04.05.2018ஆம் திகதியானது 18.05.2018 ஆம் திகதி எனவும் மாற்றப்படுகின்றது.


முதல்வர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
01.05.2018

(சி-2469)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## முதலாம் ஆண்டு நினைவில்
## எம் குல விளக்கு

கடந்த 13.05.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், சைவசித்தாந்த முதுகலை மாணி (M.A), ஆன்மீகச் சொற்பொழிவாளர், புராணபடன ஓதுவார், ஆசிரியர்



### நித்தியானந்தன் தசீதரன்

(நித்தியதசீதரன், என்.ரி.தரன்)
(கௌரவ செயலாளர், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்)

உத்தமனே நித்திய தசீதரனே உன்னைப்போல்
இத்தரையில் இனி நாங்கள் என்றைத்தான் கண்டிடுவோம்
சுத்தமான உன்வாழ்வும் தூய்மையான சிந்தனையும்
மெத்தவுமே பண்பான பணிவான குணநலனும்.

புன்முறுவல் தவழ்கின்ற புதுமலர் போல் முகமலர்வும்
எந்நேரமும் சிரிக்கின்ற இனிதான சிரிப்பொலியும்
நன்னயமாய்ப் பேசுகின்ற நல்ல தமிழ்ச் சொல்லழகும்
தென்றல்போல் தவழ்ந்துவரும் கருத்தழகும் [illegible]
எத்தனை சங்கங்கள் எத்தனை கோயில்கள் எத்தனை உறவுகள்
அத்தனை சேவைகளும் அயராமல் செய்கின்ற அறிந்தோர் செயல்வீரன் நீ
நித்தமும் புதுப்புதிய வேலைகள் குவிந்தாலும் தயக்கமே இன்றியே
மெத்தவும் சிறப்பாகச் செய்துமே முடிக்கின்ற மேன்மையாளன்.

எந்நாளும் சபைகளிலே இறையருளைப் பேசுகின்ற இனிய வாழ்வும்
சின்ன இளம் வயதினிலே [illegible] போற்றும் தவத்தின் [illegible]
சந்நிதியான் முன்னிலையில் இவ்வுலக நினைவிழந்து இறை நினைந்து
ஜன்மமெல்லாம் முடிந்து சிவ கதிபெற்றாய்
என்பதைத்தாம் காண வைத்ததோ.

அன்னாரின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திக் கிரியை இன்று (02.05.2018) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்னாரின் அனைத்து உறவுகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பன்னாலை,
தெல்லிப்பழை

இங்ஙனம்:
குடும்பத்தினர்

(சி-2466)

## மங்கள மணிவிழா வாழ்த்துக்கள்



உயர்திரு.
### ஆறுமுகம் சிவநாதன்
(அதிபர்)

கிளிநொச்சி ஜெயந்திநகர், மகாதேவ ஆச்சிரம உபதலைவரும், புற்றளை மகாவித்தியாலயத்தின் அதிபருமாகிய திரு. ஆறுமுகம் சிவநாதன் அவர்கள் மேலும் கல்விப்பணி, ஆன்மீகப் பணி என்பவற்றை சிறப்புற நடத்தவும், அவர் தம் குடும்பத்துடன் நோயற்ற வாழ்வு பெற்று நீடூழிவாழ; எம் குருநாதன் ஸ்ரீமத்கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் குருவருளும், தில்லை கூத்தன் திருவருளும் பெற்றிட நாம் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

"அன்பே சிவம்"

(3816)

மகாதேவ ஆச்சிரமம்,
கிளிநொச்சி.

அறங்காவலர்- நிர்வாக உறுப்பினர்கள்

## கண்ணீர் அஞ்சலி

### ரூத் சவரி




எமது பாடசாலை முதல்வர் திரு.சவரி பூலோகராஜா அவர்களின் சகோதரி ரூத் சவரி அவர்கள் 30.04.2018 அன்று இறைத்தூவம் அடைந்தார். அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயர்வுறும் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

-பாடசாலைச் சமூகம்
கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி

(C-2471)

## எட்டாவது நினைவலைகளில்...



### செல்வன்.மகாலிங்கம் சதீஷன்

(பணிப்பாளர் – பிரியங்கா டிஜிற்றல் கலர் லாப்)

எண்ணவே முடியவில்லை – நீ
எம்மை விட்டு எட்டு ஆண்டுகள் சென்றதை
எண்ணியதை(நீ) எளிதில் முடிப்பாய் என்று
எண்ணி இருந்தோம் அன்று – நாம்
எண்ணியதை முடித்து விட்டான் கயவன் – நீ
எண்ணியதை கலைத்து விட்டான் கயவனன்று
இருள் சூழ்ந்தது எம் குடும்பத்தில் இன்னமும் விலகவில்லை உன் உருவம்
எட்டு ஆண்டுகள் சென்றாலும் மறப்பமா உன்னை
மறப்பமா வஞ்சம் தீர்த்த கயவர்களை.....

– என்றும் உன் நினைவுடன் குடும்பத்தினர் –


(சி-2 472)

மலர்வு 09.09.1984 உதிர்வு 02.05.2010 பிள்ளையார் கோவில் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.

## வனஜீவராசிகள் பொன்சேகா வசம்

# அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் 18 பேர் ஜனாதிபதி முன் பதவிப் பிரமாணம்

## வடக்கு அபிவிருத்தி சுவாமிநாதனிடம்







(கொழும்பு)

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்தனர்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை அந்தஸ்துள்ள 18 அமைச்சர்கள் நேற்று ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்தனர்.

நியமனம் பெற்ற அமைச்சர்களின் பெயர் விபரங்கள் பின்வருமாறு.

● லக்ஷ்மன் கிரியெல்ல- அரச தொழில் முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர்.

● கலாநிதி சரத் அமுனுகம- விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆய்வுகள், திறன் அபிவிருத்தி, தொழிற் பயிற்சி மற்றும் கண்டி, மரபுரிமைகள் அமைச்சர்.

● எஸ்.பி. நாவின்ன - உள்நாட்டலுவல்கள் மற்றும் வடமேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

● மகிந்த அமரவீர- விவசாய அமைச்சர்.

● துமிந்த திசாநாயக்க- நீர்ப்பாசன, நீர் வழாங்கல் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர்.

● விஜித் விஜயமுனி டி சொய்சா - மீன்பிடி, நீரியல் வளாங்கள் மற்றும் கிராமிய பொருளாதார அமைச்சர்.

● பி.ஹரிசன்- சமூக வலுவூட்டல் அமைச்சர்.

● கபீர் ஹாசீம் - பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர்.

● ரஞ்சித் மத்தும பண்டார - பொது நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் சட்டம், ஒழுங்கு அமைச்சர்.

● தலதா அத்துகோரள - நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்.

● பைஸர்முஸ்தபா மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர்.

● டி.எம். சுவாமிநாதன் - மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர்.

● சாகல ரத்நாயக்க- இளைஞர் விவகாரங்கள், செயற்றிட்ட முகாமைத்துவம் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்.

● மனோ கணேசன்- தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர்.

● தயா கமகே- சமூக நலன்புரி மற்றும் ஆரம்ப கைத்தொழில்கள் அமைச்சர்.

● பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பேண்தகு அபிவிருத்தி, வன ஜீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர்.

● ரவீந்திர சமரவீர - தொழில், தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்.

● விஜயதாச ராஜபக்ஷ - உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்.

ஏனைய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள் தற்போதுள்ளவாறே காணப்படுவதுடன், புதிய இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்கள் இன்று முற்பகல் 10.30இற்கு ஜனாதிபதி செயலகத்தில் பதவிப் பிரமாணம் செய்வர்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறும் இந்நிகழ்வில் அரசாங்கத் தரப்பிலுள்ள சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (இ-7)

# மாகாணசபைத் தேர்தலை பிற்போடுவதற்கு முயற்சி

## கண்காணிப்பு அமைப்புக்கள் குற்றச்சாட்டு





(கொழும்பு)

மாகாண சபைகளுக்கான எல்லை நிர்ணய அறிக்கையினை வெளியிடுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளமையானது மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படும் நிலைமையை உருவாக்கி உள்ளது என்றும் பவ்ரல் மற்றும் கபே அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

மாகாண சபைகளுக்கான எல்லை நிர்ணய அறிக்கை இதுவரையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் அவ் அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இது தொடர்பில் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவிக்கையில்,

மூன்று மாகாண சபைகளுக்கான கால எல்லை நிறைவடைந்துள்ள நிலையில் அவற்றுக்கான எல்லை நிர்ணய அறிக்கைகள் இதுவரையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. குறித்த ஒருமாத காலப்பகுதிக்குள் எல்லை நிர்ணய அறிக்கை வெளியிடப்பட்டால் மாத்திரமே குறிப்பிட்ட காலத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த முடியும். ஆனால், எல்லைநிர்ணய அறிக்கை இதுவரையில் வெளியிடப்படாத நிலையில் மாகாணசபை தேர்தலை செப்டெம்பர் மாதத்தில் நடத்த முடியாத நிலை உருவாகியுள்ளது.

ஒரு மாத காலப்பகுதிக்குள் எல்லை நிர்ணய அறிக்கை சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பத்தில் பிரதமரால் எல்லை நிர்ணய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கென தனியான குழுவொன்று நியமிக்க முடியும். அந்த குழுவினூடாக எல்லை நிர்ணய நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் பணிகளை மேற்கொள்ள முடியும். அவ்வாறானவொரு குழுவும் இதுவரையில் நியமிக்கப்படவில்லை.

மாகாண சபைத்தேர்தல் முறைமைதொடர்பில் பலவாறான விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் தற்போது எல்லை நிர்ணய அறிக்கையும் தேர்தலை ஒத்திவைக்க கூடிய சூழ்நிலையை தோற்றுவித்துள்ளது.

மேலும் சிவில் அமைப்பு என்ற ரீதியில் எல்லை நிர்ணய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கென பவ்ரல் அமைப்புக் குழுவொன்றினை நியமித்துள்ளது. எவ்வாறாயினும் தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் முறைமையிலாவது மாகாண சபைகளுக்கான தேர்தலினை விரைவில் நடத்தவேண்டும் எனத் தெரிவித்தார்.

இது குறித்து கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் குறிப்பிடுகையில்,

மாகாணசபைத்தேர்தலை காலந்தாழ்த்துவதற்காகவே எல்லை நிர்ணய அறிக்கையினை வெளியிடும் பணிகளும் காலம் தாழ்த்தப்பட்டுள்ளன. எல்லை நிர்ணய அறிக்கை வெளியிடப்படாமல் தேர்தலை நடத்த முடியாது.

குறித்த காலத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டுமானால் எல்லை நிர்ணய அறிக்கையும் விரைவில் வெளியிடப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 2019 A/L மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டம் தொடர்பான வலுவூட்டல் செயலமர்வு யாழில்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறுவெளிக்கள நிலைய அனுசரணையுடன் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு நடத்தும் 2019 க.பொ.த. உயர்தரப் பிரிவு மாணவர்களுக்கான புதிய பாடத் திட்டம் தொடர்பான வலுவூட்டல் செயலமர்வு நாளை 3 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்.தென்னிந்திய திருச்சபைப் பேராயர் அதி. வண. கலாநிதி டி.எஸ். தியாகராஜா தலைமையில் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு மண்டபத்தில் (464, ஆஸ்பத்திரி வீதி) இடம்பெறும்.

இதில் வடக்கு மாகாண கல்வியமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் கலந்துகொண்டு வலுவூட்டல் செயலமர்வை ஆரம்பித்துவைப்பார்.(இ

## பதவிகளில் அதிகாரம் மட்டும் கூடுவதால் பயனில்லை-சஜித்



(கொழும்பு)

பதவிகளில் அதிகாரம் மட்டும் கூடுவதால் எந்தப் பயனுமில்லை என வீடமைப்புத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் வீடமைப்புத் திட்டத்தினை மக்களிடம் வழங்கும் நிகழ்வில் நேற்றுக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

'மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப பொறுப்புக்கள் வழங்கப்பட வேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்படவேண்டும். வெறுமனே பதவிகளுக்கு அதிகாரத்தைக் கூட்டுவதனால் எந்த நன்மையும் கிடையாது.

மக்களினால் வழங்கப்படும் ஆணையினைப் பொறுத்தே முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இதன்போதே மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப எம்மால் சேவை செய்ய முடியும்.

இதனைக் கருத்திற் கொண்டே பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் பதவிகளைத் துஷ்பிரயோகம் செய்வதற்கு அனுமதிக்கக் கூடாது. பதவியின் அதிகாரம் என்பதைவிட மக்களின் திருப்தியே எமக்கு முக்கியமானதாக அமைய வேண்டும். இதன்மூலம் சிறந்த ஆட்சியினை மக்களுக்கு வழங்க முடியும்' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அமைச்சரவை மறுசீரமைப்பு பிரச்சினைக்குத் தீர்வல்ல

### விஜித ஹேரத் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அமைச்சரவை மறுசீரமைப்பு தீர்வல்ல என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

களனி பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அமைச்சரவை மறுசீரமைப்பும் புதிய அமைச்சரவை நியமனமும் நகைச்சுவையாக மாறி யுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு





யாழில் நேற்று நடைபெற்ற மே தின ஊர்வலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகள் பங்கெடுத்ததை படங்களில் காணலாம்.




தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி



மக்கள் விடுதலை முன்னணி

# மரண அறிவித்தல்

## பொன்னையா துரைசிங்கம்



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா துரைசிங்கம் அவர்கள் நேற்று (01.05.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தின தேவியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான திசைவீரசிங்கம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான குலத்துங்கம், இராசமலர், இராசரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சாரதா (லண்டன்), பரிமளா (N.H.D.A - யாழ்ப்பாணம்), பகீரதன் (ஆசிரியர்-யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கோவிந்தராஜன் (N.H.D.A - கிளிநொச்சி), பாஜினி ஆகியோரின் மாமனாரும் பிரணவப்பிரியன் (மாணவன் - சப்ரகமுவ பல்கலைக் கழகம்) சங்கீரணி (மாணவி - யாழ்ப்பாணக் கல்லூரி), நித்திலன் (மாணவன் - யாழ்ப்பாணக் கல்லூரி), நிருசன் (மாணவன் - யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.05.2018) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி வீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

(3818)

தகவல்:- குடும்பத்தினர்
021-225-1198

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம்

### நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறி - 2018/2019

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தினால் நடாத்தப்படும் நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

- **கற்கைநெறிக்கான காலம்** - ஒரு வருடம் (வார இறுதி நாட்கள்)
- **கற்பிக்கப்படும் மொழி** - தமிழ்
- **விண்ணப்பிப்பதற்கான தகுதி** - க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களிலும் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- **கற்கைநெறிக்கான கட்டணம்** - ரூபா.30,500/-

**கட்டண விபரம்:**

| | |
|---|---|
| பதிவுக்கட்டணம் | - 2,500.00 |
| கல்விக் கட்டணம் | - 23,000.00 |
| பரீட்சைக் கட்டணம் | - 5,000.00 |
| மொத்தம் | - 30,500.00 |

- **விண்ணப்ப முடிவுத் திகதி** - 31.05.2018
- **விண்ணப்பிப்பதற்கான முறை:**

விண்ணப்பப்படிவத்துக்கான கட்டணமாக ரூபா 300ஐ செலுத்தி, முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவங்களைத் தபால்மூலம் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பங்களைத் தபால்மூலம் அனுப்புவதாயின் **இணைப்பாளர், நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறி, முகாமைத்துவக்கற்கைகள் வணிகபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** எனும் முகவரிக்கு, கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் '**நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பம்**' எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

(C-2467)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

1. வணிக இரண்டாம் தேர்வு - 2015 (புதிய பாடத்திட்டம்)
2. வணிக மாணி - பகுதி - I - 2015 (பழைய பாடத்திட்டம்)
3. வணிக மூன்றாம் தேர்வு - 2015 (புதிய பாடத்திட்டம்)
4. வணிக மாணி - பகுதி - II - 2015 (பழைய பாடத்திட்டம்)
5. வணிக நான்காம் தேர்வு - 2015 (புதிய பாடத்திட்டம்)
6. வணிக மாணி - பகுதி - III - 2015 (பழைய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளை 16.05.2018 (புதன்கிழமை) தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பின்வரும் ஒழுங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. வணிக இரண்டாம் தேர்வு - 2015 (புதிய பாடத்திட்டம்) | 16.05.2018 - 25.05.2018 | 9.00 - 12.00 |
| 2. வணிக மாணி - பகுதி - I - 2015 (பழைய பாடத்திட்டம்) | 16.05.2018 - 25.05.2018 | 9.00 - 12.00 |
| 3. வணிக மூன்றாம் தேர்வு - 2015 (புதிய பாடத்திட்டம்) | 28.05.2018 - 05.06.2018 | 9.00 - 12.00 |
| 4. வணிக மாணி - பகுதி - II - 2015 (பழைய பாடத்திட்டம்) | 28.05.2018 - 05.06.2018 | 9.00 - 12.00 |
| 5. வணிக நான்காம் தேர்வு - 2015 (புதிய பாடத்திட்டம்) | 06.06.2018 - 13.06.2018 | 9.00 - 12.00 |
| 6. வணிக மாணி - பகுதி - III - 2015 (பழைய பாடத்திட்டம்) | 06.06.2018 - 13.06.2018 | 9.00 - 12.00 |

பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் 11.05.2018 (வெள்ளிக்கிழமை), 14.05.2018 (திங்கட்கிழமை), 15.05.2018 (செவ்வாய்க் கிழமை) ஆகிய தினங்களில் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
01.05.2018

(C-2468)

# கஞ்சா செடி வளர்த்தவர் கைது!



(கொழும்பு)

பூச்செடிக்குப் பதிலாக கஞ்சா செடிகளை வளர்த்து வந்த ஒருவரை தலவாக்கலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தலவாக்கலை தோட்ட பகுதியில் வீடொன்றில் யாருக்கும் சந்தேகம் ஏற்படாத வகையில் பூச்செடி வளர்க்கும் சாடியில் கஞ்சா செடிகளை வளர்த்து வந்துள்ளார்.

சுமார் இரண்டு அடி உயரமான கஞ்சா செடிகள் மூன்றை நேற்று மதியம் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்குகிடைத்த இரகசிய தகவலையடுத்து தலவாக்கலை பொலிஸாரினால் சுற்றிவளைப்பு செய்யப்பட்ட போது, சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கஞ்சா செடிகளுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை வழக்கு பதிவு செய்து நுவரெலியா மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 222 7603,
021 567 1532

# ஊர்காவற்றுறையில் துப்புரவு செய்யப்படாத காணிகள் மீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட இடங்களில் துப்புரவு செய்யப்படாதுள்ளகாணிகள் மீதுநடவடிக்கை எடுக்க பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

எனவே துப்புரவு செய்யப்படாத காணிகளின் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் 31.05.2018ம் திகதிக்குமுன் துப்புரவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் தவறும்பட்சத்தில் துப்புரவு செய்யப்படாத காணிகள் மீது 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதேச சபை தெரிவித்துள்ளது. (இ-7)

விற்பனைக்கு கிளிநொச்சி
A9 வீதியில்
3 கடைகளுடன் கட்டிடம்:-
0776311285
(3701)

நம்பிக்கை இழக்க வேண்டாம்.
உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.
எந்தத் துயரமாயினும், அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.
மதசார்பற்ற, இலவச சேவை. ரகசியமானது.
கை கொடுக்கும் நண்பர்கள்
யாழ்ப்பாணம்: 077 900 8776
(தினமும் மு.ப. 9.00 - பி.ப. 1.00)
வவுனியா: 024 324 4444
(சனி, ஞாயிறு மு.ப. 9.00 - பி.ப. 1.00)

## சென்றலைஸ்ட் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சென்றலைஸ்ட் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 13.05.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4.30 மணிக்கு கல்லூரி வளாகத்தில் இடம்பெறவுள்ளது. இக் கூட்டத்தில் அடுத்த புதிய நிர்வாகக் குழுத் தெரிவு இடம்பெறவிருப்பதால் அங்கத்தவர்கள் அனைவரையும் கூட்டத்திற்கு தவறாது சமூகமளிக்கும்படி நிர்வாகக் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (3814)

-கழக செயற்குழு-

## கண்ணீருடன்...



கலாபூஷணம்

அண்ணாவியார் **அன்ரனி பாலதாஸ்**

ஈழத்துக் கூத்து மரபின் மதிப்பார்ந்த கலைஞரும் திருமறைக் கலாமன்றத்தின் மூத்த அங்கத்தவரும் முன்னாள் நிர்வாக சபை உறுப்பினரும், நாட்டுக்கூத்துப்பிரிவின் பொறுப்பாளருமான கலாபூஷணம், அண்ணாவியார் அன்ரனி பாலதாஸ் அவர்கள் 26.04.2018 இல் காலமானதையிட்டு ஆழ்ந்த துயரடைந்துள்ளோம். அவருக்கு எமது நெஞ்சம் கனக்கும் கண்ணீர்த்துளிகளை காணிக்கையாக்கி அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம். (2464)

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

இயக்குநர், அங்கத்தவர்கள்,
திருமறைக் கலாமன்றம்.

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**அப்பாக்குட்டி தெய்வேந்திரராசா**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1940 - 03 - 29 | 2013 - 04 - 28 |

திதி: 02.05.2018

அப்பா! உங்கள் காலடி
சுவடுகளை தேடுகின்றோம்-அது
தேய்பிறை போல் எட்டாத தூரம்
போய்விட்டதோ?
தேம்பி அழுகின்றோம் அப்பா-எமை
தேடிவந்து சேர மாட்டீர்களா அப்பா...

உங்களுக்காக காத்திருக்கும்
அன்பு மனைவி, மகன், மகள்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சு.சசிகரன் (மருமகன்)
வல்வெட்டி. (C-2453)

## இராசி பலன்

**மீனம்:** புதிய முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், கடின வார்த்தைகளைத் தவிர்ப்பது நல்லது.

**மேடம்:** புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, எடுத்த காரியங்களில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**இடபம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**மிதுனம்:** செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், சுவாரஷ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**கும்பம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**கடகம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**மகரம்:** உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன நன்மையுண்டு.

**சிம்மம்:** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், பகைவர்கள் விலகுவர்.

| | | | |
|---|---|---|---|
| புத | சூரி | சுக் | |
| | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அச்சுவினி, பரணி | | ராகு |
| செவ் கேது | | | |
| சனி | சந் | குரு | |

02.05.2018
சித்திரை 19, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
துதிமை முற்பகல் 8.00 மணிவரை
அனுசம் மாலை 5.58 மணிவரை
சுபநேரம் 4.27--5.57 மணிவரை
இராகுகாலம் 11.57-1.27 மணிவரை
அமிர்தசித்தம்

வளவன்

**தனுசு:** தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், சயன சுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தொழில் விருத்தியுண்டு.

**துலாம்:** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், சிந்தனை மிகுதியான நாள், புதிய தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி:** தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

# யாழில் உளவியல் பட்டதாரிகள் கவனயீர்ப்புப் போராட்டம்






(படங்கள்:பொ.சோபிகா)

(யாழ்ப்பாணம்)

வழிகாட்டலும் ஆலோசனை ஆசிரியர் பதவி வெற்றிடத்துக்கு முறையற்ற நியமனம் இடம்பெறுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவ் வெற்றிடத்துக்குப் பொருத்தமான தகுதியுடையவர்களை நியமிக்கக் கோரியும் பாதிக்கப்பட்ட உளவியல் பட்டதாரிகள் நேற்றுக் காலை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலக முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இன்று 02.05.2018 நடைபெறவிருக்கின்ற "வேறு வகையான பாடத்தினை நியமனமாகக் கொண்ட ஆசிரியர்களை வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்களாக மாற்றம் செய்வதற்குத் தகைமைகளைப் பரிசீலிப்பதற்கான நேர்முகத் தேர்வில் சில குழறுபடிகள் நடைபெற்றுள்ளன,

அதாவது வ்டக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர் (Guidance & Counselling Teacher) வெற்றிடத்திற்கு கணிசமான நியமனங்கள் வழங்கப்பட இருக்கின்றது. இது முறையற்ற விதத்தில் இடம்பெற்றுவிடக்கூடாது என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் இன்று நடைபெறவிருக்கின்ற நேர்முகத் தேர்வில் "வேறு வகையான பாடத்தினை நியமனமாகக் கொண்ட, வேறுபாடங்களை பட்டப்படிப்பாகப் படித்து வெளியேறி தற்போது கடமையாற்றிக் கொண்டிருக்கின்ற ஆசிரியர்கள், வழிகாட்டல் ஆலோசனை பாட ஆசிரியர்களாக மாற்றம் செய்வதற்கு அழைக்கப்படவிருக்கின்றார்கள். இதன்போது தகுதியில்லாத, முறையற்ற விதத்தில் வேறுபாட ஆசிரியர்கள் உள்வாங்கப்படவும் உள்ளனர்.


இதனால் பாதிக்கப்படப் போகும் நிலைமைக்கு உளவியல் பாடப் பட்டதாரிகள் தள்ளப்பட்டுள்ளார்கள். குறிப்பாக கடந்த ஆண்டில் (2017) இத்துறைசார் பட்டதாரி ஆசிரியர் நியமனத்திற்காக வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் முன்னுரிமை அடிப்படையில் உளவியல் பட்டதாரி மாணவர்களே அதிகம் உள்வாங்கப்பட்டார்கள். இதனை உறுதி செய்வதாய் கல்வித் திணைக்களத்தின் அன்றைய சுற்றறிக்கை அமைந்திருந்தது

இருப்பினும் ஏனைய துறைசார்ந்த பட்டதாரி மாணவர்களைப் புறந்தள்ளுவது இதன் நோக்கமல்ல. என்றாலும் தற்காலத்திற்குப் பொருத்தமாக உளவியல் பாடத்தினைப் பிரதான பாடமாகக் கற்று வெளியேறிய பட்டதாரிகளே மேற்படி நியமனத்திற்குத் தகுதியானவர்களாகவும் சரியானவர்களாகவும் இருப்பார்கள் என்பதுடன், வழிகாட்டல் ஆலோசனை தொடர்பாக அடிப்படை அறிவைப் பெற்றவர்களாகவும் இவர்கள் காணப்படுகின்றார்கள் எனவும் இத்துறை சார்ந்து பல வருடங்களாகப் பணியாற்றும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களின், சமூகப்பணியாளர்களின் கணிப்பாகும்.

காலத்திற்கேற்ப மாறுபட்ட வகையில் உள்வாங்கப்படுகின்ற நியமனங்களுக்குப் பின்னால் அரசியலும் சமூகச்செல்வாக்கும் குறுகிய இலாபமும் தம்மைத் தக்க வைத்துக் கொள்ளுதலும் இருந்து வருகின்றன.

எனவே பொருத்தமற்ற பாடத்துறை சார்ந்தவர்களை இந்நியமனத்தில் உள்வாங்குவதைத் தவிர்க்க சேவைப் பிரமாணக்குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்புத்திட்டம் என்பன முறையான மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு நிலையான இறுதி வடிவத்தைப் பெற ஆவன செய்ய வேண்டும், பாடசாலைகளில் அண்மைக்காலமாக அதிகரித்துச் செல்கின்ற மாணவர்களின் பிறழ்வு நடத்தைகளைப் பாடசாலை மட்டத்திலேயே கையாள நிபுணத்துவம் மிக்க ஆசிரியர்குழாமை உருவாக்க வேண்டும், பாடசாலைகளில் நிலவுகின்ற வழி காட்டல்-ஆலோசனை ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு குறுக்கு வழிகளைக் கையாள்வதைத் தவிர்த்து, நீடித்த தீர்வாகிய பொருத்தமான பாடப் பின்புலமுள்ளவர்களை உள்வாங்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும், வேறுபாடத்திலுள்ளவர்களை இந்நியமனத்திற்கு உள்வாங்குவதை முற்றாகத் தவிர்த்து நியமனக் கனவோடு காத்திருக்கின்ற, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நியமன ஆட்சேர்ப்பை விரைந்து நடைமுறைப்படுத்தி உளவியல் பட்டதாரிகளுக்கான நியமனத்தை வழங்க வேண்டும், ஏற்கனவே இந் நியமனத்திலுள்ள ஆசிரியர்களின் வாண்மைத்துவத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு வாய்ப்புக்களை வழங்க வேண்டும், அவர்களுக்கான இடத்தை பொருத்தமற்றவர்கள் மூலம் நிரப்புவதைத் தவிர்க்க வேண்டும், வடமாகாணக் கல்வித்திணைக்களத்தின் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் இந்த விடயத்தில் தவறிழைத்துவிடக் கூடாது என சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இவ்விடயம் தொடர்பாக ஆளுநர் கவனத்தில் கொள்ள வேண்டும் எனக் கோரி நேற்று ஆளுநரின் பிரதிச்செயலாளரிடம் மகஜர் ஒன்றும் கையளித்துள்ளனர். (இ-9)



அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களின் தேவை மதிப்பீடுகள் தொடர்பான விசேட கூட்டம் கடந்த 27 ஆம் திகதி தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெற்றது. இதில் தெல்லிப்பழை பிரதேச செயலாளர்.ச.சிவஸ்ரீ, மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சு.முரளிதரன், வலி.வடக்குப் பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் மற்றும் தொடர்புபட்ட திணைக்களங்களைச் சார்ந்தோர், உள்நாட்டு சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாண மாவட்ட பகிரங்க ஓய்வூதியர்கள் நம்பிக்கை நிதியத்தின் ஒன்பதாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.செயலக மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக அரச அதிபர் நா.வேதநாயகம், தாய்ச்சங்க உறுப்பினர் ஆர்.எம்.வி.ஜெரணதுங்க, S.D.B. வங்கி முகாமையாளர் எஸ்.சுரேஸ் ஆகியோர் கலந்து கொள்வர். தொடர்ந்து புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறும். (இ-106)

## பொலிஸார் பாராமுகம்

## பட்டப்பகலில் சுதந்திரமாகச் சுற்றும் வாள்வெட்டுக் குழுக்களால் மக்கள் அச்சம்

(கரணவாய்)

பருத்தித்துறைப் பகுதியில் பட்டப்பகல் வேளையில் வாள்களுடன் சிலர் நடமாடுவது குறித்து பொலிஸாருக்கு அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென பொதுமக்களால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தும்பளைப் பகுதியில் இடம் பெற்ற வாள் வெட்டுச் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து தும்பளை, பருத்தித்துறை சுப்பர் மடப் பகுதிகளில் மோட்டார் சைக்கிள்களில் செல்லும் சிலர் வாள்களை சுழற்றியவாறு செல்வதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் வீதியால் செல்வதற்குக்கூட பொதுமக்கள் அச்சப்படுகின்றனர். (இ-60)






அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்திய சிலப்பதிகார விழா புற்றளை மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இதன் இரண்டாம் நாள் நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போது... (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

## உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு 20,000 ரூபா புலமைப் பரிசில்கள்

### கமநல அபிவிருத்தித் திணைக்களம் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் புலமைப்பரிசில் நிதியத்தின் ஊடாக வருமானம் குறைந்த விவசாய குடும்பத்தைச் சேர்ந்த உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு தலா ரூபா 20,000 வீதம் புலமைப்பரிசில்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தகைமைகள்

1.முழுநேர விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவராகவும் பெற்றோரில் ஒருவராவது யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஏதாவதொரு கமக்காரர் அமைப்பில் உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.

2. 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற சாதாரண தரப் பரீட்சையில் சித்தியெய்தி 2019 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவராக இருத்தல் வேண்டும்.

மேற்கூறிய தமைமை யுடைய விண்ணப்பதாரிகள் தமது எல்லைக்குட்பட்ட கமநல சேவை நிலையத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று தத்தமது கமக்கார அமைப்பின் சிபாரிசுடன் உரிய கமநல சேவை நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை தாம் கல்வி கற்கும் பாடசாலை அதிபரின் சிபாரிசு கடிதத்துடனும் குறித்த கிராம சேவை உத்தியோகத்தரின் சிபாரிசுக் கடிதத்துடனும் 2018.05.24 ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடியவாறு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கையளிக்கும்படி கேட்டுக்கொள்வதாகவும் மேலும் மேற்படி திட்டத்தில் குடும்ப வருமானம், பிள்ளையின் கல்வித் தரம், மீள்குடியமர்வு என்பன கருத்தில் எடுக்கப்பட்டு கமநல சேவைகள் நிலைய பிரிவு மட்டத்தில் தெரிவு இடம்பெறும் எனவும் கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (இ)

# நல்லிணக்கத்தின் செயற்பாட்டு உறவுமுறை



நல்லிணக்கம் சகவாழ்வு என்னும் சொற்றொடர்கள் போரின் பின்னைய காலப் பகுதியில் பரவலாகப் பேசப்படும் சொல்லாக மாறியுள்ளது. நல்லிணக்கச் செயற்பாடுகளுக்காக பல வேலைத் திட்டங்கள் இதற்காகவே ஒரு அமைச்சு மாவட்ட ரீதியான நல்லிணக்கக் குழுக்கள் என செயற்பாடுகள் பல முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆயினும் ஜனநாயக ரீதியான செயற்பாட்டு உறவுமுறை ஒரு நல்லாட்சியை ஊக்குவிக்கும் சூழ்நிலையை உருவாக்கும் அதேவேளை சமூகங்களுக்கிடையில் ஏற்படும் எதிர்மறை உறவுகள் இருந்தால் நல்லாட்சியைக் கூட வலுவிழக்கச் செய்யும். சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படுத்துவது என்பது சாதாரணமானவிடயமல்ல.

நல்லிணக்கம் நாம் நினைப்பதுபோல பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே உரியதல்ல. நல்லிணக்கம் மக்களை மையப்படுத்தியதாகவே அமையும். இதற்கப்பால் போரின் அழிவில் இருந்து மீண்டெழும் சமூகத்தில் அதன் பார்வைகள், நம்பிக்கைகள் பரந்தளவில் ஊடுருவியதாக காணப்படலாம். பொதுவாக நல்லிணக்கச் செயற்பாடுகள் பல்வேறுபட்டவையாகக் காணப்பட்ட போதிலும் இவையெல்லாம் வெற்றி பெறும் என்று கூறுவதற்கில்லை.

முப்பது வருடகாலமாக இடம்பெற்ற போரின் வடுக்கள், சிதறடிக்கப்பட்ட சமூக மாற்றங்கள், இனக் குழுக்களுக்கிடையில் காணப்படும் உறவின் விரிசல்கள், சமூக செயற்பாடுகளில் இவர்களின் வேறுபட்ட பார்வைகள் யாவுமே சமூகத்தில் உட்பூசல்களை ஏற்படுத்துகின்றன. நாம் போரின் வன்முறைகளில் இருந்து ஏதோ வகையில் விடுபட்டிருக்கின்றோம்.

பகைவர்களாக கருதப்பட்டவர்களிடம் ஏற்பட்டுள்ள பயத்தையும் தாழ்வுணர்வை போக்க வேண்டிய கடப்பாடு நல்லிணக்கச் செயற்பாட்டிற்கு உண்டு. இதுவே நல்லிணக்கத்திற்கான முதற்படியாகும். இச்செயற்பாட்டை ஊக்குவிப்பதில் அரசியல் சமூகத் தலைவர்கள், அரசசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் சமய தலைவர்கள் ஆகியோருக்கு நிறையக் கடப்பாடு உண்டு. இங்கே மற்றவர்களது உரிமைகளை மட்டுமின்றி அவர்கள் கௌரவம் பாதிக்காத வகையிலும் செயற்படுத்தல் அவசியம்.

ஆனால் இங்கே நடப்பது என்ன? பௌத்தர்கள் முஸ்லிம் இனத்தைத் தாக்குவதும் அவர்கள் வணக்க தலங்களை உடைப்பதும் ஆங்காங்கே நடைபெறும் சம்பவங்கள் ஆகிவிட்ட நிலையில் 2018 இல் இடம்பெற்ற கண்டியில் நடந்தேறிய பௌத்த முஸ்லிம்களின் சமய முரண்பாடு பாரிய ஒரு இனக்கலவரத்தை ஏற்படுமளவுக்கு இடம்பெற்றமை நாம் முன்னெடுக்கும் நல்லிணக்கத்தை கேள்விக் குறியாக்கியுள்ளதோடு ஐ.நா. மனித உரிமைகளின் 37 ஆவது கூட்டத்தொடர் நடைபெற்ற காலப்பகுதியில் இலங்கைக்கு பெரும் அவமானத்தையும் ஈட்டிக் கொடுத்துள்ளது.

அரசியல் என்ற உயர் பதவியை தவமாக நினைக்காது பிழைப்பாக நினைத்தால் இப்படியெல்லாம் அநீதிகள் அரங்கேறும். அதையும் நியாயப்படுத்துவோம். பௌத்த மதம் இன்று அரச மதமாக மேலோங்கி நிற்கின்றது. பௌத்தமத பீடாதிபதிகள் இன்று நாட்டின் அரசியலை தீர்மானிக்கிற அளவிற்கு செல்வாக்குப் பெற்றவர்களாக உள்ளனர்.

சிறுபான்மையினரோடு இணைத்த மதங்கள் நிந்திக்கப்படுகின்றன. வணக்க தலங்கள் தாக்கப்படுகின்றன. மற்றும் அழிக்கப்படுகின்றன. இதனால் பௌத்தர்களுக்கும் இஸ்லாமியவர்களுக்கும் இடையில் மோதல், பௌத்தவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையிலான மோதல் தொடர்ந்து இந்துக்களுக்கிடையிலான மோதல் இப்படியாக சிறுபான்மை இனங்கள் மதத்தின் பெயரால் இம்சிக்கப்படுகின்றன.

இதன் உச்சக் கட்டமாக அண்மையில் யாழ்ப்பாண பல்கலை. வவுனியா வளாகத்தில் சிங்கள மாணவர்கள் புத்தர் சிலையை வளாகத்தினுள் நிறுவுவதற்காக எடுத்து வந்த சம்பவமும் அதனைத் தொடர்ந்து வளாகம் மூடப்பட்ட சம்பவமும் ஒரு சிறிய எடுத்துக் காட்டாகும். கல்விசார் நிறுவனங்கள் குறிப்பாக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் போன்ற நிறுவனங்களில் மத வழிபாடுகளுக்கான நிறுவனமயப்படுத்தப்பட்ட தலங்கள் அமைக்கப்படுவது பொருத்தப்பாடாக தெரியவில்லை. பல சமூகத்தினை பிரதிபலிக்கும் நிறுவனங்களில் இவ்வாறான மத எழுச்சி நிகழ்வுகள் எப்போதும் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதில்லை.

இலங்கையில் நிறுவனங்களுக்கு அப்பால் வெளியில் செல்லும் போது கண்ணுக்கெட்டும் தூரத்தில் ஏதோ ஒரு மதம்சார் வணக்க தலம் காணப்படுகின்றது. தாராளமாக மாணவர்கள் அங்கு சென்று தமது மத அனுட்டானங்களை நிறைவேற்ற முடியும்.

இச்சம்வம் கூட ஒரு மாதிரியாக இணக்கப்பாட்டிற்கு வந்துள்ள அதேநேரம் திருகோணமலை இந்து பாடசாலையில் முஸ்லிம் ஆசிரியைகள் அபாயா அணியும் விடயம் மேலும் ஒரு இனமுறுகலை ஏற்படுத்தியுள்ளது. அபாயாவா? சேலையா? என்ற பட்டிமன்றம் நடந்து கொண்டு இருக்கின்றது. சடங்குகள், சமய வழிபாடுகள் யாவையுமே மதத்தின் பெயரால் ஏற்படுத்தப்பட்ட முறைமைகள். ஆயினும் இன்று மதத்தின் பெயரால் அச்சுறுத்தல், அதிகாரம் பண்ணி மூடத்தனங்களை எல்லாம் நிறைவேற்றி விடலாம் என்பதில் எல்லா மதங்களும் ஒன்றுக்கொன்று சளைத்தவையல்ல. அபாயா போட வேணும் என்று சொல்ற நீ ஒரு...? சேலை ஆபாசம் என்று சொல்லிற நீ ஒரு...? என்ற கோசங்கள் ஒரு புறம்.

நாம் கல்வி கற்ற வர்க்கத்தினர். பகுத்தறிவு இல்லாத தோற்றப்பிழைகளை கொண்டாடுவதில் அர்த்தமே இல்லை. ஆபாசம் என்பது ஆடைகளில் இல்லை. நாம் பார்க்கும் பார்வைகளிலேயே ஆபாசம் உண்டு. அபாயா யாரும் அணியலாம். ஆனால் தனிப்பட்ட உரிமைகளை நாம் பொது உரிமையாக்கி விட முடியாது. அம்மணமாக நிற்பதற்கு உரிமையுண்டு. அதனை பொது வெளியில் செய்ய முடியாது. நியதிகளும் நியமங்களும் வரையறுக்கப்பட்டவை.

அபாயா ஆடைப் பிரச்சினை ஒரு கல்வி நிறுவனத்தில் ஏற்பட்டது."இதனை கல்விக்குப்பொறுப்பான மேலதிகாரிகளே சீர்செய்ய முடியும். சமூகம்சார் நிறுவனங்களில் பால்நிலைசார் கொள்கை ஒன்று இல்லாமை ஒரு குறைபாடே. ஒருவர் மாற்றலாகி போற ஒரு கல்விப் புலத்திற்கு செல்லும் போது அவரின் சமூக கலாசார பின்னணி கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். அல்லது குறிப்பிட்ட நபர் அவ்விடயம் தொடர்பாக தனது விருப்பு வெறுப்புக்களை தெரிவித்திருக்க முடியும். நாம் கலந்து பேசித் தீர்க்கக் கூடிய விடயங்களை பல சுமுகமான முடிவுகளை நாமே இலகுவில் எட்டிவிட முடியும்.

இதற்காக பல கோணங்களில் விமர்சனங்களை முன்வைத்து பரப்புரைகளை செய்வதில் நல்லிணக்கம் எப்படிச் சாத்தியமாகுமா?

**சரோஜா சிவசந்திரன்**

# சங்கீத மகான்கள் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஓய்வுநிலை உதவிப்பணிப்பாளர் பிரம்மஸ்ரீ இ.குமாரசாமி சர்மா எழுதிய சங்கீத மகான்களும் எம்மண்ணின் சங்கீத கலைஞர்களும் என்ற நூல் வெளியீடு எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் தட்டாதெரு சந்தி, ஐயனார் கோவில் வீதி, ஸ்ரீ லக்ஸ்மி பிளாசாவில் வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணன் ஐயர் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகம், கௌரவ விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் எஸ்.பாலச்சந்திரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், இந்து கலாசார அலுவல்கள் பணிப்பாளர் அருளானந்தன் உமாமகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## யாழ்ப்பாணம்–ஊர்காவற்றுறை சேவையில் ஈடுபடும்

# பேருந்துகள் தொடர்பிலான இடர்பாடுகளுக்கு விரைவில் தீர்வு பெற்றுத் தருமாறு டக்ளஸ் எம்.பியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை மார்க்கங்களில் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் தொடர்பில் உள்ள இடர்பாடுகளுக்கு நிரந்தரத் தீர்வு பெற்றுத்தருமாறு கோரி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் வடபிராந்திய போக்குவரத்து சபை ஊழியர்கள் மற்றும் ஊர்காவற்றுறை வழித்தடம் 780 மற்றும் 777 ஆகிய தனியார் போக்குவரத்து சேவை பேருந்துகளின் அங்கத்தவர்கள் ஆகியோர் நேற்று முன்தினம் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து கலந்துரையாடினர். இதன் போதே குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஊர்காவற்றுறை பிரதேசத்தின் மெலிஞ்சிமுனை பிரதான வீதி புனரமைப்பு மற்றும் அனலைதீவு படகுச் சேவைக்கான பேருந்து சேவை ஆகியவற்றின் போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

குறித்த பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்ட செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா துறைசார் தரப்பினருடன் ஆராய்ந்து காலக்கிரமத்தில் தீர்வுகளை பெற்றுத் தருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு தருவதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான போக்குவரத்து சேவையிலேற்படும் தாமதம் மற்றும் இடர்பாடுகள் தொடர்பில் உரிய தரப்பினர் சரியான தீர்வுகளைக் கண்டு மக்களுக்கான சேவைகளை முன்னெடுக்கவேண்டும். ஏனெனில் தீவகப் பகுதிகளுக்கு பொதுவாக குறைந்தளவான பேருந்துகளே சேவையில் ஈடுபட்டுவரும் நிலையில் பாடசாலை மாணவர்கள்,- அரச உத்தியோகத்தர்கள் மற்றும் நோயாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் உரிய நேரங்களுக்கு குறித்த இடங்களுக்கு செல்வதற்கு பேருந்துகளின் சேவை அவசியமானது என்பதையும் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டினார்.

இதன்போது ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தவிசாளர் ஜெயகாந்தன் உடனிருந்தார். (இ-7)

# குடிநீர் விநியோக சேவையில் ஈடுபடும் தனியார் வாகனங்களை பதிவு செய்ய ஊர்காவற்றுறையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட ஊர்காவற்றுறை, நாரந்தனை, அனலைதீவு, எழுவைதீவு பிரதேசங்களில் குடிநீர் விநியோக சேவையில் ஈடுபடும் தனியார் வாகனங்களை பொதுமக்களின் சுகாதார நலன்களை கருத்தில் கொண்டு பதிவு செய்ய பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

எனவே குடிநீர் விநியோக சேவையில் ஈடுபடும் தனியார் வாகனங்களின் உரிமையாளர்கள் 11.05.2018 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள வேண்டுமென பிரதேச சபை அறிவித்துள்ளது. (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 2
உயரம்: 6'
தகைமை/தொழில்: BBM, வங்கியாளர்
தொ.இ: B/8501

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சித்திரை 1ம் பாதம்
கி.பா: 26
உயரம்: 6'
தகைமை/தொழில்:பட்டதாரி வங்கியாளர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: B/8502

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா:14
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: A/L, தனியார் தொழில்
தொ.இ: B/8504

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 2ம்பாதம்
கி.பா: 32
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BSE,IT, MSE, SLIIT, தனியார் தொழில் பொறியியலாளர்
தொ.இ: B/8508

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2ம்பாதம்
கி.பா: 13
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: B.SCIT (HONS) பொறியியலாளர்
தொ.இ: G/8503

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:தாதிபிரானஸ் PR
தொ.இ: G/8505

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சுவாதி 3ம் பாதம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: டிப்ளோமா (I.C.T) தனியார் தொழில்
தொ.இ: G/8506

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூராடம் 1ம் பாதம்
கி.பா: செவ் 4 இல்
தகைமை/தொழில்:B.F.A
தொ.இ: G/8507

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.






புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் புரட்சிகர மேதின ஊர்வலம் காலை 9.30 மணியளவில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாக ஆரம்பமாகி பஜார் வீதியூடாக ஹொரவப்பொத்தானை வீதி வழியாக ஏ-9 வீதியை வந்தடைந்து நகரசபை வீதியூடாக வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தை சென்றடைந்தது.இவ் ஊர்வலத்தின் போது கல்வியை விற்பனைப் பண்டம் ஆக்காதே , சைட்டம் வேண்டாம் , மக்களின் நிலங்களிலிருந்து இராணுவமே வெளியேறு , அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறை என பல்வேறு பதாதைகளைத் தாங்கிய வண்ணம் பேரணியாகச் சென்றனர். இப்பேரணியில் வவுனியா மாவட்ட சமூக ஆர்வலர்கள் , தொழிலாளர்கள் , புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.அதன் பின்னர் கலாசார மண்டபத்தில் பொதுக்கூட்டமும் இடம்பெற்றது. புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வன்னி மாவட்ட செயலாளர் பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற மேதினப் பொதுக்கூட்டத்தில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் சோ.தேவராஜா, சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் தலைவர் பூ.சந்திரபத்மன், வீதி பராமரிப்பு தொழிலாளர் சங்கத்தின் தலைவர் க.மகேந்திரன் , இலங்கை தேசிய பொது ஊழியர் சங்கத்தின் வவுனியா இணைப்பாளர் ஆர்.சித்திரன், அரச மருத்துவ அதிகாரிகள் சங்க உப தலைவர் செ.மதுரகன் , மூத்த தொழிற்சங்கவாதி ஹென்றி மகேந்திரன், புதிய ஜன நாயக இளைஞர் முன்னணி சார்பாக செ.நந்தமோகன், தேசிய கலை இலக்கிய பேரவை சார்பாக எஸ்.டொன்போஸ்கோ ஆகியோர் கலந்து கொண்டிருந்தார்கள். (படங்கள்-பனிக்கன்குளம் செய்தியாளர்)










தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்டக்கிளையின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட மேதின நிகழ்வுகள் நேற்று பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சி முழங்காவில் விநாயகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்வின் முன்னதாக நாச்சிக்குடா சந்தியிலிருந்து தொழிலாளர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை சித்திரிக்கின்ற ஊர்திகளுடன் கூடிய பேரணியாக முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தைச் சென்றடைந்து அங்கு மேதின நிகழ்வுகள் நடைபெற்றன. (படங்கள்:-கண்டாவளை செய்தியாளர்)

# தமிழரின் பூர்வீக நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும்
# த.தே.கூட்டமைப்பின் மேதின பிரகடனத்தில் வலியுறுத்து

(கண்டாவளை)

இரணைதீவு உள்ளிட்ட தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை விடுவித்து அம் மக்கள் தொழில் செய்து சுய மாக வாழும் உரிமையை வழங்க வேண்டும் மற்றும் காணாமலாக்கப்பட்ட உழைப்பாளர்கள் தொடர்பில் நீதியான விசாரணை வேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மேதின பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மேதின நிகழ்வுகள் நேற்று பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சி முழங்காவில் பிரதேசத்தில் நடைபெற்றது.

இதன்போது, வெளியிடப்பட்ட மேதின பிரகடனத்தில் தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த இரணைதீவு முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும்.

இதேபோல கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி விவசாயப்பண்ணை, பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட மரமுந்திரிகைப்பண்ணை, தென்னந்தோட்டம் என்பன உள்ளடங்கலாக மூவாயிரம் ஏக்கர் நிலப்பரப்பு இன்னமும் விடுவிக்கப்படாது படையினர் வசமிருக்கின்றது. இவை விடுவிக்கப்பட்டு விவசாயிகள் தொழில் செய்து வாழ்கின்ற உரிமை உறுதிப்படுத்தப்படவேண்டும்.

காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் உரிய சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு காணாமலாக்கப்பட்ட உழைப்பாளர்களுக்கு நீதியான விசாரணை மேற்கொண்டு காணாமலாக்கப்பட்ட உழைப்பாளர்களை அவர்களது குடும்பங்களுடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

முன்பள்ளிகள் மற்றும் பாடசாலைகள்-ஆகியவற்றில் கல்விக்கொள்கைகள் மீது திட்டமிட்டு திணிக்கப்படுகின்ற இராணுவத் தலையீடுகள் நிறுத்தப்பட்டு கல்வித்திணைக்களத்தினால் சுயமாக நிர்வகிக்க இடமளிக்க வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தினால் சேதமடைந்து காணப்படுகின்ற பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் மற்றும் குறிஞ்சாத்தீவு , உப்பளம் ஆகிய கைத்தொழிற்சாலைகளை விடுவித்து உரிய முறையில் இயங்க வைத்து தொழில் வாய்ப்பற்றவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழுங்கவேண்டும்.

கடற்றொழில் பாதிக்கும் வகையில் மேற்கொள்ளப்படுகின்ற இந்திய இழுவைப் படகுகள் மற்றும் ஏனைய இழுவைப்படகுகளின் சட்ட விரோதத் தொழில்கள் நிறுத்தப்படவேண்டும்.

உள்ளூர் உற்பத்தி விவசாயப்பொருட்களுக்கு விலை நிர்ணயம் பாதுகாக்கப்பட வேண்டும். இராணுவத்தினர் நடத்திவரும் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் தடைசெய்யப்பட வேண்டும் போன்ற விடயங்கள் மேதின பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)




# தபால் பெட்டி சேதம்; சிதறிக்கிடக்கும் தபால்கள்



(வவுனியா)

வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்த கல்லூரிக்கு அருகே காணப்படும் தபால் பெட்டியிலுள்ள தபால்கள் கடந்த சில நாட்களாக வீதியில் சிதறிக் காணப்படுவதாக அப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் குறித்த தபால் பெட்டி உக்கிய நிலையில் பூட்டுகள் எவையும் அற்று பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

தபால் பெட்டியில் 20 இற்கு மேற்பட்ட கடிதங்கள் காணப்படுகின்றன. ஆனால் அவைகள் கடந்த இரண்டு வாரத்திற்கு மேலாக தபால் ஊழியர்களினால் எடுத்துச் செல்லாமையினால் அவைகள் வீதியில் சிதறிக் காணப்படுகின்றன.

இவ்வாறான அசமந்த செயற்பாடுகளினால் பல பாடசாலை மாணவர்கள், வேலை தேடுபவர்களின் விண்ணப்பப் படிவங்கள் உரிய திகதிக்கு உரிய இடங்களுக்கு உரியவர்களின் கைகளில் செல்வதில்லை.

இதனால் கடிதங்களை அத் தபால் பெட்டியில் போட்டவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங் கொடுத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. (2)

## கண்டாவளை பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கண்டாவளை பிரதேச ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்களின் இணைத் தலைமையில் நடைபெறவுள்ளது என பிரதேச செயலாளர் ப.ஜெயராணி அறிவித்துள்ளார். (2)

## 19 கிராம அலுவலர் பிரிவுகளுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 19 கிராம அலுவலர் பிரிவுகளுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் பூநகரி பிரதேச செயலர் சி.ச. கிருஷ்ணேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண விளையாட்டு திணைக்களப் பணிப்பாளர் இ. குருபரன், கிளி மாவட்ட உதவி அரசாங்க அதிபர் த. பிருந்தாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். கௌரவ விருந்தினர்களாக பூநகரி கால்நடை வைத்திய அதிகாரி இ. சசிகரன், கிளிநொச்சி மாவட்ட உத்தியோகத்தர் எஸ். மோகனதாஸ், பூநகரி இலங்கை வங்கி முகாமையாளர் பி.டி. கிசியாந்தன் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த விளையாட்டுப் போட்டி கடந்த மாதம் ஒழுங்கு செய்யப்பட்டு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு நாளை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கண்டாவளை பிரதேச செயலக அணியும் பூநகரி பிரசே செயலக அணியும் உதைபந்தாட்டப் போட்டியில் மோதவுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (2-84)

# கரியாலை நாகபடுவான் குளத்தை புனரமைப்பதற்கு 200மில்.தேவை

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரியாலை நாகபடுவான் குளத்தைப் புனரமைப்பதற்கு 200 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட நிதி தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தாகவும் தற்போது 12 மில்லியன் ரூபா செலவில் சில அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவிருப்பதாகவும் நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட ஒன்பது பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான கரியாலை நாகபடுவான் குளத்திற்குட்பட்ட சுமார் ஆயிரத்து 505 ஏக்கர் நிலப்பரப்பில் 502 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிர்ச் செய்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த யுத்த காலத்தில் இக்குளத்தின் பல கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்படாது இருந்தன. அத்துடன், இக் குளத்திற்கு நீரைக்கொண்டு வருகின்ற ஆற்றுப்பகுதிகளில் யுத்த காலத்தில் போடப்பட்ட மண் அணைகள் அகற்றப்படாதிருப்பதனாலும் குளத்திற்கான நீர்வரத்து மிக குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் விவசாயிகள் காலபோகத்தில் உரிய பயிர்ச்செய்கை மேற்கொள்ளமுடியாமலும் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளமுடியாமலும் காணப்படுகின்றனர்.

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக இடதுகரை, வலதுகரை அணைக்கட்டுக்கள் மற்றும் ஏனைய பகுதிகளில் புனரமைக்கப்படாது காணப்படுகின்றன. எனவே இக்குளத்தை புனரமைத்துத் தருமாறு இப்பகுதி விவசாயிகள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் நீர்ப்பாசனத்திணைக்களம் குறித்த குளத்தை புனரமைப்பதற்கு கிட்டத்தட்ட 200 மில்லியன் ரூபா நிதி தேவையென மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இவ்வருடம் 12 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்றிருக்கின்றது.

இந்த நிதி மூலம் சில அபிவிருத்தி வேலைகள் இந்த மாதம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (2-315)




# டிப்போச்சந்திக்கு சுற்றுவட்டம் அமைத்து மின்விளக்குகளைப் பொருத்துங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி டிப்போசந்தியில் சுற்று வட்டம் அமைக்கப்படாமை மற்றும் மின்விளக்குகள் பொருத்தப்படாமையினால் விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி நகரத்தில் ஏ-9 வீதியிலிருந்து இரத்தினபுரம், திருவையாறு, வட்டக்கச்சி ஆகிய பிரதேசங்களுக்கும் கிளிநொச்சி மேற்குப் பிரதேசங்களுக்கான போக்குவரத்து வீதியாகவும் காணப்படுகின்ற கனகபுரம் வீதி என்பவற்றை ஒன்று சேர்க்கின்ற டிப்போச் சந்தியை அன்றாடம் பல்லாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.


இந்நிலையில் குறித்த பகுதியில் சுற்று வட்டம் ஒன்று அமைக்கப்படாது காணப்படுவதனால் விபத்துக்கள் ஏற்படுகின்ற அபாய நிலை காணப்படுகின்றது.

அதேவேளை குறித்த பிரதேசத்தில் மின்விளக்குகள் பொருத்தப்படாமையினால் இருள் சூழ்கியே காணப்படுகின்றது.

இவ்வாறு காணப்படுகின்ற டிப்போச்சந்திக்கு சுற்றுவட்டம் ஒன்றினை அமைக்குமாறும் வீதி மின்விளக்குகளை பொருத்துமாறும் பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன.

இதேவேளை கிளிநொச்சி டிப்போச சந்தியில் சுற்று வட்டம் அமைக்க வேண்டியதன் முக்கியத்துவம் மற்றும் கரடிப்போக்குச் சந்திக்கும் டிப்போச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் முடக்குத்திரும்பல் அமைக்கப்பட வேண்டுமெனவும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கடந்த ஆண்டிலே சம்பந்தப்பட்ட திணைக்களம் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கும் கடிதங்களை அனுப்பியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (2-315)

# ஸ்மாட் வகுப்பறை திறப்பும் கணனித்தொகுதி கையளிப்பும்



(பளிக்கன்குளம்)

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் விசேட நிதியொதுக்கீட்டின் மூலம் கிளி. இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் ஏற்படுத்தப்பட்ட நவீன வசதி வாய்ப்புக்கள் கொண்ட மாணவர்களுக்கான ஸ்மாட் வகுப்பறைகள் திறப்பு விழாவும் கணனித்தொகுதிகள் கையளிக்கும் நிகழ்வும் அண்மையில் காலை 9 மணிக்கு மேற்படி வித்தியாலய அதிபர் ம.கிறிஸ்ரி லெனாட்மனுவல் தலைமையில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் சிறப்பு விருந்தினராக கரைச்சிக் கோட்டக்கல்வி அதிகாரி அ.அமிர்தலிங்கம், கௌரவ விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் கே.குமரனும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

இந்நிகழ்வின் போது இவ்வித்தியாலயத்தில் தரம்-3 இல் கல்வி கற்கும் மாணவர்களது பெற்றோர்களின் நிதிப் பங்களிப்பில் ஒரு இலட்சம்ரூபா பெறுமதியான மேலைத்தேய இசைக் கருவிகளடங்கிய பாண்ட் வாத்தியத் தொகுதியும் அதிபரிடம் கையளிக்கப்பட்டிருந்தன.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு நவீன வசதிகள் கொண்ட மாணவர்களுக்கான ஸ்மாட் வகுப்பறைகளைத் திறந்து வைத்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், தமிழர்களாகிய எம்மீது பொருளாதாரத் தடைகள், போக்குவரத்துத் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்த யுத்த காலங்களில் பல்வேறுபட்ட வளப்பற்றாக்குறைகளுக்குள்ளும் கல்வி கற்று முன்னுக்கு வந்தவர்களாக எமது மாணவர்கள் காணப்படுகின்றார்கள்.

இந்நிலையில், தற்போதைய சூழ்நிலையில் இப்படியான நவீன வகுப்பறைகள் போன்ற வசதிகள் எமது மாணவர்களுக்கும் கிடைக்கின்றன. இவற்றை உரிய முறையில் பயன்படுத்தி எமது மாணவர்கள் திறமையாகக் கற்று எதிர்காலத்தில் எமது இனத்தின் தனித்துவத்தைப் பேணி நல்ல தலைவர்களாக, சிறந்த துறைசார் வல்லுநர்களாக மிளிர வேண்டும். அதற்காக நாம் எம்மாலான உதவிகளைத் தொடர்ந்தும் செய்வோம் என்றார். (2-28)

# மக்கள் நலன் சார்ந்த பணிகளை முன்னெடுத்துச் செல்ல பாடுபடுங்கள்

## டக்ளஸ் எம்.பி. தெரிவிப்பு



(கிளிநொச்சி)

எமக்குக் கிடைக்கப்பெற்ற வாய்ப்புக்களை பயன்படுத்தி கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலத்தில் சாதித்துக் காட்டிய மக்கள் நலன் சார்ந்த பணிகளை போன்று தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல அயராது பாடுபடுங்கள். அதற்கான அனைத்து முயற்சிகளையும் பெற்றுத்தர நான் தயாராகவே இருக்கின்றேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.


ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் ஒன்றை நேற்றையதினம் மேற்கொண்டிருந்தார். இதன்போதே கட்சியின் குறித்த மாவட்ட நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுடனான சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், நாம் தூரநோக்குள்ள மக்கள் நலன் சார் திட்டங்களை முன்னிறுத்தியே எமது மக்கள் பணிகளை முன்னெடுத்து செயற்படுத்தி வருகின்றோம். எமக்கு கிடைக்கப்பெற்றிருந்த குறைந்தளவான அரசியல் பலத்தைக்கொண்டு தான் நாம் அந்தந்த அரசுகளுடன் மேற்கொண்ட இணக்க அரசியலினூடாக இப்பகுதியின் பல்வேறுபட்ட அபிவிருத்திகளை செய்து காட்டியிருக்கின்றோம்.

தற்போது அவ்வாறான அரசியல் பலம் எம்மிடம் குறைந்தளவாக இருந்தாலும் எமது அனுபவங்களையும் கடந்தகால வரலாற்று படிப்பினைகளையும் கொண்டு எம்மால் தொடர்ந்தும் இப்பகுதி மக்களின் நலன்சார் தேவைகளை முன்னெடுத்து செல்லமுடியும்.

இதன் போது கட்சியின் தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம், கட்சியின் கிளிநொச்சி மாவட்ட நிர்வாகச் செயலாளரும் வடமாகாணசபை உறுப்பினருமான வை.தவநாதன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர். (2)

# பெறுமதிமிக்க முதிரை மரக்குற்றிகள் சிக்கின; சந்தேகத்தில் 7பேர் கைது!



(கண்டாவளை)

கிளிநொச்சி பொலிஸாரால் பெறுமதி மிக்க முதிரை மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதி பொலிஸ்மா அதிபரினால் நியமிக்கப்பட்ட விசேட மது ஒழிப்பு பொலிஸ் குழுவினரின் விசேட நடவடிக்கைக்கமைய குறித்த மரக்குற்றிகள் நேற்று முன்தினம் நள்ளிரவு மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து கிளிநொச்சி கட்டைக்காடு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது குறித்த மரக்குற்றிகளை ஏற்றிப் பயணித்த உழவு இயந்திரம் அதற்கு வழிகாட்டியாக இருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றி முதல் செய்யப்பட்டதுடன், அவற்றை செலுத்திய 7 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் விசாரணைகளைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வெவிக்கன்ன குறித்த நடவடிக்கையில் மீட்கப்பட்டவற்றை நேற்று காலை பார்வையிட்டார். (2-315)

# இலவங்குடா, காக்கைதீவில் வெளிச்சவீடுகளை அமையுங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி கிராஞ்சிப் பிரதேசத்திற்குட்பட்ட இலவங்குடா, காக்கைதீவு ஆகிய பகுதிகளில் வெளிச்சவீடுகளை அமைத்துத்தருமாறு இப்பகுதி கடற்றொழிலாளர்கள் கோரியுள்ளனர்.

பூநகரிப் பிரதேசத்திற்குட்பட்ட கிராஞ்சி கடற்றொழிலாளர்கள் ஆழ்கடற்றொழிலுக்குச் சென்று கரை திரும்புவதில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த இடர்பாடுகளை தவிர்க்கும் முகமாக கிராஞ்சி கடற்றொழில் எல்லைக்குட்பட்ட இலவங்குடா, காக்கைதீவு ஆகிய பகுதிகளில் வெளிச்சவீடுகளை அமைத்துத்தருமாறு மீனவர்கள் கோரியுள்ளனர்.

குறித்த கோரிக்கையானது தொடர்ந்து முன்வைக்கப்பட்டுவருகின்ற போதும் இதுவரை வெளிச்சவீடுகள் அமைக்கப்படவில்லை என பிரதேச மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

# எல்லா ஆசிரியர்களும் பாடசாலையின் வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரியர் ஆகிவிடலாமா?

பாடசாலைகளில் ஒவ்வொரு பாடங்களிலும் மாணவர்கள் முறைப்படுத்தப்பட்ட வகையில் தேர்ச்சியினைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்துறை சார்ந்து தேர்ச்சி பெற்றவர்களை நியமிப்பது பொருத்தமானது. அந்த வகையில் தற்காலத்தில் பெரும்பாலான பாடசாலைகளில் மேற்படி விடயம் பூர்த்தி செய்யப்பட்டாலும், வடமாகாணத்தின் இன்னும் பல பாடசாலைகளில் பொருத்தமான பாட ஆசிரியருக்கு பற்றாக்குறையும், அதற்கு நேர்எதிராகச் சில நகரப் பாடசாலைகளில் ஆசிரியர் தேக்கநிலையும் காணப்படுவது பலராலும் அறியப்பட்ட உண்மையாகவிருக்கின்றது.

அதேவேளை ஆசிரியர் பற்றாக்குறையுள்ள பல பாடசாலைகளில் அங்கு கடமையாற்றுகின்ற ஆசிரியர்களில் சிலர் தங்களின் பாடத்துறைக்கு மேலதிகமாக பிள்ளைகளின் நலனைக் கருத்திற்கொண்டு செயற்படுவதுடன், மாணவர்களின் சிறந்த பெறுபேறுகளுக்கும் வித்திட்டுள்ளமை பாராட்டிற்குரியது. இதற்கு வடமாகாணத்தின் பல பாடசாலைகளில் பல ஆசிரியர்களை அடையாளப்படுத்திக் காட்டலாம். ஏனெனில் பற்றாக்குறையுள்ள பகுதிகளில் வளங்களை உச்சப்பயன்பாட்டில் பேணுவது மனிதனுக்கேயுரித்தான பண்பாகக் கொண்டாலும், அதனைப் பொருத்தமாகப் பயன்படுத்துவதில் பாடசாலையின் தலைமையின் செல்வாக்கு அபரிமிதமானது.

அண்மைக்காலங்களில் பாடங்களுக்கப்பால் பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், உளநல மேம்பாடு,பொருத்தமான பாதுகாப்பைப் பெற்றுக் கொடுத்தலுக்குமேதுவாக பாடசாலைகளில் பல செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அவற்றுள்முதன்மையான, முக்கியமான இடத்தை வகிப்பது வழிகாட்டலும்-ஆலோசனையும்(Guidance & Counselling) சேவையாகும்.

வழிகாட்டலும் ஆலோசனைக்கான நியமனம் என்றாலேபிரச்சினை என்றதொரு தோற்றப்பாட்டை வடபுலத்தில் ஏற்படுத்தி காலத்திற்குக் காலம் பலர் தோன்றி, தமது சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்து மறைந்து போகின்றனர். இவர்களை நாமும் மன்னித்து, மறந்து விடுகின்றோம். ஆனால் இந்நிகழ்வுகள் காலத்திற்குக் காலம் பல எதிர்பார்ப்புக்களோடு கல்வியைத் தொடர்கின்ற எமது மாணவர்களின் மனங்களில் பல்வேறு விதமான மாற்றுச் சிந்தனைகளை விதைப்பதை யாரும் உணர்ந்து கொள்வதில்லை.

அண்மையில் வழிகாட்டல்-ஆலோசனை ஆசிரியர் பட்டதாரி நியமனம் தொடர்பாக உள்வாங்கப்பட வேண்டிய பாடச்சேர்மானங்களில் சரியான முடிவைப் பெற்றுக் கொள்வதில் புலமைசார்ந்தோர் காட்டிய அதீத அக்கறை, இன்று அந்நியமனத்திற்கான விண்ணப்பம் கோரலையே நிறுத்தி வைத்திருக்கின்றது. தன்னோடு ஒன்றாக படித்த ஏனைய பாடத்துறை சார்ந்தவர்கள் போட்டிப் பரீட்சைக்காகத் தயார்படுத்திக் கொண்டிருக்க உளவியலைப் பாடமாகக் கற்ற எம்பிள்ளைகள் காத்திருந்தார்கள், காத்திருக்கிறார்கள். தொடர்ந்தும் காத்திருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படப்போகும் நிலையும் இப்போது உருவாக்கப்பட்டிருக்கிறது.

அதுதான் எதிர்வரும் 02.05.2018இல் நடைபெறவிருக்கின்ற "வேறு வகையான பாடத்தினை நியமனமாகக் கொண்ட ஆசிரியர்களை வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்களாக மாற்றம் செய்வதற்குத் தகைமைகளைப் பரிசீலிப்பதற்கான நேர்முகத் தேர்வு"

ஏனைய பாடங்களைப் பொறுத்த வரையில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுமிடத்து வேறுபாடங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் அதனைக் கற்பிப்பதும் குறித்த பாடத்திற்கான நியமனத்தில் வெற்றிடம் நிரப்பப்படும்போது அதிலிருந்து விலகுவதும் யதார்த்தமானது. அரச நிர்வாகத்தில் கூட அனுபவ அடிப்படையில் ஒருவர் எவ்வளவு காலம் சேவையாற்றினாலும் குறித்த பிரிவில் ஒருவர் சித்தியடைந்து வருமிடத்து அவருக்கே அந்த இடம் ஒதுக்கப்படுகின்றது. ஆனால்வழிகாட்டல்ஆலோசனைப்பிரிவில் மட்டும் இது எதிர்மாறாக நடைபெறுவது வேடிக்கையாகவுள்ளது.

1980களின் பின்னர் தமிழர் பகுதிகளில் உளவள ஆற்றுப்படுத்தல் சேவையின் தேவை உணரப்பட்ட போதிலும், 2000 ஆண்டின் பின்னரே அது பாடசாலைகளுக்குள் மெல்ல நுழைந்து, இன்று எழுந்து நிற்க முயலுகின்றது. குறிப்பாக வடக்கு-கிழக்கைப் பொறுத்த வரையில் 2002இல் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் (GIZ,Unicef) வசதிப்படுத்தலுடன், ஒவ்வொரு கல்வி வலயங்களிலும் எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களை உள்வாங்கி பல கட்டங்களாகப் பயிற்சிகளை வழங்கிநட்புதவியாளர் (Befriends), வழிகாட்டல்-ஆலோசனை ஆசிரியர் (Guidance & Counselling Teacher), முதன்மைநிலை உளவளத் துணையாளர் (Master Counsellor) எனப் பலர் பயிற்றுவிக்கப்பட்டனர். இது அன்றைய காலத்தின் தேவையை நிறைவு செய்ய எடுக்கப்பட்ட முயற்சி என்ற வகையில் ஏற்றுக்கொண்டாலும் தொடர்ந்து அதே நிலைமையைக் கைக்கொள்வது பொருத்தமானதல்ல.



யுத்தத்தின் பாதிப்புக்கள் சமூகத்தில் மலிந்திருந்த வேளை, அவை பாடசாலைகளையும் காவுகொள்ள முற்பட்ட நிலையில், பாடசாலைகளின் நிர்வாகம் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. அத்தோடு, 2004 இறுதிப்பகுதியில் தென்னாசிய நாடுகளைப்பாதித்த சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் இதன் தேவையை இன்னும் அதிகப்படுத்தியது. இந்தக் காலகட்டத்திற்தான் குறிப்பாக 2005 காலப்பகுதியில் முதன் முறையாக வடக்கு-கிழக்கில் வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரியர் பட்டதாரி நியமனத்தில் உள்வாங்கப்பட்டனர். அக்கால கட்டத்தில் உளவியற்றுறை மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டமையால்மெய்யியல், சமூக வியற்றுறையினரும் உள்வாங்கப்பட்டனர்.

அதேவேளை 2006இன் ஆரம்பத்தில் வடகிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் வழிகாட்டல்-ஆலோசனை பட்டதாரி நியமன ஆசிரியர்களோடு வேறுபாடங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கும் சேர்த்து மற்றுமொரு புதிய நியமனக்கடிதம் வழங்கப்பட்டது. காலப்போக்கில் அக்கடிதம் செல்லுபடியற்றதாக்கப்பட அவர்களும் தத்தமது துறைகளோடு சேர்ந்து கொண்டமை இங்கு நினைவுகூரத்தக்கது.

இவ்வாசிரியர்களின் எண்ணிக்கையைப் பாடசாலைகளில் அதிகரிக்க வேண்டிய தேவையுணரப்பட்ட நிலையில் குறிப்பாக 2008,2010 காலப்பகுதிகளிலும் இவ்வாசிரியர் நியமனத்தில் உளவியற்றுறையினருடன் மெய்யியல், சமூகவியல் பாடப்பின்னணியும் கருத்திற் கொள்ளப்பட்டது. அத்துடன் எல்லாப் பாடசாலைகளிலும் ஒரு வழிகாட்டல்-ஆலோசனை ஆசிரியரை தேர்வுசெய்ய, விருப்பு அடிப்படையில் ஏனைய பாடங்களிலிருந்தும் பலர் உள்வாங்கப்பட்டனர்.

இதன் பிரகாரம் எல்லாப் பாடசாலைகளிலும் சிறு,சிறு பயிற்சிகளுடன் ஆசிரியர் காணப்பட்டாலும், அவர்களின் இடமாற்றத்தின் போது முதல் நியமனவகையே கருத்திற்கொள்ளப்படுவதனால் தற்போது வடக்கு மாகாணத்தில் இத்துறை சார்ந்த ஆசிரியர்களின் எண்ணிக்கையைப் சரியாகப் பேணமுடியாத நிலை காணப்படுகின்றது.

அதாவது எப்போது யார் வேண்டுமானாலும் இத்துறை சார்ந்து உள்நுழையவோ-வெளியேற்வோ எவ்வித தடங்கலுமில்லை. மேலும் இந்த ஆசிரியர்கள் பாடசாலைகளில் 'சும்மாயிருப்பவர்கள்' என முத்திரை குத்தப்பட்டு நிர்வாகம் சார்ந்த பணிகளிலும் பலர் அமரத்தப்பட்டுள்ளனர்.

இந்த அடிப்படையிலேயே 2016 காலப்பகுதியில் இத்துறைக்கான பட்டதாரி ஆசிரியர் நியமனத்தில் உளவியல் பாடத்துறை சார்ந்தவர்கள் மட்டும் உள்வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி பொருத்த மானவர்கள் மட்டும் உள்வாங்கப்படுவதில் சிரத்தையெடுத்துக் கொண்டமை பாராட்டிற்குரியது.

எனினும் அண்மைக்கால அரசியல்சார் நடவடிக்கைகள், அமைச்சர்கள், அதிகாரிகள் தமது தூரநோக்கற்ற சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுக்க முற்பட்டமை, கல்வித்துறையில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அதாவது திடீர் இடமாற்றங்கள், திடீர்பதவியிறக்கம், திடீர் பதவியேற்றம் என்பன சில திடீர் கொள்கை வகுப்புக்களுக்கு வித்திட்டன. இந்த நிலைமை கல்விப்புலத்தின் பலபகுதிகளிலும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியது போல இத்துறைசார்ந்த ஆசிரியர் நியமனத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றதை உணர முடிகின்றது.

குறிப்பாக கடந்த ஆண்டில்(2017) இத்துறைசார் பட்டதாரி ஆசிரியர் நியமனத்திற்காக வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் உளவியலுடன் சமூகவியல் (sociology) மற்றும் சமூகப்பணி (Social work) ஆகிய பாடங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தமை இதனை உறுதி செய்வதாய் அமைகின்றது. இங்கு ஏனைய துறைசார்ந்து கற்ற மாணவர்களைப் புறந்தள்ளுவது நோக்கமல்ல. மாறாக இந்நியமனத்தில் குறித்த துறை சார்ந்த பின்புலமுள்ள தகுதியானவர்கள் கிடைக்கப் பெற வேண்டுமென்பதே முதன்மை நோக்கமாகவுள்ளது.

இவ்வாறு காலத்திற்கேற்ப மாறுபட்ட வகையில் உள்வாங்கப்படுகின்ற நியமனங்களுக்குப் பின்னால் அரசியலும், சமூகச்செல்வாக்கும், குறுகிய இலாபமும், தம்மைத் தக்க வைத்துக் கொள்ளுதலும் இல்லாமல் வேறு என்ன இருக்கமுடியும்.

நிலைமைகள் இவ்வாறிருக்கையில் "வேறு வகையான பாடத்தினை நியமனமாகக் கொண்ட ஆசிரியர்களை வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்களாக மாற்றம் செய்வதற்குத் தகைமைகளைப் பரிசீலிப்பதற்கான நேர்முகத் தேர்வு" நிலைமையை மேலும் மோசமடையச் செய்யும் செயற்பாடாகவே அமைந்துள்ளது.

உளவியல் தவிர்ந்த ஏனைய சமூகவிஞ்ஞானப் பாடங்களிலுள்ளவர்கள் இந்நியமனத்திற்கு பொருத்தப்பாடில்லாதவர்கள் என்று கூறியவர்கள் எவ்வாறு இந்த வேறு பாடத்திலுள்ளவர்களின் நியமனத்தை அனுமதிக்கிறார்கள். இது தூரநோக்கோடு பார்க்கப்படவேண்டிய விடயம்.

ஏனெனில் கல்விப்புலம் சார்ந்த தொழில்வாண்மைக் கற்கைகளில் அடிப்படை உளவியலறிவை எல்லோருமே பெறுகின்றனர். ஆனால் எல்லோரும் வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரியர் ஆகிவிடமுடியாது.

எனவே இந்நியமனம் தொடர்பான மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்பதுடன் இந்த ஆசிரியர்கள் பெற்றுக் கொண்ட பயிற்சிகளின் சேவைகளைப் பெற ஏதுவாக அவர்களுடைய நியமனங்களை மாற்றுவதற்கப்பால் அவர்களைக்குறித்த நியமனத்துக்கு மேலதிகமாக சேவையாற்றுகின்ற நட்புதவியாளர்களாக (Be-friends) நியமிப்பது பற்றிச் சிந்திப்பது பொருத்தமான விடயமாக அமையும்.

அதேவேளை இந் நியமனத்திலுள்ள ஆசிரியர்களின் நிலையும் கவனிக்கப்பட வேண்டியதாகவுள்ளது. தேசிய மட்டப்பயிற்சிகளிலும், முதன்மைப்பயிற்சிகளிலும் குறிப்பாக பட்டதாரி நியமனத்திலுள்ள வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புக்களிலும் வேறு பாடத்துறை சார்ந்தவர்கள் பயிற்றுவிப்பதுடன், ஏற்கனவே இந்நியமனத்திலுள்ள குறித்த நியமனம் சார்ந்த சிரேஸ்ர ஆசிரியர்கள் புறந்தள்ளப்படுவதும் சுட்டிக்காட்டத்தக்கது. இவற்றையெல்லாம் தொகுத்து நோக்குகின்ற போது

➢ பொருத்தமற்ற பாடத்துறை சார்ந்தவர்கள் இந்நியமனத்தில் உள்வாங்குவதைத் தவிர்க்க சேவைப் பிரமாணக் குறிப்பு, மற்றும் ஆட்சேர்ப்புத்திட்டம் என்பன முறையான மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு நிலையான இறுதி வடிவத்தைப் பெற ஆவன செய்ய வேண்டும்.

➢ பாடசாலைகளில் அண்மைக்காலமாக அதிகரித்துச் செல்கின்ற மாணவர்களின் பிறழ்வு நடத்தைகளைப் பாடசாலை மட்டத்திலேயே கையாள நிபுணத்துவம் மிக்க ஆசிரியர் குழாமை உருவாக்க வேண்டும்.

➢ பாடசாலைகளில் நிலவுகின்ற வழிகாட்டல்-ஆலோசனை ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு குறுக்கு வழிகளைக் கையாள்வதைத் தவிர்த்து, நீடித்த தீர்வாகிய பொருத்தமான பாடப் பின்புலமுள்ளவர்களை உள்வாங்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

➢ வேறுபாடத்திலுள்ளவர்கள் இந்நியமனத்திற்கு உள்வாங்குவதை முற்றாகத் தவிர்த்து நியமனக் கனவோடு காத்திருக்கின்ற, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நியமன ஆட்சேர்ப்பை விரைந்து நடை முறைப்படுத்தி உளவியற் பட்டதாரிகளுக்கான நியமனத்தை வழங்கப்பட வேண்டும்.

➢ ஏற்கனவே இந்நியமனத்திலுள்ள ஆசிரியர்களின் வாண்மைத்துவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் வாய்ப்புக்களை வழங்கவேண்டும். அவர்களுக்கான இடத்தை பொருத்தமற்றவர்களினால் நிரப்புவதைத் தவிர்க்க வேண்டும்.

போன்ற விடயங்கள் செயல்வடிவம் பெறுமிடத்து பாடசாலைகளில் மாணவர்களின் உளநலமும் இதன் மூலம் எமது சமூகத்தின் உளநலமும் நன்னிலையை அடைவதற்கான வழியேற்படும். எனவே இத்துறை சார்ந்து பணியாற்றக் கூடியவர்களே!

பொதுநலனோடு சிந்தித்து எமது சமூக உள நலனைக் காத்துக் கொள்ள வகைசெய்வோம்.

**பாதிக்கப்பட்ட உளவியல் பட்டதாரி மாணவர்கள்**

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## முல்லைத்தீவு மாவட்டம் செம்மலைப் பிரதேசத்தில் மூலிகைப் பரம்பலும் அதன் முக்கியத்துவமும்




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்


இலங்கையானது உலகளாவிய ரீதியில் ஒரு சிறிய தீவாக இருந்த போதிலும் இயற்கை வாழ்விடங்களில் மூலிகைப் பரம்பலை அதிகளவில் கொண்ட அழகிய நாடாகும். முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள செம்மலைப்பகுதியானது மூலிகைப் பரம்பலுக்கு பெயர் பெற்ற இடமாகும். இச் செம்மலைப்பிரதேசமானது கடலை அண்டிய பிரதேசமாகவும் காடுகளை அண்டியும் மூலிகைகளை கொண்ட குன்றுகள் போல் காட்சி அளிப்பது இதன் சிறப்பம்சமாகும்.


இந்த செம்மலைப் பிரதேசத்தில் மட்டும் 140 முக்கியமான மூலிகைகள் இனங்காணப்பட்டன. சித்த மருத்துவத்தைப் பொறுத்த மட்டில் பாரம்பரிய மருத்துவர்களும் சரி, பல்கலைக் கழக வைத்தியர்களும் சரி சித்த மருத்துகளைச் செய்யும் திறமையைக் கொண்டிருத்தல் அவசியமாகும். சித்த மருத்துவமானது இலங்கையிலும், இந்தியாவிலும் சிறந்து விளங்கினாலும் சித்த மருத்துகளைப் பொறுத்தமட்டில் பரராஜசேகரம், செகராஜசேகரம், இருபாலைச் செட்டியார் வைத்தியவிளக்கம் போன்ற இலங்கைச் சித்த மருத்துவ நூல்களில் கூறப்பட்டுள்ள மருந்துகளைத் தயாரிப்பதற்கு கூறப்பட்ட பல மூலிகைகள் இந்திய சித்த மருத்துவ நூல்களில் குறிப்பிடப்படாமல் இருப்பதுடன், அவ் அரிய மூலிகைகள் வடமாகாண காடுகள், புதர் காடுகளில் பரம்பிக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்த வகையைச் சார்ந்த மூலிகைகளில் முன்தொடரி, பின்தொடரி, செங்கத்தாரி, கோழியவரை, தவிட்டை, ஆனைத்தவிட்டை, மயிலடிக்குருந்து போன்ற முக்கிய மூலிகைகள் செம்மலைப் பிரதேசத்தில் பரம்பிக் காணப்படுகின்றன.

பொதுவாக இலங்கையில் சித்த மருத்துவத்தில் தயாரிக்கப்படும் கொதிக்கிரந்தி எண்ணெய், செவ்வரத்தம்பூ எண்ணெய், செங்கத்தாரி எண்ணெய் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இத் தைலங்களில் முன்தொடரிப்பட்டை, பின் தொடரிப்பட்டை, செங்கத்தாரிப் பட்டை, மயிலடிக்குருந்துப்பட்டை என்பன முக்கிய மூலப் பொருட்களாக உள்ளன.









சிறுபூனைக்காலி

செம்மலைப் பிரதேசத்தில் செம்மலை எனக் குறிப்பிட்ட இடத்தில் கோழியவரையானது இம்மலை முழுவதும் கொடியாக பரந்து காணப்படுகிறது குறிப்பிடத்தக்கது. வடமாகாணத்தில் கோழியவரைச் சாற்றிலிருந்து தயாரிக்கப்படும் கரப்பான் நோய்க்கு பயன்படும் கோழியவரைச் சாற்றெண்ணெய்யானது மிகவும் சிறப்பு வாய்ந்தது. இது Leyumirosae குடும்பத் தாவரமாகும். இதன் அவரை வடிவகாயில் புரதச்சத்து அதிகம் உள்ளது. இதனைக் காய்கறியாக சமைத்துச் சாப்பிடலாம்.

மேலும் இது செருமலை எனப்பெயர் பெறக்காரணம் இங்கு பொன்னாவாக மரவீகள் அதிகம் இருந்ததாக இருக்கலாம். அதன் பூக்கள் செம்மஞ்சள் நிறமாக பூத்துக் காணப்பட்டு இருக்கலாம். ஆனால் இன்று பொன்னாவாக இப்பகுதியில் அருகி அழிந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. மற்றும் இங்கு சிறுபூனைக்காலி எனப்படும் ஏறுகொடித் தாவரம் அதிகளவில் பரம்பிக் காணப்படுகிறது. சிறுபூனைக்காலி இலையின் குளிர்ந்த ஊறல் நீர்க் கசாயமானது நீரிழிவைக் கட்டுப்படுத்தக் கூடியது.

பரராஜசேகரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறிவு நெறில் பயன்படுத்தும் பற்றில் (Pacltice) தவிட்டை, ஆனைத்த விட்டையின் இலையும், விண்ணாவீக்கின் இலையும், பட்டையும் சேர்கின்றன. இம்மலைப் பிரதேசத்தில் இரு தவிட்டை இனங்களும்பரம்பிக்காணப்படுகின்றன. களாப்பெருஞ்செடியும் செம்மலைக் குத்துக்காட்டில் காணப்படுகிறது. களாக்காயை ஊறுகாய் செய்து பயன்படுத்தினால் சுவையின்மை நீங்கி பசியை உண்டாக்கி குடலைப் பலப்படுத்தும். களாப் பூவிற்கு கண்களில் பூ விழுந்திருப்பதைப்போக்கும்தன்மை உண்டு. களாப் பழங்களைச் சாப்பிட்டுவர இரைப்பைக்கு பலம் உண்டாகும்.

செம்மலைப் பிரதேசத்தில் ராகதாள எனப்படும் சப்பாத்திக்கள்ளி இனமும் பரவலாகக் காணப்படுகின்றது. வாதநோய் கூட்டங்களுக்கும் நஞ்சுகளை நீக்கவும் சிறந்த ஒரு மூலிகையாகும், இந்த நாகதாளிப் பழமானது சாப்பிட மிகவும் உகந்த பழமாகும். நிறைந்த உயிர்ச் சத்துக்களைக் கொண்டது. இதன் பழங்களைச் சேகரித்து மெல்லிய தணலில் வேகவைத்து பிழிந்த சாற்றை மணப்பாகு செய்து 10ml காலை, மாலை கொடுக்க வெட்டை, இருமல் என்பன நீங்கும். இது ஒரு வறள் நிலத் தாவரமாகும்.

இச் செம்மலைக் காட்டுப் பிரதேசத்தில் முரலிப் பழமரங்கள் காணப்படுகின்றன. இது ஒரு காயகற்ப மூலிகையாகும். இதன் பழங்களில் இரும்புச்சத்து, உயிர்ச்சத்து A என்பன காணப்படுகின்றன. இது புற்றுநோய் வராமல் தடுக்கும். இப் பிரதேசத்தில் ஏழுமுள் எனப்படும் சிறிய மர இனத்தைச் சேர்ந்த மூலிகை பரம்பிக் காணப்படுகிறது. இதன் முள்ளும், பட்டைகளும் சித்த மருத்துவத்தில் கூறப்படும் தைலங்களில் சேர்கின்றன.

இப் பிரதேசத்தில் கடுஞ்செம்மையானது பரம்பிக் காணப்படுகிறது. இது Leguminosae குடும்பத்தைச் சார்ந்தது. இதன் இலைச்சாறானது கடும் செம்மைத் தைலத்தில் சேர்கிறது. இத் தைலமானது சித்த மருத்துவத்தில் கூறப்பட்டுள்ள வடமாகாணத்திற்குரிய சிறப்புமிக்க தைலமாகும்.இத்தைலம் தலைக்குத்துதல், நீரேற்றம், பீலிசம், மூக்குநீர் பாய்தல் போன்ற நோய்களுக்கு வாரம் ஓர் முறை தேய்த்து ஸ்ராமை செய்யப்படும். ஆயுள்வேத மருத்துவத்தில் தினமும் வைக்கப்படும் தைலங்கள் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் சித்த மருத்துவத்தில் அவ்வாறு தினமும் வைக்கும் தைலங்கள் பற்றி சிறப்பாக கூறப்படவில்லை. சித்த மருத்துவத்தில் பல மூலிகைகளின் இலைச்சாறு, பட்டைச் சாறு என்பன சேர்த்துத்தைலங்கள் தயாரிக்கப்படுகின்றன.

செம்மலைக்குரிய பொன்னவாக இனமானது ஆவரசைப் போன்று இரத்தத்தில் சீனியின் அளவைக் கட்டுப்படுத்தும். இதன் இலையை கீரை போல சமைத்துச் சாப்பிடலாம். இதில் இரும்புச் சத்து, கல்சியம், பொஸ்பரசு என்பன நிறைந்துள்ளன. இதன் பூவை பொரித்து சாப்பிடும் போது எண்ணெயானது உடலில் அதிகளவில் சேர்வது தவிர்க்கப்படுகிறது. கரரிலைகளில் பயன்படும் காட்டு நிலவேம்பு, மிளகரணை என்பன இங்கு பரவலாகக் காணப்படுகிறது. காட்டு நிலவேம்பானது கரக்குடிநீர்களில் முழுப் பகுதியும் சேர்கிறது. இது மிகவும் கைப்புச் சுவை வாய்ந்தது. மிளகரணையின் வேர்ப்பட்டையை குடிநீரிட்டுக் கொடுக்க மலேரியா கரம் தணியும், அதற்கு காரணம் இதன் வேர்ப்பட்டையிலுள்ள வேதியல் பொருட்களாகும்.

இம்மலைப் பகுதியில் கற்றாளை, தாழை போன்றவையும் காணப்படுகின்றன. கற்றாளையின் சோற்றை எடுத்து பலமுறை நீரில் கழுவி முகத்திற்கும் பூசலாம். மற்றும் கற்றாளை யூஸானது உடலுக்கு குளிர்ச்சியை தரும். இதன் சோற்றை எடுத்து எண்ணெயில் இட்டுகாய்ச்சி தலைக்குத் தேய்த்து தலை முழுகிவர தலைமயிர் வளரும், நித்திரை உண்டாகும். தாழையின் பிஞ்சானது தாழங்காய் எண்ணெய்யின் முக்கிய மூலப்பொருள் ஆகும். இத் தைலமானது வாதநோய்களுக்கும், பாரிசவாத நோய்களுக்கும் சிறந்த பலனைத் தரும்.

செம்மலைப் பிரதேசத்தில் மஞ்சள் நிறப்பூக்களைக் கொண்ட கருவேலமரவீகள் பரம்பிக் காணப்படுகின்றன. கருவேலமரத்தின் பிஞ்சுகளின் சாற்றில் இரும்புச்சத்து மிகையாக காணப்படுகின்றது. இச்சாற்றினால் அயக்கறுப்பு போன்ற பல மருந்துகள் தயாரிக்கப்படுகின்றது. இது பொரும்பாட்டு நோய்க்கு சிறந்த பலனைத் தரும். அத்துடன் இதன் பட்டை பொரும்பாட்டிற்கு பயன்படும் குடிநீரில் முக்கிய மூலப் பொருட்களில் ஒன்றாகும். கருவேலமரமானது மாசி மாதத்திலே காய்க்கத் தொடங்கும்.

வெப்பம் அதிகரிக்கும் காலத்தில் பித்தம் தன்னிலையில் பிறழ்சிடி அடைவதால் பித்த சம்பந்தமான நோய்கள் இக்காலத்தில் ஏற்படுகிறது. பருவகாலங்களுடன் எமக்கு ஏற்படும் நோய்களுக்கு தொடர்பு உள்ளது போல அந்நோய்களை போக்குவதற்கும் அக்காலத்தில் பல மூலிகைகள் பூத்துக், காய்த்து அந்நோய்களைப் போக்க உதவுகின்றன. கருவேல மரத்தின் பட்டையை சிறிய துண்டுகளாக வெட்டிப் பொடித்து பல்துலக்கி வர பல்லாட்டம், இரத்தம் வடிதல் என்பன நீங்கும். கருவேலன் குச்சி பல் துலக்க உதவும். இதனால் பல்லுறுதியாகும். "ஆலும் வேலும் பல்லுக்கு றுதி"என்பதை கவனிக்க.

செம்மலைப்பிரதேசமானது காடுகள், புதர்காடுகள், கடற்கரை போன்ற பல நிலங்களையும் அழகான மூலிகைகளின் பரம்பலையும் கொண்டுகாணப்படுகிறது. இவ்வாறான கள ஆய்வுகளின் மூலம் அங்கு பரம்பிக் காணப்படும் மூலிகைகளை அடையாளம் காணபதோடு அவற்றை அவற்றின் இயற்கை சூழலில் அழியாமல் பேணிப்பாதுகாக்கவும்வேண்டும். இம் மூலிகைகளின் பரம்பலை மேலும் அழிவடையாது தடுப்பதற்கான செயற்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

# குருநாகலில் கோர விபத்து 25 பேர் காயம்



(குருநாகல்)

குருநாகல்-வந்துராகல பகுதியில் தனியாருக்குச் சொந்தமான பயணிகள் பேருந்தொன்று எரிபொருள் ஏற்றி வந்த வாகனத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானதில் சுமார் 25 பயணிகள் காயமடைந்ததாக குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பேருந்தே நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 11.30 மணியளவில் இவ்வாறு விபத்துக்குள்ளானது.

காயமடைந்தவர்கள் குருநாகல் போதனா வைத்தியசாலையில் உடனடியாக அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில் ஐவர் படுகாயமடைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எரிபொருள் ஏற்றிவந்த வாகனத்துடன் மோதுண்டமையால் குறித்த பேருந்து சேதமடைந்துள்ள போதும், இரண்டு வாகனங்களும் தீப்பிடிக்காமல் போனமை குறிப்பிடத்தக்கது.

குருநாகல் பொலிஸார் இவ் விபத்து பற்றிய மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாரதம்

# ஜனாதிபதி விருது வழங்கலில் தமிழ்மொழி புறக்கணிப்பு!

## தமிழகத் தலைவர்கள் கண்டனம்

(சென்னை)

ஜனாதிபதி விருது மற்றும் மஹரிஷி பத்ராயன் வியாஸ் சம்மான் விருது வழங்குவதில், தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டிருப்பது கடும் கண்டனத்திற்குரியது" என்று மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

2018ஆம் ஆண்டுக்கான, ஜனாதிபதி விருது மற்றும் மஹரிஷி பத்ராயன் வியாஸ் சம்மான் விருது வழங்குவதில், இந்திய திருநாட்டின் மூத்த மொழியும், திராவிட மொழிகளுக்கு எல்லாம் தாய்மொழியும், உயர்தனிச் செம்மொழியுமான தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டிருப்பதற்கு, தி.மு.க. சார்பில் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். அண்மையில் மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் இந்த விருதுகளுக்கான பெயர்களை பரிந்துரைக்கும்படி கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பிய கடிதத்தில் சமஸ்கிருதம், பாலி பிராகிருதம், அரபி, பாரசீகம், செம்மொழி அந்தஸ்து பெற்ற ஒடியா, கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் சிறந்த அறிஞர்களுக்கு விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டு இருந்தாலும், அதில் செம்மொழி அந்தஸ்து பெற்ற தமிழ் இடம் பெறவில்லை என்பது, மத்திய பா.ஜ.க. அரசு தமிழ் மொழி மீது கொண்டுள்ள ஆழமான வெறுப்பையும், பாகுபாட்டு உணர்வையும் காட்டுகிறது.





தமிழ்மொழி மீது பற்றுள்ளவர்கள் போல, தமிழ்நாட்டில் உள்ள பா.ஜ.க. தலைவர்கள் வெறும் வார்த்தைகளால் கபட நாடகம் ஆடுகிறார்கள். பிரதமர் நரேந்திரமோடியோ, தமிழ் அழகான மொழி, பழைமையான மொழி, அந்த மொழியில் வணக்கம் மட்டுமே எனக்கு சொல்ல முடிகிறது என்று வருந்துகிறேன் என்றெல்லாம் பேசி, தமிழ்மொழி மீது தனக்கு பாசம் இருப்பது போன்று வஞ்சப் புகழ்ச்சி பேசுகிறார்.

ஆனால், இவையெல்லாம் தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றவே என்பது தமிழ் மொழியைப் புறக்கணிக்கும் மத்திய பா.ஜ.க. அரசின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் தெரிகிறது.

வழக்கம்போல், தமிழ் மொழிக்கு நேரும் அவமானம் குறித்தெல்லாம் கவலைப்படும் நிலையில், இங்குள்ள அ.தி.மு.க. அரசும் இல்லை அல்லது மத்திய பா.ஜ.க. அரசைத் தட்டிக் கேட்கும் நிலையில் அ.தி.மு.க. எம்.பிக்களும் இல்லை என்பது தமிழகத்தின் மிக மோசமான வாய்ப்பாக அமைந்துள்ளது வேதனையளிக்கிறது.

ஆகவே, 2018ஆம் ஆண்டிற்கான ஜனாதிபதி விருது மற்றும் மஹரிஷி பத்ராயன் வியாஸ் சம்மான் விருதுகளில் செம்மொழியாம் தமிழ் மொழியில் உள்ள சிறந்த அறிஞர்களுக்கும் விருது வழங்கும் நடவடிக்கைகளை மத்திய பா.ஜ.க. அரசு உடனடியாக எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய மனிதவள மேம் பாட்டுத் துறை அமைச்சகம் உடனடியாக தனது சுற்றறிக்கையை திருத்தி வெளியிட்டு, தமிழ்மொழியிலிருந்து சிறந்த அறிஞர்களையும் விருது வழங்குவதற்கு அனுப்பி வைக்க, அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் தாமதமின்றி உடனடியாக கடிதம் எழுத வேண்டும் என்றும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார். திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

மனிதவள மேம்பாட்டுத் துறை ஆண்டுதோறும் செம்மொழி தகுதி பெற்ற மொழிகளைச் சார்ந்த அறிஞர்களுக்கு ஜனாதிபதி விருது வழங்கி வருகிறது. இவ்வாண்டு அறிவிப்பில் தமிழ்சார்ந்த எவருக்கும் விருது வழங்கப்படவில்லை என்பது அதிர்ச்சிக்குரியது. தமிழ்நாட்டில் கால் பதிக்க முடியவில்லை என்ற கோபத்தில், இத்தகைய முடிவினை மத்திய பா.ஜ.க. அரசு எடுத்திருக்கிறதா?. தமிழர்களைச் சீண்டிப் பார்ப்பதில் மோடி அரசுக்கு அப்படி என்ன ஓர் ஆனந்தம்?. மத்திய அரசின் இந்தப் போக்கை மிகக் கடுமையாகக் கண்டிக்கிறோம்.

தமிழ்நாடு அரசு வழக்கம்போல ஆமாம் சாமி போடாமல், உடனடியாக மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்துடன் தொடர்புகொண்டு, தமிழுக்கும், தமிழர்களுக்கும் உரிய மரியாதை அங்கீகாரம் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார். (7)

## தண்ணீரில் விளக்கு எரிந்த அதிசயம்



நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அருகே தட்டான் குட்டையில் பிரசித்தி பெற்ற பச்சை தண்ணீர் மாரியம்மன் கோவில் உள்ளது. இக்கோவில் திருவிழா ஆண்டுதோறும் பங்குனி மாதம் சிறப்பாக நடைபெறும். இந்த திருவிழாவின் போது தண்ணீரில் கோவில் விளக்கை எரிய வைப்பது வழக்கம்.

இந்த ஆண்டு கோவில் திருவிழா கடந்த 28ஆம் திகதி பூச்சாட்டுதலுடன் தொடங்கியது. திருவிழாவை யொட்டி தண்ணீரில் விளக்கை எரிய வைக்க பூசாரிகள் கோவில் கிணற்றில் புனித நீராடி குடத்தில் தண்ணீரை எடுத்து வந்தனர்.

அப்போது அவர்கள் அம்மன் சாமி முன்பு சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்த விளக்கில் இருந்து எண்ணெய் முழுவதையும் வடித்து விட்டு கிணற்றில் இருந்து கொண்டு வந்த தண்ணீரை அந்த விளக்கில் ஊற்றினர்.

பின்னர் அந்த விளக்கில் தீபம் ஏற்றிய போது விளக்கு எண்ணெயில் எரிவது போல் தண்ணீரிலும் தீபம் சுடர் விட்டு எரிந்தது.

இந்த அதிசய காட்சியை திருவிழாவிற்கு வந்திருந்த ஏராளமான பக்தர்கள் கண்டு பக்தி பரவசம் அடைந்தனர். தண்ணீரில் அதிகாலையில் பற்ற வைக்கப்பட்ட விளக்கு சுமார் அரை மணி நேரத்திற்கும் மேல் எரிந்து பின்னர் அணைந்தது. அதன் பின்னர் எண்ணெயை கொண்டு விளக்கில் மீண்டும் தீபம் ஏற்றப்பட்டது.

தண்ணீரில் விளக்கு எரியும் இந்த அதிசயம் திருவிழா நடக்கும் நாள் அன்று மட்டுமே நடைபெறும். மற்ற நாட்களில் வழக்கம்போல் எண்ணெயை கொண்டு தான் விளக்கு எரிய வைக்கப்படும்.

இந்த திருவிழாவில் ராசிபுரம், தட்டான் குட்டை மும்பை சேலம் போன்ற இடங்களில் இருந்து பலர் கோவிலுக்கு வந்திருந்து அம்மனை தரிசித்தனர்.

இந்த அதிசய வழிபாடு குறித்து கோவில் பூசாரிகள் கூறியதாவது,

முன்னோர் காலத்தில் ஒரு முறை கோவில் விளக்கில் எண்ணெய் தீர்ந்து போனதாகவும் அப்போது கோவில் பூசாரி ஊர் தர்மகர்தாவிடம் அம்மனுக்கு விளக்கு வைக்க எண்ணெய் வாங்க பணம் வேண்டும் என்று கேட்டுள்ளார்.

அதற்கு அந்த தர்மகர்த்தா ஒருவித விரக்தியுடன் பணம் இல்லை என்றும் சக்தியுள்ள மாரியம்மன் தானே தண்ணீரை ஊற்றி பற்ற வை விளக்கு எரியும் என்றும் கூறியுள்ளார்.

அதே போல் கோவில் பூசாரிகள் தண்ணீர் ஊற்றி விளக்கை பற்ற வைத்தனர். அப்போது அம்மன் சாமி முன்பு பற்ற வைக்கப்பட்ட விளக்கு சுடர் விட்டு எரிந்துள்ளது; அப்போது தண்ணீரில் விளக்கு எரிந்த அதிசயத்தை பார்த்த கோவில் பூசாரிகளும் பொதுமக்களும் வியப்பில் ஆழ்ந்தனர்.

இதனால் அன்று முதல் இங்குள்ள மாரியம்மன் பச்சை தண்ணீர் மாரியம்மன் என்று பக்தர்களால் அழைக்கப்படுகிறார். (7)

## "ஜெ" மரணம்-சசிகலாவின் சகோதரர் திவாகரனுக்கு ஆணையம் சம்மன்



(சென்னை)

ஜெயலலிதா மரணம் குறித்து விசாரிக்க சசிகலாவின் சகோதரர் திவாகரன் நாளை மறுநாள் ஆணையத்தில் ஆஜராக வேண்டும் என்று சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.

ஜெயலலிதா மரணம் குறித்து சசிகலாவின் உறவினரான இளவரசியின் மகன் விவேக், மகள் கிருஷ்ணப்பிரியா, வைத்தியர் சிவக்குமார் ஆகியோரிடம் விசாரணை ஆணையம் ஏற்கனவே விசாரணை மேற்கொண்டது. இந்த நிலையில் சசிகலாவின் சகோதரர் திவாகரனுக்கு ஆணையம் சம்மன் அனுப்பி உள்ளது.

நாளை 3ஆம் திகதி காலை 10.30 மணிக்கு ஆணையத்தில் ஆஜராக வேண்டும் என்று ஆணையம் அவருக்கு உத்தரவிட்டுள்ளது. டி.டி.வி.தினகரன், திவாகரன் இடையே 'திடீர்' மோதல் ஏற்பட்டுள்ள நிலையில் திவாகரனுக்கு ஆணையம் சம்மன் அனுப்பி இருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

வைத்தியர் சிவக்குமார் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு மீண்டும் ஆஜராக ஆணையம் சம்மன் அனுப்பி உள்ளது. இவர் ஏற்கனவே இரு முறை ஆணையத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இந்திய வம்சாவளி கல்பனா ஒரு அமெரிக்க ஹீரோ

## ட்ரம்ப் புகழாரம்



(வோஷிங்டன்)

கல்பனா சாவ்லா ஒரு அமெரிக்க ஹீரோ என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் புகழாரம் சூட்டியுள்ளார்.

விண்வெளி ஆராய்ச்சிக்காகதன் வாழ்க்கையையே அர்ப்பணித்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கல்பனா சாவ்லா ஒரு அமெரிக்க ஹீரோ என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் புகழாரம் சூட்டியுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் மே மாதம், அமெரிக்க அரசினால் ஆசிய அமெரிக்க மற்றும் பசுபிக் தீவுவாசி பாரம்பரிய மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பிரகடன நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய ட்ரம்ப்,

# வெளிநாடு



# ஆப்கானில் கார்க்குண்டு வெடிப்பில் மதரசா பள்ளி மாணவர்கள் 11 பேர் பலி!

(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டின் தலிபான் பயங்கரவாதிகளின் ஆதிக்கம் மிகுந்த கந்தகார் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கார் குண்டு தாக்குதலில் மதரசாவைச் சேர்ந்த 11 மாணவர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் தலிபான் பயங்கரவாதிகளின் ஆதிக்கம் மிகுந்த கந்தகார் மாகாணத்தின் தமான் மாவட்டத்தில் திடீரென கார் வெடிகுண்டு வெடித்து சிதறியது. ரோமானிய படையினர் தங்கியிருந்த முகாமை நோக்கி நடத்தப்பட்ட தாக் குதலில் அருகிலிருந்த மதராசா பள்ளி வெகுவாக பாதிக்கப்பட்டது. இதில், 11 மதரசா மாணவர்கள்



பலியாகினர். மேலும், 5 ரோமானிய வீரர்கள் உட்பட 16 பேர் படுகாயமடைந்தனர்.

இதையடுத்து, அப்பகுதியில் பாதுகாப்பு வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்கள் வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காபூல் நகரில் உளவுத்துறை நிறுவனம் அருகே நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்பில் 29 பேர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சியாக நடத்தப்படும் வெடிகுண்டு தாக்குதல் நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (7)

# இரு பிள்ளைகளைக் கொன்று உடல்களை எரித்த தாய்



(மொஸ்கோ)

ரஷ்யாவில் இன்ஸ்டாகிராம் ஸ்டாராக வலம் வந்த இளம் தாயார் ஒருவர் தமது பிள்ளைகளை கழுத்தை நெரித்து கொன்று உடல்களை எரித்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சமூக வலைத்தளமான இன்ஸ்டாகிராமில் ரஷ்ய நாட்டவர்களில் மிகவும் பிரலமானவர்களில் ஒருவர் தான்27 வயதான ஹெலனா கரிமோன.

இவருக்கு 21,000 சந்தாதாரர்கள் உள்ளனர். இந்த நிலையில் இவர் தமது இரு பிள்ளைகளை கழுத்தை நெரித்து கொன்று அவர்களது உடல்களை எரித்துள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சம்பவத்தன்று தனது பிள்ளைகளான கதீஜா மற்றும் சுலைமான் ஆகிய இரு சிறுவர்களையும் கழுத்தை நெரித்து கொன்றுள்ளார்.

பின்னர் பெற்றோல் நிலையம் சென்று தேவையான எரிபொருளை வாங்கி வந்து, தனது வீட்டின் அரு காமையில் உள்ள வனப் பகுதிக்கு உடல்களை எடுத்துச் சென்று பிள்ளைகளின் உடலுக்கு நெருப்பு வைத்துள்ளார்.

இதனிடையே தாம் பிடிக்கப்படுவோம் என அஞ்சிய அவர் எரிந்து கட்டையாக கிடந்த உடல்களை எடுத்து வந்து கைவிடப்பட்ட ஒரு பாழடைந்த கட்டடத்தில் வைத்து மீண்டும் நெருப்பு வைத்துவிட்டு அங்கிருந்து தலைமறைவாகியுள்ளார்.

பாழடைந்த கட்டடத்தில் இருந்து புகை கிளம்புவதை பார்த்த தீயணைப்பு குழு வீரர் ஒருவர், உடனடியாக அப்பகுதிக்கு சென்று விசாரித்துள்ளார்.

அதில் பாதி எரிந்த நிலையில் உடல் பாகம் சிக்கியுள்ளது. தொடர்ந்து அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு சிறுவர்களின் எரிந்த உடல்களை மீட்டுள்ளனர்.

இந்த நிலையில் அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கமெராக்களை ஆய்வு செய்த பொலிஸார், அங்கு வந்து சென்ற வாகனம் ஒன்றின்பதிவுஎண்ணை வைத்து குறித்த இளம் தாயாரை கைது செய்துள்ளனர்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையில், தாம் நடத்தி வந்த தொழிலில் இழப்பு ஏற்பட்டதை அடுத்து வங்கிக் கடனை திருப்பி செலுத்த முடியாமல் போனதாக குறிப்பிட்டுள்ளார்.

மட்டுமின்றி தம்மால் தனது இரு பிள்ளைகளையும் உணவு, உடையின்றி பரிதவிப்புக்கு உள்ளாக்க முடியாது எனவும், அதனாலேயே கொலை செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஹெலனாவின் இந்த கொடுஞ்செயல் அவரது குடும்பத்தினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. (7)

# அல்ப்ஸ் மலையில் சூறாவளி! 6 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

(ஜெனிவா)

சுவிட்சர்லாந்தின் அல்ப்ஸ் மலையில் மோசமான வானிலையால் ஏற்பட்ட சூறாவளியில் சிக்கி மலையேற்ற வீரர்கள் உட்பட 6 பேர் உயிரிழந்தனர்.

சுவிட்சர்லாந்து நாட்டின் அல்ப்ஸ் மலையில் மலையேற்ற வீரர்கள் மற்றும் சாகச வீரர்கள் ஒரு குழுவாக பறந்து கொண்டிருந்தனர்.

அல்ப்ஸ் மலையில் தற்போது நிலவும் வானிலையால், பல்வேறு வெளிநாடுகளில் இருந்து சுற்றுலா பயணிகள் வந்து குவிகின்றனர்.

இந்நிலையில் அல்ப்ஸ் மலையில் இத்தாலி, பிரெஞ்சு மற்றும் ஜேர்மன் நாட்டை சேர்ந்தவர்கள் சிலர் பறந்து



செல்லும் சாகச விளையாட்டில் ஈடுபட்டனர்.

மேலும் சிலர் ஒரு குழுவாக மலையேறிக் கொண்டிருந்தனர். அப்போது மோசமான வானிலையால் சூறாவளி காற்று வீசியது. இதில் மலையேற்ற வீரர்கள் சிக்கிக் கொண்டனர்.

தகவல் அறிந்ததும் மீட்புக் குழுவினர் அங்கு விரைந்து வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். பனியில் சிக்கிய பறக்கும் வீரர்கள் மற்றும் மலையேற்ற குழுவை சார்ந்தவர்களை மீட்டனர். இதில் 6 பேர் பலியாகினர்.

மேலும் 5இற்கு மேற்பட்டோர் காயம் அடைந்தனர். அவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். மேலும் பலரை தேடும் பணியும் நடந்து வருகிறது. (7)



விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லாவை அமெரிக்க ஹீரோ எனக் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முதல் பெண் விண்வெளி வீராங்கனையான கல்பனா சாவ்லா விண்வெளி ஆராய்ச்சிக்காக தன் வாழ்க்கையையே அர்ப்பணித்துள்ளார்.

சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மற்றும் குழு பயணம் என விண்வெளி துறைக்கு எண்ணற்ற பணிகளை அவர் ஆற்றியுள்ளார்.

ஒரு நாள் விண்வெளி வீராங்கனையாக வேண்டும் என கனவு காணும் மில்லியன் கணக்கான அமெரிக்க பெண்களுக்கு சாவ்லாவின் தைரியமும், ஆர்வமும் உத்வேகம் அளிக்கிறது.

அவரது மறைவுக்கு பின்னர் நாசா விண்வெளி மையம் அவருக்கு விண்வெளி விமான பதக்கம் மற்றும் சேவை பதக்கங்களை அளித்து கௌரவித்தது.

கடந்த 2003ஆம் ஆண்டு விண்வெளி ஆராய்ச்சிக்காக கொலம்பியா விண்கலத்தில் 7 பேர் குழுவுடன் சென்ற கல்பனா சாவ்லா விண்கலம் வெடித்து உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# காவிரி மேலாண்மை வாரியம் தொடர்பில் இ.பி.எஸ், ஓ.பி.எஸ் ஆளுநருடன் பேச்சு

(சென்னை)

முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி நேற்று ஆளுநர் பண்வாரிலால் புரோகித்தை சந்தித்து பேச்சு நடத்தினர்.

காவிரி நீரை பகிர்ந்து கொள்வது தொடர்பாக 'ஸ்கீம்' ஒன்றை 6 வாரங்களுக்குள் ஏற்படுத்துமாறு கடந்த பெப்ரவரி 16ஆம் திகதி மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆனால் இந்த 'ஸ்கீம்' (வரைவு செயற்றிட்டம்) என்பது காவிரி மேலாண்மை வாரியம்தான் என்பதால், அதை விரைவில் அமைக்குமாறு தமிழக அரசு வற்புறுத்தி வருகிறது.

ஆனால் 6 வார காலக்கெடுவுக்குள் காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்காததால் மத்திய அரசுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் தமிழக அரசு நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்தது.

அதேசமயம், 'ஸ்கீம்' என்றால் என்ன? என்று விளக்கம் கேட்டு மத்திய அரசும் ஒரு மனுவை தாக்கல் செய்தது.

இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், வருகிற 3ஆம் திகதிக்குள் (வியாழக்கிழமை) வரைவு செயல் திட்ட அறிக்கையை தாக்கல் செய்யுமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட்டது.

மேலும், இந்த வழக்கு 3ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு வர இருக்கிறது.

இந்த நிலையில், இந்த பிரச்சினை தொடர்பாக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி நேற்று முன்தினம் ஆளுநர் பன்வாரிலால் புரோகித்தை சந்தித்து பேசினார்.

சென்னை கிண்டி ஆளுநர் மாளிகையில் உள்ள தர்பார் மண்டபத்தில், தமிழக உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவராக சோ.அய்யர் இரண்டாவது முறையாக பதவி ஏற்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் நிகழ்ச்சி முடிந்ததும், தர்பார் மண்டபத்துக்கு பின்புறத்தில் உள்ள அறையில் பண்வாரிலால் புரோகித்தை சந்தித்து பேசினார்கள். இந்த சந்திப்பு 20 நிமிடம் நடந்தது.

அப்போது காவிரி பிரச்சினை குறித்தும், அது தொடர்பாக தமிழகத்தில் நடைபெற்று வரும் போராட்டங்கள் தொடர்பாகவும் ஆளுநருடன் அவர்கள் முக்கிய ஆலோசனை நடத்தியதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

காவிரி பிரச்சினை தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றில் நாளை விசாரணைக்கு வர இருக்கும் நிலையில், காவிரி மேலாண்மை வாரியத்தையும், ஒழுக்காற்று குழுவையும் அமைக்குமாறு மத்திய அரசை வலியுறுத்துமாறு ஆளுநரை அவர்கள் கேட்டுக்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (7)

# அரசு பகல் கனவு

## டிலான் கண்டுபிடிப்பு



(கொழும்பு)

அரசாங்கம் பகல் கனவு காண்கின்றது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தை விட்டு விலகிய 16 பேரில் சிலரேனும் அரசாங்கத்தில் மீள இணைந்து கொள்வார்கள் என அரசாங்கம் பகல் கனவு காண்கின்றது.


எதிர்வரும் 8ஆம் திகதி இந்த பதினாறு பேரும் எதிர்க்கட்சியில் அமர்ந்து கொள்வார்கள் என்பதில் மாற்றமில்லை.

அரசாங்கத்தில் இணைந்து செயற்படும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அரசாங்கத்தை விட்டு விலகும் நாளை தீர்மானிக்க வேண்டும்.

அரசாங்கத்தை விட்டு அண்மையில் விலகிய 16 பேரில் சிலர் மீள இணைந்து கொள்ள உள்ளதாக செய்யப்படும் பிரசாரங்களில் உண்மையில்லை.

எனினும், இந்த பதினாறு உறுப்பினர்களும் எதிர்க் கட்சியில் அமர்ந்து கொள்ள எடுத்த தீர்மானத்தில் மாற்றமில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# திருமலையில் இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்கக் கடற்படை பயிற்சி





(கொழும்பு)

பசுபிக் ஒத்துழைப்பு-2018 திட்டத்தின் கீழ், திருகோணமலைத் துறைமுகத்துக்கு வந்துள்ள அமெரிக்க கடற்படையின் வைத்தியசாலைக் கப்பலான யு.எஸ்.என்.எஸ். மேர்சி, இலங்கைப் படையினருக்கு பயிற்சிகளையும் அளித்து வருகிறது.

திருகோணமலை துறைமுகத்தில் தரித்து நிற்கும் யு.எஸ்.என்.எஸ்.மேர்சியில் உள்ள அமெரிக்கக் கடற்படையின் கடல் தாக்குதல் உலங்குவானூர்தி அணியைச் சேர்ந்த எம்.எச்- 60 சீஹோக் உலங்குவானூர்திகளின் மூலம் மீட்பு உத்திகள் தொடர்பாக இலங்கை படையினருக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

அனர்த்த மீட்புப் பணிகளின் போது பாதிக்கப்பட்டவர்களை மீட்பது தொடர்பான பயிற்சிகள் இதன்போது அளிக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, யு.எஸ்.என்.எஸ். மேர்சி வைத்தியசாலைக் கப்பலில் உள்ள கடற்படை வைத்தியர்கள் மற்றும் வைத்தியப் பணியாளர்கள், இலங்கைக் படை வைத்தியர்களுக்கான பயிற்சிகளையும் அளித்து வருகின்றனர்.

மேலும், பொதுமக்களுக்கான மருத்துவ முகாம்களையும் நடத்தி வருவதுடன், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களை துப்புரவு செய்தல் போன்ற சமூகப் பணிகளையும் மேற்கொள்வதுடன் விளையாட்டுகளிலும் அமெரிக்க கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர். (இ-7)

# அபாயா பிரச்சினைக்குத் தீர்வில்லையேல் போராட்டம் வெடிக்கும் என்கிறார் ஞானசார



(கொழும்பு)

நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவானதாகவே தேசிய சட்டங்கள் காணப்பட வேண்டும். பாடசாலை மட்டத்தில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் உடைகளில் வேறுபாடுகள் மிதமிஞ்சியதாக காணப்படுகின்றது. முஸ்லிம் மக்கள் சமய கலாசாரத்தினை பின்பற்றுவதாகக் கூறி நாட்டின் பொதுவான தேசிய சட்டங்களுக்கு முரணாகவே செயற்படுகின்றனர் என தெரிவித்த பொதுபலசேனா அமைப்பின் தலைவர் ஞானசாரதேரர், அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளில் முஸ்லிம் பெண்கள் முழுமையாக முகத்தினை மூடும் அபாயாக்கள் அணிவதை முற்றாக தடை செய்வதற்கான சட்டத்தினை கொண்டுவர வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் நாட்டு மக்கள் இதற்கு எதிராக ஒன்றிணைந்து போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

முஸ்லிம் பாடசாலைகளில் தமிழ் மாணவ , மாணவிகளுக்கு முஸ்லிம் முறைப்படி சீருடைகளை அணிய வேண்டும் என்று சில பாடசாலைகள் வலியுறுத்தி வருகின்றன. இவைகள் ஒரு இனத்தின் தேசிய கலாசாரத்திற்கு புறம்பானதாகவே காணப்படுகின்றது.

திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் கடந்த சில நாட்களாக இடம்பெற்று வரும் சம்பவங்கள் வேதனையளிக்கக் கூடியதாகவே காணப்படுகின்றது. பாடசாலையில் கற்பிக்கும் முஸ்லிம் ஆசிரியர்கள் முழுமையாக உடம்பினை மறைக்கும் அபாயா ஆடையினை அணிந்து வருவதற்கு பாடசாலை நிர்வாகம் மறுப்பு தெரிவித்ததை தொடர்ந்து அப்பிரதேசத்தில் இரண்டு சமூக மக்கள் மத்தியிலும் விரோதங்கள் ஏற்பட்டுள்ளன.

பாடசாலை நிர்வாகத்திற்கு எதிராக முஸ்லிம் ஆசிரியர்களின் கணவன்மார் கல்வி அதிகாரிகளிடம் முறைப்பாட்டினை செய்திருக்க வேண்டும். பாடசாலைக்குள் அத்துமீறிய நிலையில் பாடசாலை அதிபரை அச்சுறுத்தியமையானது கண்டிக்கத்தக்கது. நாட்டில் உள்ள தேசிய பொது சட்டங்களுக்கு முரணாகவே முஸ்லிம் மக்கள் செயற்பட்டு வருகின்றனர்.

அதாவது நீதிமன்றங்களில் தொப்பி மற்றும் முகத்தினை மூடும் ஆடைகளை அணியக் கூடாது என்ற பொதுவான சட்டம் தேசிய பொதுப் பாதுகாப்பு நலன் கருதி காணப்படுகின்றது. ஆனால் இவர்கள் அதனைப் பின்பற்றுவது கிடையாது. தமது சமய கோட்பாடுகளை மதிப்பதாகக் கூறி தேசிய சட்டங்களை அவமதிக்கின்றனர். இதற்கு எதிராகக் கடுமையான சட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும்.

இந்த நிகழ்வின் பின்னர் சமூக வலைத்தளங்களில் இலங்கையின் தேசிய ஆடையான சேலையினை அவமதிக்கும் பதிவுகள் இடம் பெற்றதுடன் சிங்கள மாணவர்களின் பாடசாலை சீருடைகளை குறிப்பாக பெண் பிள்ளைகளின் சீருடைகள் தொடர்பில் மிகு அருவருக்கத்தக்க பதிவுகள் இடம்பெற்று வருகின்றன. தேசிய உடையினை பற்றி அவமதிக்கும் பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வட கிழக்கு பாடசாலைகளில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளில் தமிழ் மாணவர்கள் முஸ்லிம் மாணவர்களைப் போன்று ஆடை அணிய வேண்டும் என்ற முறைமை காணப்படுகின்றது. இதற்கு எதிராக தமிழ் மக்கள் இதுவரை காலமும் எவ்வித பிரச்சினைகளையும் தோற்றுவிக்கவில்லை. மனித வாழ்க்கையில் ஆடைகள் என்பது ஒரு அங்கமாகவே காணப்படுகின்றன. ஒருவரை தவறான முறையில் நோக்கமிட ஆடைகள் காரணமாக அமையாது பார்ப்பவரின் எண்ணங்களும் பார்வையும் தவறாக காணப்படும் போது நிகழ்வுகளும் தவறானதாகவே காணப்படும்.

தேசிய அரசாங்கம் இந்த சமூகப் பிரச்சினைக்கு விரையில் சிறந்த தீர்மானத்தினை மேற்கொள்ள வேண்டும். இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் என்பது பெயரளவிலே காணப்படுகின்றது. ஆனால் அமைச்சுக்களின் மத்தியில் நல்லிணக்கம் சிறந்த முறையில் காணப்படுகின்றது என தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## காதில் வாங்கிக் கொள்ளாதவர்கள்

ஒரு திருமண இல்லத்தில்;

"இவர் பேரு சந்திரசேகருங்க. சொந்தமா எசன்ஸ் தயார் பண்ற கம்பனி வைச்சிருக்காருங்க."

"அப்படியா ரொம்ப சந்தோசம். அது சரி உங்க பேரு என்னன்னு சொன்னீங்க?"

இப்படி ஒரு வாக்கியம் சொல்லி முடித்தவுடனேயே மறுபடி பெயர் கேட்பது என்ன பழக்கம்?

ரயிலில் "இவன் என் பால்ய சிநேகிதன் ஜானகி. பேரு பாலசுப்பிரமணியன்"

"பாலு ! இவ என் மனைவி ஜானகி. இவளோட பெரியப்பா இறந்துட்டாரு அதுக்காகக் கோயமுத்தூருக்கு போயிட்டிருக்கோம்"

"வணக்கங்க சரிங்க உங்க சித்தப்பா எப்பங்க செத்துப் போனாரு?"

"சித்தப்பா இல்லீங்க பெரியப்பா!"

ஜானகி இரகசியக் குரலில என்னங்க உங்க பிரெண்டு என் சித்தப்பாவையும் சாகடிக்கிறாரு? சரிவர விடயத்தைக் கேட்டுக் கொள்ளாமல் அசடு வழிந்த காலங்கள் போயொழியட்டும்.

ஒருவர் இவருதான்... என்று ஆரம்பித்ததுமே ஏதோ அறிமுகம் நடக்கப் போகிறது. எனவே சொல்லப்படும் பெயரை நாம் நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று மனத்தை உசுப்ப வேண்டும்.

இவர் ஏதோ முக்கியமான விடயம் ஒன்றைச் சொல்லப் போகிறார். அதை நன்றாக மனதில் பதித்துக் கொண்டு அதை நினைவில் வைத்திருந்து அசத்த வேண்டும் என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டு உறங்குகின்ற நினைவாற்றலைத் தட்டிவிடலாம்.

என் தந்தையின் நண்பரின் மகன் ஒருவர் எனக்கு அறிமுகமானார். என் தந்தை அமானுல்லாவும் உங்கள் தந்தையும் நண்பர்கள் என்றார். என் பெயர் சையத் அகமது என்றார். சிறிது நேரம் கழித்து என் தாத்தா பெயர்தான் எனக்கு என்றார்.

பதினைந்து நிமிட உரையாடலுக்குப் பின் உங்கள் தந்தையை நான் பார்க்க வேண்டும். உங்கள் தந்தையின் விலாசத்தைப் பூர்த்தி செய்து தாருங்கள் என்று கேட்டு மேலே ஜனாப் எஸ்.அமானுல்லா என்று அவரிடம் பெயரை மட்டும் எழுதி நீட்டினேன்.


நண்பர் ஏ.சையத் அகமதுக்கு ஒரே வியப்பு. அபார நினைவாற்றல் உங்களுக்கு. ஒரு தடவைதானே சொன்னேன். எப்படி இது சாத்தியமாயிற்று? என்றார்.

எடுத்ததுமே உங்கள் அப்பா பெயரைச் சொன்னீர்கள். உங்கள் பெயர் தான் உங்கள் தாத்தா பெயர் என்றீர்கள். எனவே உங்கள் அப்பா பெயருக்கு முன்னால் எஸ். சேர்த்தேன் என்றேன்.


விடயத்தைச் சரிவர வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற நினைப்புடன் வாங்கிக் கொண்டால் நினைவில் பதிக்க வேண்டும் என்கிற ஆர்வம் இருந்தால் இது ஒன்றும் பிரமாதமான விடயம் அல்ல.

ஒரு சீனிவாசனை அறிமுகம் செய்து கொண்டுவிடுகிறோம். சிறிது நேரம் ஆன பிறகு புறப்படும் தருணத்தில் போயிட்டு வர்றேன் சீனிவாசன் சேர்! என்று சொன்னீர்கள் என்றால் அவ்வளவுதான் அந்த சீனிவாசன் உங்கள் பிடியில்!

**லேனா தமிழ்வாணன்**

7.

இத்தகைய ஒன்பது பூச்சாடிகளில் உள்ள பூக்களின் எண்ணிக்கை யாது?


..........................................................................

8.


இந் நான்கு இலக்கங்களையும் கொண்டு ஆக்கக் கூடிய மிகப்பெரிய எண்ணையும் மிகச்சிறிய எண்ணையும் கூட்டுக.

..........................................................................

9. ஒரு வரிசையில் 8 கதிரைகள் உள்ளன. அவ்வாறான 65 வரிசையில் உள்ள கதிரைகளின் எண்ணிக்கை யாது?

10.

1. இவ்வுருவில் நிழற்றிய பகுதி முழு உருவின் என்ன பின்னம்?

2. நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பின்னம்?

11. 1L 500 ml மென்பானப் போத்தலில் இருந்து 350 ml ஒரு கண்ணாடிக் குவளையில் ஊற்றப்பட்டது. இப்பொழுது போத்தலில் உள்ள மென்பானத்தின் அளவு யாது? ..........................................................................

12. 2 m 35 cm நீளமான ரிபன் நாடத்துண்டுடன் 95 cm ரிபன் நாடாத் துண்டைச் சேர்த்தால் முழு நீளம் யாது? ..........................................

13. 162, 821 என்னும் எண்களை நான்கினால் வகுக்கும் போது 2 மீதியாக இருக்கும் எண் யாது? ..........................................................


14.

| பொருள் | அளவு | அலகு ஒன்றின் விலை | செலுத்த வேண்டிய பணம் |
|---|---|---|---|
| அரிசி | 500 g | 90.00 | ......... |
| பருப்பு | 250 g | ........ | 30.00 |
| தேங்காய் எண்ணெய் | 1 l | 220.00 | ......... |

15. கொடுக்க வேண்டிய மொத்தத் தொகை யாது? ............................

- *மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.*

1. தேசிய மட்டப் போட்டியில் பரிசு பெற்ற மாணவனின் முகபாவனையைக் காட்டும் படம் எது?




2. விரைவாக முளைக்கக் கூடிய வித்து வகையைக் கொண்ட தொகுதி.
1. தேங்காய், பாக்கு, பனம் வித்து 2. கடுகு, பயறு, கௌப்பி
3. பாகல், புடோல், பூசணி 4. பாகல், பயறு, வேம்பு

3. பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் பிராணி அல்லாதது.
1. எலி 2. தேனீ 3. நத்தை 4. கிளி

4. தண்டுத்துண்டங்கள் மூலம் புதிய தாவரம் ஒன்றைப் பெறக்கூடிய தாவரம் எது?
1. மிளகாய் 2. சதைகரைச்சான் 3. மரவள்ளி 4. தக்காளி

5.

படத்தில் காட்டப்பட்டுள்ள சாடி எதனால் ஆக்கப்பட்டுள்ளது?
1. பழைய ரயர் 3. சிரட்டை
2. தயிர்ச்சட்டி 4. மூங்கில்

6. வீட்டுத்தோட்ட வேலி அமைக்கப் பயன்படுத்தும் தடி வகை அல்லாதது.
1. கிளிசிடியா 2. பூவரசு
3. முள்முருங்கை 4. மரவள்ளி

7. தாவரங்களில் இரவைக் கழிக்கும் பிராணி அல்லாதது.
1. ஆந்தை 2. குரங்கு 3. தேவாங்கு 4. பூனை

8. தனியாக நடமாடும் பிராணி அல்லாதது.
1. ஆமை 2. பல்லி 3. மைனா 4. பாம்பு

9. தமது குட்டிகளைக் கழுத்தின் பின்பகுதியில் கௌவித் தூக்கிச் செல்லும் பிராணிகளின் கூட்டம்.
1. யானை, மரை, புலி, முயல் 3. ஆடு, பசு, குதிரை, ஒட்டகம்
4. சிங்கம், நாய், பூனை, சிறுத்தை 4. புலி, கீரி, எறும்பு, ஒட்டகம்

10. பாலைவனக் கப்பல் என அழைக்கப்படும் பிராணி.
1. குதிரை 2. ஒட்டகம்
3. காண்டாமிருகம் 4. எருமை

11. நீர் நிலைகளுக்கு அண்மையில் சஞ்சரிக்கும் பிராணி அல்லாதது.
1. கொக்கு 2. நாரை 3. நீர்க்காகம் 4. நரி

12. பின்வரும் பூச்சிகளில் ஆறுகால்களைக் கொண்டிராத உயிரினம்.
1. தேனீ 2. குளவி 3. உண்ணி 4. பேன்

13. கீழ்வரும் பிராணிகளின் அனைத்தும் உண்ணி.
1. சிங்கம் 2. நரி 3. கிளி 4. நாய்

14. பின்வரும் பறவைகளில் கூரிய பார்வைத் திறனுடைய பறவை.
1. கிளி 2. காகம்
3. மைனா 4. பருந்து


15. தன் செட்டையிலுள்ள கண் போன்ற அமைப்பைக் காட்டிப் பயமுறுத்தும் உயிரினம்.
1. வண்ணத்துப்பூச்சி 2. அந்து
3. கும்பிடு பூச்சி 4. வெட்டுக்கிளி.

16. நத்தையின் முட்டையின் நிறம்.
1. மஞ்சள் 2. இளநீலம்
3. பச்சை 4. வெள்ளை

17. வயிற்றுப் பகுதியில் குட்டிகளைச் சுமந்து செல்வன.
1. ஆடு, பசு 2. பூனை, புலி
3. கங்காரு, கோவா்கரடி 4. குதிரை, நரி

18. இலங்கையில் கடற்கரை இருக்கும் மாகாணம்.
1. சப்ரகமுவ மாகாணம்
2. மத்திய மாகாணம்
3. ஊவா மாகாணம்
4. வடமேல் மாகாணம்

19. சமைப்பதற்கு மாசியை சிறுசிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ள மிகப் பொருத்தமான உபகரணம்.
1. இடுக்கி 2. மேசைக்கத்தி
3. பாக்குவெட்டி 4. அரிவாள் மனை

20.

படத்தில் காணப்படுவது.
1. இராமபாணம்
2. தெள்ளு
3. பேன்
4. கறையான்

21. இரவு வேளையில் உணவு தேடிச் செல்வது.
1. குரங்கு 2. காகம்
3. கிளி 4. முள்ளம்பன்றி

22. இனம் அழியும் ஆபத்தை எதிர்கொண்டுள்ள அரிதாகி வரும் விலங்கினம்?
1. எருது 2. கடலாமை 3. மான் 4. யானை

23.

இப்பாதம் எதற்குரியது.
1. சேவல்
2. மரங்கொத்தி
3. பருந்து
4. தாறா


24. ஆபத்து ஏற்படுவதை உணர்ந்தவுடன் தனது உடலை வட்டமாகச் சுருட்டி கொள்ளும் விலங்கு.
1. மயிர்க்கொட்டி 2. மரவட்டை
3. மின்மினிப்பூச்சி 4. அட்டை

25. பாடசாலையில் தேசிய கீதம் இசைக்கப்பட்ட போது மாணவர்கள் சிலரிடம் அவதானிக்கப்பட்ட பின்வரும் நடத்தைகளில் தேசிய கீதத்துக்கான கௌரவத்தை வெளிப்படுத்திய நடத்தை எது?
1. சத்தமிடாது தமது வேலைகளில் ஈடுபட்டமை.
2. மௌனமாக வாசிப்பில் ஈடுபட்டமை.
3. மரியாதையோடு எழுந்து "கவனமாக" நின்றமை.
4. மிக மெதுவாக அங்குமிங்கும் நடந்து திரிந்தமை.

26. மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டின் இரண்டாம் படிமுறையான மனதைத் தளர்த்தல் என்னும் படிமுறையில் செய்யப் பொருத்தமானது.
1. பல தடவை உள்மூச்சு வாங்குதல்.
2. சூழலில் ஒலிகளைச் செவிமடுத்தல்.
3. நல்ல கருத்துக்களை மனதில் பதித்தல்
4. பொறுப்புடன் நடந்துகொள்ள உறுதி பூணுதல்

27. கறையான்கள் அமைத்த வாழிடத்தில் குடியிருக்கும் ஒரு விலங்கினம்.
1. நத்தை 2. மண்புழு
3. பாம்பு 4. சிலந்தி

28. சரியான மெய்நிலையில் நடக்கும் ஒருவரின் பாதங்களின் சுவடுகளைக் காட்டும் படம் எது?




29. தேசிய இலச்சினையில் வாளேந்திய சிங்கத்தை முழுமையாகச் சுற்றி வட்டமாக அமைந்திருப்பது.
1. நெற்கதிர் 2. தர்மச்சக்கரம்
3. பூவிதழ்கள் 4. அரசிலை

30. இலங்கையின் தேசிய விளையாட்டு.
1. கிரிக்கெட் 2. றகர்
3. வொலிபோல் 4. சடுகுடு

## இனத்தின் விடுதலைக்காக இணைந்து பயணிக்க

# புதிய தமிழ்க் கூட்டமைப்பை உருவாக்க முன்வாருங்கள்!

## முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் கோரிக்கை.



இன்றைய நிலையில் தமிழ் மக்களின் எதிர்காலம் கேள்விக்குரியதாக உள்ளதைச் சாதகமாகப் பயன்படுத்திய தென்னிலங்கைச் சிங்களக் கட்சிகளும் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து தமிழ் மக்களின் அபிலாசைகளுக்குக் குந்தகம் விளைவித்த தமிழ்க் கட்சிகளுடனும் கூட்டுச் சேர்ந்து பதவிக்காகத் தமிழர்களின் தனித்துவத்தை விட்டு உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிகளைக் கைப்பற்றியுள்ள தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் கூட்டுக் கட்சிகள் தமிழ் மக்களால் நிராகரிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து புலம்பெயர்ந்த மக்கள் மற்றும் உள்ளூர் அமைப்புக்கள் ஒன்றுசேர்ந்து வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் தலைமையில் தமிழர்களின் ஒற்றுமையை நிலை நிறுத்திச் செயற்பட வேண்டியதன் முக்கியத்துவம் கொண்ட மனு ஒன்று முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. இச் சந்திப்பில் அரசியலில் ஈடுபடாத பொது அமைப்பாகச் செயற்படும் மக்கள் மன்றத்தின் சார்பில் கல்வி அமைச்சின் பிரத்தியேகச் செயலாளரும், முன்னாள் நகர பிதாவுமான ந.அனந்தராஜ் மற்றும் லண்டனில் இருந்து வருகை தந்திருந்த ம.இராமானந்த், இ.பிரேம்நாத் ஆகியோருடன் வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற உறுப்பினர் இ.சுரேன் மற்றும் சி.ஜெகப்பிரதாபன் ஆகியோரும் கலந்து கொண்டனர். முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்ட மனுவில்,

**1.** லண்டனில் கடந்த காலங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்காக நாங்கள் பெருமளவு நிதியைத் திரட்டி இங்கு அனுப்பி வைத்திருந்தோம். ஆனால் அந்தப் பணம் ஒரு சிலரின் தனிப்பட்ட பைகளை நிரப்ப உதவியதே ஒழிய பொது நோக்கிற்காகச் செலவழிக்கப்படவில்லை என்பதுடன் கணக்கறிக்கைகள் கூட பகிரங்கப்படுத்தப்படவில்லை. இந்தநிலையில், அண்மைக்காலமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் தவறான பாதையில் செல்வதை நாங்கள் உணர்ந்துள்ளதால், எதிர்வரும் காலங்களில் அவர்களுக்கு எவ்வித நிதியையும் அனுப்புவதில்லை என்றும் அவர்களை எதிர்காலத்தில் எமது தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும் எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் தங்களிடம் எமது வேண்டுகோள்களை முன்வைக்கின்றோம். இன்றைய எமது பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடியவரும், தமிழ் மக்களுக்குச் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கக்கூடியவருமாக தாங்களே தகுதியானவர் என்பதை ஈழத் தமிழர்கள் மட்டுமல்லாது புலம் பெயர்ந்து வாழும் எங்களைப் போன்ற தமிழர்களும் நம்புகின்றோம்.

**2.** வடமாகாணத்தில்வாழும் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக நாங்கள் அங்கிருந்து கொண்டு பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருவதுடன் கணிசமான நிதியையும் இங்குள்ள பாடசாலைகளின் அபிவிருத்திக்கு வழங்கி வருகின்றோம். இந்த நிலையில் தற்பொழுது தங்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும், "முதலமைச்சர் நிதியம்" தொடர்பாக புலம்பெயர்ந்தவர்கள் என்ற வகையில் எங்களால் முடிந்த பங்களிப்பை வழங்கத் தயாராக உள்ளோம். அது தொடர்பாகத் தங்களின் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் நாடி நிற்கின்றோம்.

**3.** மக்களின் செல்வாக்கும் ஆதரவும் தங்களுக்கே இருப்பதை உணர்ந்த பின்னரும் தங்களை நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து வெளியேற்ற முயற்சித்தும், அவர்கள் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாத நிலையில், அடுத்த முதலமைச்சர் யார் என்பது பற்றி தமிழரசுக் கட்சியினுள் இப்பொழுதே போட்டிகளும் ஆரம்பித்து விட்டன. ஆனால் அடுத்த முதல்வராகவும் தாங்களே வரவேண்டும் என்பதை ஈழத் தமிழர்களும், புலம் பெயர்ந்த தமிழர்களாகிய நாங்களும் விரும்புகின்றோம். அடுத்த முதல்வர் யார் என்பதை இந்த மண்ணிலேயே நீண்டகாலமாக வாழ்ந்து பல்வேறு யுத்த அவலங்களினால் பாதிக்கப்பட்டு விடிவுக்காகக் காத்திருக்கும் தமிழ் மக்களே தீர்மானிப்பர்.

**4.** இந்த நிலையில் தமிழ் மக்களுக்காக இதய சுத்தியுடன் குரல் கொடுத்துவரும் தாங்கள் தொடர்ந்தும் எமது மக்களுக்கான பலம்வாய்ந்த ஒரு தலைவராக இருக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் பின்வரும் முக்கியத்துவம் வாய்ந்த வேண்டுகோள்களை விடுக்கின்றோம்:

**4.1.** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தமிழரசுக் கட்சியினரின் தன்னிச்சையான, சர்வாதிகாரப் போக்கின் காரணமாக மாற்றுத் தலைமை ஒன்று வேண்டும் என்று பிரிந்து சென்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரசுக் கட்சி (தமிழ் தேசிய மக்கள் முன்னணி), சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளை மீண்டும் எவ்வித நிபந்தனையும் இன்றி ஒன்றிணைத்து ஒரு புதிய தமிழ்க் கூட்டமைப்பை உருவாக்கி பொதுச் சின்னம் ஒன்றில் அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்பதே எமது மக்களின் பெரு விருப்பமாகும். அதேவேளை தற்பொழுது நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆசனப் பகிர்வில் முரண்பாடுகளைச் சந்தித்த தமிழீழ விடுதலை இயக்கம் (TELO), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT), இலங்கைத்தமிழரசுக்கட்சி ஆகியவை இணைய விரும்பினால் அவர்களையும் ஒன்றிணைத்து பலமான சக்தியாக மாறும் வகையில் ஒரு புதிய தமிழ் கூட்டமைப்பை உருவாக்க வேண்டும். அல்லது எல்லோரும் விரும்பினால் தமிழ் மக்கள் பேரவையை அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு அரசியல் கட்சியாக ஒரு பொதுச் சின்னத்தில் பதிவு செய்து அதற்குத் தாங்கள் தலைமை தாங்கவேண்டும். ஆனால் அது எந்த அளவுக்குச் சாத்தியமாகும் என்பது எங்களுக்குத் தெரியவில்லை.


**4.2.** இவ்வாறான ஒரு ஒற்றுமை ஏற்படுத்தப்பட்ட பின்னர் அனைத்துக் கட்சிகளும் சமமான சக்தி வாய்ந்தவை என்பதைக் கருத்தில் கொண்டு, தேர்தல் காலங்களில் அனைத்துக் கட்சிகளுக்கும் சமமான பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இன்று தாங்கள் ஈழத் தமிழர்களினதும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களினதும் நம்பிக்கைக்கும் விருப்பத்திற்கும் உரியவாராக இருப்பதால் புதிதாகப் பதிவு செய்யப்படவுள்ள தமிழ் கூட்டமைப்புக்குத் தலைமை தாங்கி தமிழ் மக்களை வழி நடத்த வேண்டும். இத்தகைய ஒரு சாதகமான முடிவை அனைத்துத் தமிழர் கட்சிகளின் தலைவர்களும் தாயகத்திலும், புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களும் ஏற்றுக் கொள்வார்கள்.

**4.3.** அதேவேளை தங்களின் தலைமையை கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், பலம்வாய்ந்த அணிகளாகப் போட்டியிட்ட சுயேட்சைக் குழுக்களும் ஏற்றுக் கொள்வார்கள். குறிப்பாக பொ.ஐங்கரநேசன், சந்திரகுமார், க.அருந்தவபாலன், ஜனநாயகத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பேராசிரியர் க.சிற்றம்பலம், சிவாகரன் ஆகியோரும் தங்களின் தலைமைத்துவத்தின் கீழ் இணைந்து மக்களுக்காக உழைக்க முன்வருவார்கள். எனவே தங்களுக்கு இருக்கும் பாரிய வேலைப் பளுக்களின் மத்தியிலும் இந்த முயற்சிக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தாங்கள் விரைவாக இந்த ஒற்றுமை முயற்சியை மேற்கொள்வீர்களாயின் நடைபெறப் போகின்ற மாகாண சபைத் தேர்தலில் அனைத்து மாவட்டங்களிலும், தங்கள் தலைமையிலான ஒன்றிணைக்கப்பட்ட தமிழ்க் கூட்டமைப்பு வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளும். இதனால் வேறு எந்த ஒரு தென்னிலங்கையைச் சிங்களக் கட்சிகளுடனோ, அல்லது அரசுக்குச் சார்பாகவோ தொடர்ந்தும் இயங்கித் தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்து வரும் கட்சிகளுடனோ கூட்டுச் சேர வேண்டிய அவல நிலை ஏற்படாது.


**4.4.** இவ்வாறான ஒரு ஒற்றுமை முயற்சியைத் தாங்கள் முன்னெடுத்து அனைத்துத் தமிழர் கட்சிகளின் தலைவர்களையும் அழைத்து ஒரே மேசையில் சந்திக்க வைத்து தமிழ் மக்களுக்குச் சாதகமான ஒரு முடிவை ஏற்படுத்துவீர்களாயின் அது எமது மக்களுக்குத் தாங்கள் செய்யும் பேருதவியாக இருக்கும்.

**4.5.** தங்களின் இந்த நல்ல முயற்சியில் நல்லை ஆதீனக் குருமுதல்வர், ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள், கத்தோலிக்க மற்றும் தென்னிந்தியத் திருச்சபைகளின் பேராயர்கள் ஆகியோரும் மற்றும் கல்வியாளர்களும் பங்களிப்புச் செய்யத் தயாராக இருப்பதால் இந்த ஒற்றுமை முயற்சியில் அவர்களையும் இணைத்துச் செயலில் இறங்குவீர்களாயின் நாம் பலமான ஒரு சக்தியாக உலக அரங்கில் தலை நிமிர்ந்து நிற்க முடியும்.

இந்த அரிய முயற்சியினூடாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய மேற்குறித்த ஒற்றுமைக்கான முயற்சிகளைத் தாங்கள் விரைந்து மேற்கொள்ளுமாறு தங்களை அன்புடனும் உரிமையுடனும் கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)







யாழ். நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 69ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் தெற்கு சனசமூக நிலைய மைதானத்தில் முல்லைத்தீவு அபிவிருத்தி உத்தியோகத்தரும் நிலையத் தலைவருமான யோ. ஐங்கரன் தலைமையில் விளையாட்டுப் போட்டிகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம், சிறப்பு விருந்தினராக ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் பஞ்சாட்சரம் கணேசன், கௌரவ விருந்தினர்களாக சர்வதேச கரப்பந்தாட்ட நடுவரும், சிறுவர் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு நிலைய நிதி உதவியாளருமான நல்லையா சுதேஸ்குமார் கலந்து சிறப்பித்திருந்தனர். (படங்கள்: பொ.சோபிகா)



# முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின்

# 25வது நினைவஞ்சலி நிகழ்வு ஜனாதிபதி தலைமையில்

## மக்களின் கனவுகளை நனவாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர் எனப் புகழாரம்







(கொழும்பு)

மக்கள் கனவுகளை மறந்து, தங்களின் தனிப்பட்ட அரசியல் கனவுகளை நிறைவேற்றத் துடிக்கும் நிகழ்கால அரசியல் கலாசாரத்தினுள் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச முன்னுதாரணமானவராக திகழ்ந்தார்.

தமது கனவை நிறைவேற்றுவதற்காகவன்றி மக்களின் கனவுகளை நனவாக்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அவர், சுதந்திரமான ஜனநாயக சமுதாயத்தில் வலிமையற்ற, ஏழைமக்களின்வாழ்வை முன்னேற்றுவதற்கான அரசியல் கொள்கை மற்றும் நோக்கத்துடன் செயற்பட்ட சிறந்த தலைவராவார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று முற்பகல் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் 25ஆவது நினைவஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி, அமரர் பிரேமதாசவின் உருவச் சிலைக்கு மலர் செண்டு வைத்து மலரஞ்சலி செலுத்தினார்.

நிகழ்வில் தொடர்ந்து கருத்து தெரிவித்த ஜனாதிபதி, கடந்த ஜனாதிபதி தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து மக்கள் அளித்த பொறுப்பு மற்றும் கடந்த அரசை மாற்றியமைப்பதற்காக மக்களிடம் காணப்பட்ட முயற்சி என்பவற்றை கருத்திற் கொண்டு சகலரும் செயலாற்ற வேண்டுமென தெரிவித்தார்.

முன்னர் இடம்பெற்ற தவறுகள் மீண்டும் ஏற்படாத வாறு சிறந்த ஆட்சி, சிறந்த சமூகம் மற்றும் தூய்மையான அரசியல் இயக்கம் மற்றும் ஏழை மக்களை நேசிக்கும், மக்களின் இதய துடிப்பை உணர்ந்த மக்கள் நேய பயணத்திற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

ரணசிங்க பிரேமதாசவின் அரசியல் நோக்கு தொடர்பான புரிந்துணர்வுடன் அவர் எதிர்பார்த்த சமூக பரிணாமங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வென்ற வீர,வீராங்கனைகளுக்காக, வழங்கப்பட்ட 6 இல்லங்களில் 3 இல்லங்களுக்கும் கொழும்பு மாகாணத்தில் 5,000 குடியிருப்பு வாசிகளுக்கு இல்லங்களை வழங்கும் செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைக்கும் முகமாகவும் இதன்போது ஜனாதிபதியால் வீட்டு உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

மகா சங்கத்தினர் உள்ளிட்ட சர்வ மதத் தலைவர் கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய, அமைச்சர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், ஹேமா பிரேமதாச அம்மையார் உள்ளிட்ட பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1400

Search for people, places and things | Nagendram Home

### மீனாட்சி

நம்மில் பலருக்கு இரண்டாவது தாய் பசுதான்...



பல வீடுகளை வாழ வைத்துக்கொண்டிருக்கும் தெய்வம்!

### சக்தி

உயிரே போகும் நிலை வந்தாலும் நம்பிக்கையை மட்டும் இழக்காதே...!



நீ இழந்தவை அனைத்தையும் மீண்டும் கொண்டு வரும் சக்தி அதற்கு மட்டும்தான் உண்டு...!

### அனு

சில நேரம் ஏங்கே உறவுகள் என்று தேடத் தோன்றுகிறது



சில நேரம் எதற்காக உறவுகள் என்று வெறுக்கத் தோன்றுகிறது...

### ரவீனா

தனிமையில் அழுவது கூட வலிக்கவில்லை... ஆனால்



வலிக்கின்றது! பிறர் முன் சிரிப்பது போல் நடிப்பது...!

### ரேஷ்மா

எந்த வலியும் இல்லாமல் மனதில் சுமக்க வைக்கின்றன



பாடசாலையில் நாம் கற்ற இனிமையான காலங்கள்...!

### ரேவதி

அழகான இதயத்தைத் தேடாதே அது உன் வாழ்வில் ஏமாற்றத்தைத் தரும்



அன்பான இதயத்தைத் தேடு அது உன் வாழ்வில் ஏற்றத்தைத் தரும்...!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழீழம்



## அமையாது ஆயுதங்களை ஒப்படைப்பதில்லை என்பதில் பிரபாகரன் உறுதியுடன் இருந்தார்

(கொழும்பு)

"தனி ஈழம் அமைவதற்காகவே நாம் ஆயுதங்களை ஏந்தினோம். தனி ஈழம் அமையாத சூழலில் ஆயுதங்களைக் கையளிக்க முடியாது என்று பிரபாகரன் உறுதியாக கூறிவிட்டார்."

இலங்கை- இந்திய ஒப்பந்தம் உள்ளிட்ட முக்கிய விடயங்களில் பணியாற்றியவரும் மூத்த அரசியல்வாதியுமான பண்ருட்டி இராமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலவரங்கள் குறித்து கொழும்பு பிரபல ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியில்' அவர் இதனை தெரிவித்தார்.

"இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினை தற்போது வரையில் முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாதுள்ளதே?" என அந்த ஊடகம் கேள்வியெழுப்பியிருந்தது. இதற்கு பதிலளித்து பேசிய அவர்,

"அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும்போது நான் இலங்கைக்கு வந்திருந்தேன். அச்சமயத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தது. காரணம், ஜே.ஆர். ஜெயவர்த்தனவைத் தவிர வேறு யாரும் இந்தியாவுடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடுவதை விரும்பியிருக்கவில்லை.

குறிப்பாக பிரதமர் பிரேமதாஸ உள்ளிட்ட முக்கிய அமைச்சர்கள் அனைவரும் எதிர்ப்புடனே இருந்தார்கள். பிரசாரம் செய்தார்கள். சிங்கள மக்கள் மத்தியில் அந்த விடயம் பெரிதாக கவனத்தில் கொள்ளப்பட்டது.

அதேநேரம் இந்த ஒப்பந்தம் கைச்சத்திட்டு மாநில அரசாங்கத்தினை ஏற்படுத்த முனைந்தபோது விடுதலைப்புலிகள் ஏனைய இயக்கங்கள் அதில் பங்கேற்பதை விரும்பவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு கூட மட்டுப்பாடுகளை விதித்தார்கள்.

அதுமட்டுமன்றி தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களை வைப்பதற்கு மறுதலித்து விட்டார்கள். தனி ஈழம் அமைவதற்காகவே நாம் ஆயுதங்களை ஏந்தினோம்.

தனி ஈழம் அமையாத சூழலில் ஆயுதங்களை கையளிக்க முடியாது என்று பிரபாகரன் உறுதியாக கூறிவிட்டார். இவையெல்லாம் கலவையாக அந்த முயற்சியும் சிதைந்து விட்டது.

"ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னதாக விடுதலைப்புலிகள் ஆயுதக் கையளிப்பு விடயத்தில் இணக்கத்தினை கொண்டிருக்கவில்லையா? அவ்விடயம் குறித்து உங்களுடன் பேசினார்களா? என அந்த ஊடகம் கேட்டிருந்தது.

இதற்கு பதிலளித்து பேசிய அவர், "ஆம் என்னுடன் விடுதலைப் புலிகள் பேசினார்கள். அதனையடுத்து நாம் இந்த விடயம் சம்பந்தமாக ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னதாக ராஜீவ் காந்தியை நேரில் சந்தித்தோம்.

டில்லியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பின்போது, ராஜீவ் காந்தி, நான், பிரபாகரன், அன்ரன் பாலசிங்கம் ஆகியோரே பங்குபற்றினோம்.

அதன்போது பிரபாகரன் ஆயுதங்களை மீளக் கையளிக்க முடியாது என்பதற்கான காரணத்தினை ராஜீவ் காந்தியிடம் தெரிவித்தார். அச்சமயத்தில் ராஜீவ் காந்தி. "நீங்கள் அச்சப்பட வேண்டாம்.

இலங்கையுடன் இந்தியா ஒப்பந்தம் செய்கிறது. அவர்களால் அதனை மீறமுடியாது. அவ்வாறு மீறினால் இந்தியா தலையீடு செய்யும். ஆகவே நீங்கள் ஆயுதங்களை அச்சப்படாது கையளியுங்கள்.

அவ்வாறு இல்லாது விட்டால் உங்களிடமுள்ள ஆயுதங்களில் ஒருதொகுதி ஆயுதங்களை மட்டும் அவர்களிடத்தில் வழங்கிவிட்டு ஏனையவற்றை தமிழகத்தில் பாதுகாப்பாக வையுங்கள்" என்று அறிவுரை கூறினார்.

அத்துடன், "ஆயுதங்களை வழங்கினால் உங்களின் உயிருக்கு அச்சம் ஏற்படும் என்று அஞ்சுகின்றீர்களானால் குண்டு துளைக்காத எனது சீருடையை வைத்துக்கொள்ளுங்கள்" என்று கூறி அதனையும் வழங்கியதோடு ஐம்பது இலட்சம் ரூபாய் பணத்தினையும் வழங்கினார்.

அதன்போது பிரபாகரன் ராஜீவின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டே வந்திருந்தார். இந்திய எல்லையை தாண்டியதும் அவர் அவற்றை மறுத்தார்.

பிரபாகரனால் 'அவருடைய இயக்கத்தில் உள்ளவர்களை இந்த கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வைக்க முடியவில்லை என்று எனக்கு பின்னர் அறியக் கிடைத்தது. இருப்பினும் அதனை என்னால் உறுதியாக கூற முடியாது." என அவர் தனது செவ்வியில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 35 பரமசாமி பஞ்சாட்சரம்

### கயிலையின் வடமேற்கு முகம்

கயிலையின் வடமேற்குத் தரிசனத்தைத் தரிசித்த பின் இறைவன் விதம் விதமாகக் காட்சி அளிக்கின்ற விந்தையைப் பார்க்க முடிகிறது. ஓரிடத்தில் விநாயகர் சயனத்தில் இருப்பது போன்ற காட்சியைக் கண்டபோது மெய் சிலிர்த்துக் கண்கள் பனித்தன. கிரிவலத்தில் நடக்கும் போது துணைவியார் எங்கே செல்கின்றார் என்பது எனக்குத் தெரியாது. அனைவரும் பிரிந்து வேறு வேறு தூரவித்தியாசத்தில் நடந்து கொண்டிருந்தார்கள்.

கயிலாயத்தின் வடமேற்கு முகத்தின் தோற்றத்தைத் தரிசித்த பின் தொடர்ந்து சென்று கொண்டிருந்தோம். அன்று 19 கி.மீ. தூரத்தை நடந்தும் குதிரையிலும் சென்று மாலை 4.30 மணியளவில் கயிலையின் வடக்குப் பகுதியை அடைந்தோம்.


நாங்கள் தங்கவேண்டிய மடம் அங்கு இருக்கின்றது என்று உதவியாளர் கையாலே காட்டினார். பாலம் இல்லாத ஆறு ஓடிக்கொண்டு இருந்தது. கற்கள் மேல் காலை வைத்து ஆற்றைக் கடந்து தங்கு மடத்தை அடைந்தோம்.

உதவியாளர் எனது பையைத் திராபுக் தங்கு மடத்தைக் காட்டி என்னைப் போகச் சொல்லிவிட்டுத் தான் தனது இடத்திற்குச் சென்றுவிட்டார். அங்கு எங்கள் குழுவிலுள்ள சிலரைச் சந்தித்து அன்றைய விபரங்களை அறிந்து கொண்டேன்.

### ஒன்பதாம் நாள் 10.08.14 தொரல்புக்- 5000மீ.

அன்று ஞாயிற்றுக்கிழமை 10.08.14 ஆம் திகதி பௌர்ணமி திதியும் திருவோண நட்சத்திரமும் விஷ்கம்ப யோகமும் அமிர்த யோகமும் பாலவம் கரணமும் கூடிய நல்ல வேளையிலே கயிலைநாதனின் வட முகத் தரிசனம் எமக்குக் காணக் கிடைத்தது.

இந்த அற்புதக் கயிலைக் காட்சியைப் பௌர்ணமி தினத்திற்கு காணக் கண் கோடியன்றோ வேண்டும் என்ற எண்ணத்துடனும் மனத்திருப்தியுடனும் வணங்கினோம். புகைப்படம் எடுப்பதற்கு உகந்த நேரமாக இருந்தது. இந்த வட முகத் தரிசனத்தின் போது இறைவன் ஒவ்வொருவருக்கும் விதம் விதமான வடிவத்திலே காட்சியளிக்கிறார்.



கயிலை மலையின் வடக்கு முகம்

கயிலைநாதனின் வடக்கு முகத்தைப் பார்த்தபடி சிறப்பு வாய்ந்த தொரல்புக் என்னும் இடத்தில் மாலை 5.30 மணியளவில் பிரார்த்தனை ஆரம்பிக்கப்பட்டது.

அங்கு ஏராளமானோர் வருவதும் போவதுமாகக் காணப்பட்டார்கள். ஏனெனில் புனித கங்காதேவி பரமசிவனின் சிரசிலிருந்து தோன்றுவதாகப் பலர் இங்கு விசேட பிரார்த்தனை செய்கிறார்கள். அவரவர்கள் தங்களுக்குத் தெரிந்த மந்திரங்களையும் தேவார திருவாசகங்களையும் ஓதியபடி காணப்பட்டார்கள்.

பிரார்த்தனையின் பின் அன்று இரவு தங்கப்போகும் இடத்திற்கு நாம் அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கு சேப்பாக்கள் எமக்கு உணவு தருவதற்காக ஆயத்தமாக இருந்தார்கள்.

### பத்தாம் நாள் 11.08.14 அதிகாலைத் தரிசனம்

திங்கட்கிழமை அதிகாலை எழுந்து காலைக் கடனை முடித்தபின் வெளியே வந்து கயிலையைப் பார்த்தோம். கயிலாச மலை மீது அதிகாலை ஆதவனின் ஒளிக் கதிர்கள் படத் தொடங்கியதும் கொஞ்சம் கொஞ்சமாக மலை தங்கமயமாகத் தோன்றும் காட்சியைப் பார்த்தோம். எங்களைப் பிரமிக்க வைத்தது.

அப்போது அதிகமான யாத்திரிகர்கள் இதற்காக அங்கு வந்து காத்திருப்பதையும் கண்டோம். கயிலாச மலை இடை இடையே தங்க நிறமாகக் காட்சி தரும். நேரம் செல்லச் செல்லக் கயிலை முழுவதும் தங்கமயமாகக் காட்சியளித்தது.

(தொடரும்)

# அமைதிக்கான நோபல் பரிசு ட்ரம்புக்கு வழங்க வேண்டும்

## தென்கொரிய ஜனாதிபதி கோரிக்கை



(சியோல்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க வேண்டும் என்று தென்கொரிய ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரிய நாட்டின் பிரிவினைக்கு பிறகு வடகொரியாவும், தென் கொரியாவும் எதிரும் புதிருமாக இருந்தன. தென்கொரியாவுக்கு எதிராக வடகொரியா அணு ஆயுதச் சோதனைகள் மற்றும் ஏவுகணை சோதனைகளை தொடர்ந்து நடத்தி வந்தது. இதனால் கொரிய தீபகற்பத்தில் பதற்றமான சூழ்நிலை நிலவியது.

இந்த நிலையில் 65 ஆண்டுகளுக்கு பிறகு வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங்- உன் மற்றும் தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன் அண்மையில் சந்தித்து பேசினர். அப்போது கொரிய தீபகற்பத்தில் அணு ஆயுத பரவலை முற்றிலும் ஒழிக்க முடிவு செய்வதாக அறிவித்தனர்.

கொரிய பிராந்தியத்தில் அமைதியை மட்டுமே விரும்புவதாக மூன் ஜே இன் கூறியுள்ளார். அதற்காக வடகொரியாவிடம் தொடர்ந்து இணக்கமான போக்கை கடைப்பிடிக்க இருப்பதாகவும் தெரிவித்தார்.

இரு கொரிய நாட்டு தலைவர்களும் சந்தித்து பேசிய நிகழ்வை உலகமே உற்று நோக்கியது. இந்த வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வுகள் அனைத்துக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தான் காரணம் என தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன் தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் எடுத்துள்ள இந்த சீரிய முயற்சிகளுக்காக அமைதிக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் புகழாரம் சூட்டியுள்ளார்.

தென்கொரிய ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு பிறகு தற்போது உலக நாடுகளின் கவனம் வடகொரிய ஜனாதிபதி மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சந்திப்பு குறித்து திரும்பியுள்ளது. அவர்கள் இருவரும் மே அல்லது ஜூன் மாதத்தில் சந்தித்து பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

# எவ்வாறான மாற்றங்களைச் செய்தாலும் அரசால் நாட்டை முன்னேற்ற முடியாது

## புதிய அமைச்சரவை குறித்து மகிந்த கருத்து



(கொழும்பு)

எவ்வாறான மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டாலும் ஆளும் அரசாங்கத்திற்கு நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் தொழிலாளர் தலைவரான டி.பி. இளங்கேனின் கொழும்பு - நவம் மாவத்தையில் அமைந்துள்ள உருவச் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வில் நேற்றுக் கலந்து கொண்ட மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

இதனிடையே, ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் மே தின கூட்டத்திற்கு, அரசாங்கத்தில் இருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கவில்லை என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7)

# உறுப்பினர்கள் வெளியேறுவதை தடுக்க முடியாது

## ஷிப்லி பாறூக் தெரிவிப்பு

(ஏறாவூர்)

நகர சபை உறுப்பினர்களை சபையிலிருந்து வெளியேறாமல் தடுப்பதற்குரிய எத்தகைய அதிகாரங்களும் அதன் தவிசாளருக்கு இல்லை என காத்தான்குடி நகர சபை உறுப்பினர் ஷிப்லி பாறூக் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடி நகரசபை நடவடிக்கையின்போது ஷிப்லி பாறூக் வெளியேறியதைக் கண்டித்து சபை முதல்வர் எஸ்.எச்.எம்.அஸ்பர் தலைமையில் கண்டனத் தீர்மானமொன்று நிறைவேற்றப் பட்டிருந்தது.

குறித்த அவ்விடயம் தொடர்பாக அவர் நேற்று செவ்வாய்க்கிழமை இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "சபை நடவடிக்கையின் போது உறுப்பினர் ஒருவர் இடைநடுவில் வெளியேறுவதற்கு தவிசாளரின் அனுமதியினையோ அல்லது சபையின் அனுமதியினையோ பெற வேண்டிய அவசியம் உறுப்பினர் ஒருவருக்கு இல்லை.

குறைவான உறுப்பினர்கள் பங்குபற்றும் சபை நடவடிக்கையில் மட்டுமே சபைத் தவிசாளரால் குறித்த உறுப்பினரைத் தொடர்ந்தும் சபை நடவடிக்கைகளில் பங்கு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்க முடியும்.



இருப்பினும் அத்தகைய சந்தர்ப்பத்திலும் உறுப்பினர் ஒருவர் சபையிலிருந்து வெளியேற உரிமை உள்ளது.

எனவே இனிவரும் காலங்களிலாவது தவிசாளர் இவ்வாறான விடயங்களை நன்கு உணர்ந்து செயற்பட வேண்டும்" எனத் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## சேர்பியாவின் உதவிப் பிரதமர் இலங்கைக்கு இன்று வருகிறார்

(கொழும்பு)

சேர்பியாவின் முதலாவது உதவிப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான ஜவிக்கா டாசிக் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். சேர்பியாவின் பி92 நியூஸ் செய்தி நிறுவனம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. இன்று இரண்டாம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை இந்தியா நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு அவர் விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது சேர்பிய உதவிப் பிரதமர் மூன்று நாடுகளின் உயர் தலைவர்களைச் சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார். (இ-7)

## 26 அன்னதான சாலைகளுக்குத் தடை

(கொழும்பு)

ஆரோக்கியத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்பட்டு வந்த 26 அன்னதான சாலைகள் தடை செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பொதுமக்கள் சுகாதார பரிசோதகர்களின் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய தெரிவித்தார். கடந்த 29ஆம் திகதி காலை முதல் நேற்று முன்தினம் காலை ஆறு மணி வரையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது இவை தடை செய்யப்பட்டன. வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரண்டாயிரத்து 530 அன்னதான சாலைகள் இலங்கை பொதுமக்கள் சுகாதார பரிசோதகர்களால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சுகாதார சேவையை மேம்படுத்த இலங்கைக்கு கியூபா ஒத்துழைப்பு

(கொழும்பு)

இலங்கையின் சுகாதார சேவையை மேம்படுத்த கியூபா அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக தெரிவித்துள்ளது. கியூபாவில் நடைபெறும் சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டுள்ள சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்னவை சந்தித்த கியூபாவின் சுகாதார அமைச்சர் ரொபேர்ட்டோ மொறாலே இதனைத் தெரிவித்துள்ளார். கியூபாவில் உற்பத்தி செய்யப்படும் ஔடதங்கள், உபகரணங்களை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான உடன்படிக்கையொன்றில் கைச்சாத் திடுவதற்கும் இரு நாட்டு அமைச்சர்களுக்கும் இடையிலான சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## வெட்டுக்காயங்களுடன் மாணவி வைத்தியசாலையில் அனுமதி!

(கொழும்பு)

கத்தி வெட்டுக்காயங்களுடன் மாணவியொருவர் மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். மறே, நூக்குவத்தை தோட்டத்தைச் சேர்ந்த 16 வயது தேவிகா என்ற நல்லதண்ணி தமிழ் வித்தியாலயத்தில் கல்விப் பயிலும் மாணவியே கத்தி வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகிய நிலையில், மஸ்கெலியா வைத்தியசாலையில் நேற்றுக்காலை அனுமதிக்கப்பட்டாரென பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## 20 இற்கு ஆதரவு வழங்க கூட்டமைப்பு நிபந்தனை

(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்க வேண்டுமாயின், தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றை பெற்றுத் தருவதாக வாக்குறுதியளிக்க வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்றத்தில் கொண்டுவரவுள்ள 20 ஆவது திருத்தச் சட்ட மூலம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார். (இ-7)

## காபூல் தாக்குதலுக்கு இலங்கை அரசு கண்டனம்

(கொழும்பு) ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில், பொது மக்கள் மற்றும் ஊடகவியலாளர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தீவிரவாத தாக்குதல்களுக்கு இலங்கை அரசாங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இலங்கை தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளது. காபூலில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 8 ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட 29 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொழும்பில் நேற்று மே தின ஊர்வலம்







(கொழும்பு)

இலங்கையில் மே தினம் 7 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று சில பகுதிகளில் மே தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய "மே தினத்தைப் பாதுகாப்பதற்கான தொழிற்சங்கங்கள்" ஏற்பாடு செய்திருந்த மே தினக் கொண்டாட்டம் நேற்று காலை கொழும்பு புகையிரத நிலையத்திற்கு முன்பாக நடைபெற்றது.

இதன்போது மே தின கொண்டாட்டங்களை பிற்போட்டமைக்கு அரசாங்கத்திற்கு எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டதுடன், தமது கோரிக்கைகளை முன்வைத்து பதாதைகளை ஏந்தியவண்ணம் மே தினம் அனுஷ்டிக்கப்பட்டது. (இ-7)

## இரணைதீவு மக்களுக்கு அடிப்படை வசதிகள் ஜனாதிபதியிடம் சிறீதரன் எம்.பி. கோரிக்கை

(கிளிநொச்சி)



இரணைதீவு மண்ணில் பிறந்து வளர்ந்து அந்த மண்ணையே தமது பூர்வீக நிலமாகக் கொண்ட இரணைதீவு மக்கள் கடந்த மாதம் 23ஆம் திகதி தமது பூர்வீக மண்ணில் குடியேறியுள்ளார்கள். இம் மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் வாழ்க்கையை நடத்தி வருகின்றார்கள்.

அவர்களுக்குரிய அடிப்படை வசதிகளை உடனடியாக ஏற்படுத்தி கொடுப்பதற்கான செயற்பாடுகளை மிக விரைவாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் ஊடாக நிறைவேற்றித் தருமாறு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு.

இரணைதீவு மக்கள் 1992 ஆம் ஆண்டு இலங்கை இராணுவ நடவடிக்கை காரணமாக தங்களுடைய சொந்த மண்ணை விட்டு இடம்பெயர்ந்து, முழங்காவில் கடற்கரை ஓரமாக குடியேறி கடந்த 26 வருடங்களுக்கு மேலாக வாழ்வாதார உதவிகள் இன்றி மிகமோசமான நெருக்கடிகளுக்குள் வாழ்ந்து வந்துள்ளார்கள்.

இந்த மக்களை அவர்களது சொந்த மண்ணிலே மீள்குடியேற்ற வேண்டும் என்பதற்காக 2014.04.22 ஆம் திகதி நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் என்னால் தீர்மானம் இயற்றப்பட்டு சபை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர் 2017.02.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் பிரதமருக்கான கேள்வி நேரத்தின் போதும் இவ்விடயம் தொடர்பில் என்னால் கேள்வி எழுப்பப்பட்டு ஆராயப்பட்டுள்ளது. 2017.05.01 ஆம் திகதி இரணைதீவு மக்கள் தங்கள் சொந்த நிலங்களை விடுவிக்கக் கோரி அமைதி வழி போராட்டத்தை ஆரம்பித்தார்கள்.

இதன் தொடர்ச்சியாக கிளிநொச்சி மாவட்ட நில அளவைத் திணைக்களத்தினரால் குறித்த நிலங்கள் நில அளவீடு செய்யப்பட்டுள்ள போதும் அம்மக்களின் நிலவிடுவிப்பு தொடர்பில் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் பொருளாதார ரீதியாகவும், வாழ்வியல் ரீதியாகவும் மிகக்கூடிய மன அழுத்தங்களுக்கு உட்பட்டுள்ள இம்மக்கள் கடந்த 23 ஆம் திகதி தங்கள் சுயவிருப்பின் அடிப்படையில் தன்னெழுச்சியாக தங்கள் பூர்வீக மண்ணிலே குடியேறியுள்ளார்கள்.

இவ்வாறு குடியேறியுள்ள இம்மக்கள் உணவு, குடிநீர், கழிப்பறை, போக்குவரத்து, மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் அம் மண்ணிலே குடியேறி, பற்றைகளுக்கும், விச ஜந்துகளுக்கும் மத்தியில் பசியோடும், பட்டினியோடும், பாதுகாப்பற்ற நிலையிலும், வானமே கூரையாக தமது வாழ்க்கை வாழ்கின்றனர்.

தயவுசெய்து தாங்கள் இவ்விடயத்தில் அதீத அக்கறை காட்டி அவர்களுக்குரிய அடிப்படை வசதிகளை உடனடியாக ஏற்படுத்திக்கொடுப்பதற்கான செயற்பாடுகளை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கூடாக மிகவிரைவாக நிறைவேற்றித்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## பச்சைமிளகாய் பாரிய வீழ்ச்சி

(கொழும்பு)

கிழக்கில் பச்சைமிளகாயின் விலை என்றுமில்லாதவாறு வீழ்ச்சியடைந்துள்ளதால் ஈடுசெய்ய முடியாத நட்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது சந்தையில் ஒரு கிலோ பச்சை மிளகாயின் மொத்த விலை 20 ரூபாவாக காணப்படுகின்றது. இவ் விலை தொடர்ச்சியாக இருந்து கொண்டிருப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

ஒரு கிலோ பச்சைமிளகாயை பறிப்பதற்கு கூலியாக 15 ரூபா கொடுக்க வேண்டியுள்ளதாகவும் தங்களுக்கு ஒரு கிலோ பச்சைமிள காய் விற்றால் ப்றிப்பவர்களை விடவும் குறைவான தொகையான 5 ரூபாவே இலாபமாக கிடைப்பதாகவும் வேதனையுடன் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருட இறுதி மாதத்தில் ஒரு கிலோ பச்சை மிளகாயின் மொத்தவிலை 780 ரூபா தொடக்கம் 880 ரூபா வரை உயர்ச்சியடைந்து காணப்பட்டிருந்தது.

சாதாரணமாக இம்மாதத்திலே ஒரு கிலோ பச்சை மிளகாயின் விலை 250 ரூபா தொடக்கம் 280 ரூபா வரை செல்வது வழமையாக இருந்து வந்தது. ஆனால் இந் நிலை தற்போது தலைகீழாக மாறி பச்சை மிளகாயின் விலையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் மிளகாய் உற்பத்தியாளர்களுக்கு ஏக்கர் ஒன்றிற்கு இரண்டு இலட்சம் ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்படுவ தற்கு வாய்ப்புள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மூன்று மாடிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டல் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மானிப்பாய் இந்துக்கல்லூரியில் மூன்று மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் மே.இந்திரபாலா தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, சிறப்பு விருந்தினராக ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன், கௌரவ விருந்தினராக மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் என். விவேகானந்தராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7-64)



யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் பீடாதிபதி. பேராசிரியர். தி.வேல்நம்பியின் தலைமையில் கடந்த 29ஆம் திகதி இரத்ததான நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தில் முன்னெடுக்கப்பட்டது

## புதிய பிரதி அமைச்சர்கள் இன்று சத்தியப்பிரமாணம்

### அமைச்சர் மத்தும பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)



பிரதி அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கான பதவிகளிலும் மாற்றம் இருப்பதாக பொது நிர்வாகம், முகாமைத்துவம், சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் 3ஆவது அமைச்சரவை மாற்றம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மத்தும பண்டார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று முற்பகல் 10 மணிக்கு பிரதி அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களிலும் மாற்றம் செய்யப்படும்.

புதிய பிரதி அமைச்சர்கள், புதிய இராஜாங்க அமைச்சர்கள் இன்று சத்தியப் பிரமாணம் செய்துகொள்வார்கள் எனத் தெரிவித்தார். (இ-7)

நாம் வீணாகக் கழிக்கும் ஒவ்வொரு வினாடியும் நமது வாழ்வில் மீண்டும் நாம் பெறமுடியாத பெருஞ் செல்வமாகும். *- கார்ல் மார்க்ஸ்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பதவி வெற்றிடங்களை உடனடியாக நிரப்புங்கள்

பதவி வெற்றிடங்களை நிரப்புவதில் காட்டப்படும் காலதாமதம் பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவித்து விடுகின்றது.

இங்கு பதவி வெற்றிடம் என்பது இரண்டு வகைமையைக் குறித்துரைக்கும். அதில் ஒன்று ஆளணி வெற்றிடங்கள். பொதுவில் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அதிகார சபைகளில் ஒதுக்கப்பட்ட ஆளணி வெற்றிடங்கள் இருக்கின்றபோதிலும் அதற்குப் புதியவர்களை நியமிக்காமல் காலம் கடத்தப்படுவதால், அந்த வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கத் தகைமையுடையவர்கள் வயதெல்லைகளைத் தாண்டி விடுகின்றனர். இதனால் அவர்களுக்கான சந்தர்ப்பம் மறுக்கப்படுகின்றது.

தவிர, உரிய ஆளணியினரை நியமிக்காமல் விடுவதனால், குறித்த நிறுவனத்தின் வேலைத் திட்டங்கள் இழுத்தடிக்கப்படுகின்றன.

இதன்காரணமாக அந்த நிறுவனம் தனது பணியை செம்மையாகச் செய்ய முடியாத சூழ்நிலைக்கு உட்படுகின்றது.

இரண்டாவது வகைமை, உயர் பதவிகளில் ஏற்படும் வெற்றிடங்கள் நிரப்பப்படாமையாகும். அதாவது இடமாற்றம் அல்லது ஓய்வு பெறுதல் அல்லது பதவியுயர்வு என்ற வகையில் பதவி நிலை உத்தியோகத்தில் வெற்றிடம் ஏற்படுகின்ற போது அந்த வெற்றிடத்தை உடனடியாக நிரப்புதல் அவசியமாகும்.

இதனைச் செய்யாதவிடத்து குறித்த திணைக்களத்தின், கூட்டுத்தாபனத்தின் வேலைகள் ஸ்தம்பிதமாவதுடன் சில நிறுவனங்களில் நிர்வாகக் குழப்பங்களும் ஏற்பட்டுவிடுகின்றன.

எனவே பொதுவில் பதவி வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பதவி நிரப்புதலுக்கான நியமங்கள் தெளிவாகவும் சரியாகவும் இருக்குமாயின் பதவி வெற்றிடத்தை நிரப்புவதில் அவ்வளவு காலதாமதம் ஏற்பட வேண்டிய அவசியம் இருக்காது.

எனினும் மாகாண சபை நிர்வாகத்தில் முதலமைச்சர் சார்ந்த மாகாண சபை நிர்வாக எல்லை கடந்து ஆளுநரிடம் அனுமதி பெறுதல் என்பது வரையான நிர்வாக நடைமுறைகளை அமுலாக்குவதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகின்றது.

இதுதவிர, சில பதவி நிலை சார்ந்த வெற்றிடங்களை நிரப்ப முற்படும்போது ஆளுநர் அலுவலகத்துக்கே அதிக முறைப்பாடுகள் செய்யப்படுவதனால், குறித்த பதவிக்கு ஆட்களை நியமிப்பதில் ஆளுநர் அலுவலகம் காலதாமதம் எடுக்க வேண்டியுள்ளதென்ற யதார்த்தத்தையும் நாம் நிராகரித்து விட முடியாது.

எது எவ்வாறாயினும் பதவி வெற்றிடங்களை உடனுக்குடன் நிரப்புகை செய்வது உச்சமானதும் வினைத்திறனானதுமான சேவையைக் குறித்த நிறுவனம் வழங்குவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதுடன் அதனால் பொதுமக்களும் மிகுந்த நன்மையடைவர்.

எனவே பதவி வெற்றிடம் ஏற்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவற்றை உடனடியாக நிரப்புவது குறித்து தீவிர கவனம் செலுத்துவது மிகமிக அவசியம்.

# யாழ்ப்பாணப் பொலிஸாரின் செயற்பாடுகள் இளைய தலைமுறையினரின் வாழ்வை பாழாக்குகின்றது

## யாழ்.நீதிமன்றத்தில் மூத்த சட்டத்தரணி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் இளைய தலைமுறையினரின் 'வாழ்வைப் பாழாக்கும் வகையில் பொலிஸாரின் செயற்பாடுகள் அமைகின்றன என தெரிவித்த மூத்த சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம்,

பொலிஸாரின் இத்தகைய செயற்பாடுகளில் நீதிமன்றம் சிறப்புக் கவனம் செலுத்தி தடுத்து நிறுத்த வேண்டும் என யாழ். நீதவான் நீதிமன்றில் சமர்ப்பணம் செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் சந்தியில் உள்ள ஹாட்வெயார் ஒன்றின் மீது கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதி பிற்பகல் அடாவடிக் கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியிருந்தது.

அத் தாக்குதலையடுத்து 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 4 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஏனைய நான்கு பேரும் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொக்குவில் சந்தியில் நண்பனின் பிறந்தநாளைக் கேக் வெட்டிக் கொண்டாடிய போது ஏற்பட்ட தகராறை அடுத்தே ஹாட்வெயார் மீது தாக்குதல் நடத்தினோம் என சந்தேகநபர்கள் தெரிவித்தாக பொலிஸார் நீதிமன்றுக்கு அறிவித்திருந்தனர்.

சந்தேகநபர்கள் 4 பேரும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

2ஆவது சந்தேகநபர் சார்பில் முன்னிலையான போதே மேற்கண்டவாறு தனது சமர்ப்பணத்தில் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து வன்முறைகளில் சம்பந்தப்படாதவர்கள் சிலரை சந்தேகநபர்கள் என்றுகூறி பொலிஸார் கைது செய்கின்ற போது, நீதிமன்றம் அவ்வாறானவர்களை விடுவிக்கின்றது.

ஆனால் அனைவரையும் தப்புச் செய்யாதவர்கள் - அப்பாவிகள் என்று எடுத்துக்கொள்ள முடியாது.

நவீன தொழிநுட்பங்கள் வந்த பின்னர், வன்முறைகளில் ஈடுபடுபவர்களை இலகுவாக இனங்காண முடிகின்றது.

சீசீரிவி காணொலிப் பதிவுகளைப் பார்க்கின்ற போது, இளைஞர்கள் எவ்வாறு ஆக்ரோசமாக செயறபடுகின்றனர் என்பது அறிய முடிகின்றது.

பொது இடத்தில் வைத்து கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாட வேண்டும் என்று இல்லை. எத்தனையோ மண்டபங்கள் உள்ளன - வீடுகள் உள்ளன.

இவர்கள் வீதியில் வைத்து கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடியுள்ளனர்" என்று நீதவான் எஸ்.சதீஸ்தரன் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் அடுத்த தவணையின் போது சந்தேக நபர்களுக்கு எதிரான குற்றப் பத்திரிகையை பொலிஸார் தாக்கல் செய்யவேண்டும் என்பதுடன் சந்தேகநபர்கள் 4 பேரின் விளக்கமறியல் எதிர்வரும் 15ஆம் திகதி வரை நீடித்து கட்டளையிட்டார். (ம-9)

# வனவிலங்கு அமைச்சுக்கு புதிய அமைச்சர் வருவதை காட்டிலுள்ள விலங்குகள் கேள்விப்பட்டால் அவை பாய்ந்து ஓடும்

## – பொன்சேகா நியமனத்தை கிண்டலடித்த மகிந்த

(கொழும்பு)

அமைச்சரவை மாற்றத்தின் போது விஞ்ஞான ரீதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது வனவிலங்கு அமைச்சு மாத்திரமே என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அந்த அமைச்சு உயிரியல் விஞ்ஞான ரீதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய அமைச்சர் வருவதாக கேள்விப்பட்டால் காட்டிலுள்ள விலங்குகள் பாய்ந்து ஓடும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நாரஹேன்பிட்டி அபய ராம விகாரையில் நேற்று நடைபெற்ற சமய நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கவுள்ள அமைச்சுக்கள் விஞ்ஞான ரீதியில் அமையும் என அநுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் இரு தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார்.

வனவிலங்குகள் அமைச்சராக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு சட்டம் ஒழுங்கு அமைச்சு இம்முறை அமைச்சரவை மாற்றத்தின் போதாவது வழங்கப்படும் என அரசியல் மட்டத்தில் எதிர்பார்க்கப் பட்டது. இருப்பினும், அவ்வமைச்சு ஏற்கெனவே இருந்த அமைச்சருக்கே வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு)

# சங்கடஹர சதுர்த்தி

யா/வண். வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் சங்கடஹர சதுர்த்தி விரதம் நாளை வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு விநாயகப் பெருமானுக்கு அபிஷேகம் ஆரம்பமாகி மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டப பூஜையுடன் விநாயகப் பெருமான் திருவீதியுலா வலம் வரும் காட்சியும் இடம்பெறும் என ஆலய பிரதம குரு அறிவித்துள்ளார். (ம)

## ஜனாதிபதி செயலகத்தை நோக்கி பயணித்த பேரணியை தடுத்து நிறுத்திய பொலிஸார்

(கொழும்பு)

எதிர்ப்புகளை மீறி முன்னிலை சோஷலிஸக் கட்சி கொழும்பில் நடத்திய, மே தின பேரணிக்கு பொலிஸார் முட்டுக்கட்டை போட்டுள்ளனர்.

நேற்று நடத்தப்பட்ட குறித்த பேரணியில் முன்னிலை சோஷலிஸக் கட்சியின் முன்னணி உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதற்கிடையில் குறித்த பேரணி ஜனாதிபதி செயலகத்தை நோக்கி பயணித்த வேளை, பொலிஸார் வீதியை மறித்து முட்டுக்கட்டை போட்டதோடு, அவர்களை உள்நுழையவும் மறுப்பு தெரிவித்தனர். (ம)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்



✦ வெண்ணெய் எடுக்க சூரிய உதயத்திற்கு முன்பாக கடைய வேண்டும். பகலில் கடைந்தால் நன்றாகச் சேராது. அதுபோல் சிறுவயதிலேயே ஆன்மக நெறியில் நின்று மனதைக் கடவுளிடம் செலுத்தினால் தான் இறைக்காட்சி கிடைக்கும்.

✦ மனிதனின் மனம் கடுகுப் பொட்டலம் போன்றது. அது கிழிந்து, நாலாப் பக்கங்களிலும் ஓடிவிட்டால் அதை ஒன்று சேர்ப்பது சிரமம். அதுபோல் மனம் பல வழிகளில் சென்று, உலக விடயங்களோடு ஈடுபட்டிருக்கும் போது அதைக் குவித்து ஒருமுகப்படுத்துவதும் சுலபமல்ல.

✦ கடவுளைத் தேடுபவன் அவரை அடைகிறான், செல்வத்தைத் தேடுபவன் அவற்றை அடைகிறான். நீ எதைத் தேடுகிறாயோ அதையே அடைவாய்.

✦ "நான்" என்னும் அகங்காரம் அழியும்போது கடவுள் தோன்றுகிறார். ஒருவனது அகங்காரம் அவனது உடல் இருக்கும் வரை அவனைவிட்டு முற்றிலும் நீங்குவதில்லை.

✦ ஒளியை உணர்பவன் இருளையும் உணர்கிறான். பாவம் தெரிந்தவனுக்கு புண்ணியமும் தெரியும் குணத்தை அறிந்தவன், குற்றத்தைப் பற்றியும் அறிந்திருப்பான்.

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**சொந்த இலாபத்திற்காக தானம் செய்யலாமா?**

தர்மத்தின் விதிகளின் படி தர்மம் கொடுப்பதும் வாங்குவதும் சொந்த இலாபத்திற்காக இருக்கக் கூடாது. தானமாகக் கிடைததவற்றை பிறருக்குப் பயன்படும் வகையிலும் உலக நன்மைக்காகவும் பயன்படுத்துவது புண்ணியமாகும். நமது நாட்டில் பண்டைக்காலம் தொட்டே தானம் கொடுப்பதும் தானம் பெறுவதும் வழக்கத்தில் இருந்து வந்துள்ளதை நமது புராணங்கள் வாயிலாக அறிய முடிகிறது. அதாவது மிகவும் புகழ்பெற்ற நன்கொடையாளர்கள் தங்களின் பெயருக்கு எந்தக் களங்கமும் ஏற்படாத வண்ணம் தானம் செய்து புகழ் பெற்றுள்ளார்கள். தானம் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டவர்களும் இருந்துள்ளனர். இன்றும் இருக்கிறார்கள். (தொடரும்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** கல்மடு II கிராமம், கணேசபுரம் கிராமம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** முருங்கனிலிருந்து சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம், அரிப்பு, நானாட்டான் நகரம், அச்சங்குளம், நொச்சிக்குளம், மயிலங்கேணி, முருங்கன் பிட்டி, ஆத்திக்குளி, செம்மண்தீவு நெற் களஞ்சியம், சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம், டொன்பொஸ்கோ ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# கீர்த்திகன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டம் அரையிறுதிப் போட்டிக்கு தகுதிபெற்ற அணிகள்






கொக்குவில் இந்துக் கல்லூரியின் மறைந்த முன்னாள் கூடைப்பந்தாட்ட வீரர் ஜெயக்குமார் கீர்த்திகன் ஞாபகார்த்தமாக யாழ் மாவட்ட பாடசாலைகளின் ஆண், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடத்தி வரு கின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் 10 ஆண்கள் கூடைப்பந்தாட்ட அணிகளும், 5 பெண்கள் கூடைப்பந்தாட்ட அணிகளும் பங்குபற்றின. இருபாலாருக்குமான அணிகள், ஏ பி என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு லீக் சுற்று ஆட்டங்கள் இடம்பெற்றன.

ஆண்களுக்கான அணியில், ஏ பிரிவில் இருந்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியும் அரையிறுதிக்குள் நுழைந்தன. பி பிரிவில் இருந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் அரையிறுதிக்குள் நுழைந்தன.

அதேபோல் பெண்களுக்கான அணியில், ஏ பிரிவில் இருந்து, கொக்குவில் இந்துக் கல்லூரியும், உடுவில் மகளிர் கல்லூரி அணியும் அரையிறுதிக்குள் நுழைந்தன. பி பிரிவில் இருந்து திருக்குடும்பக் கன்னியர்மடமும், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணியும் அரையிறுதிக்குள் நுழைந்தன.






### ஆண்கள் அணிளுக்கிடையில் நடைபெற்ற லீக் போட்டி முடிவுகள்.

மானிப்பாய் ஏஞ்சல் இன்ரநஷனல் பாடசாலை அணியின் வெற்றிகள்

மானிப்பாய் ஏஞ்சல் இன்ரநஷனல் பாடசாலை அணியை எதிர்த்து வவுனியா தமிழ் மகா வித்தியாலய அணி மோதியது. முதற்பாதியாட்டத்தில் ஏஞ்சல் அணி, 43:32 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. தொடர்ந்தும், ஏஞ்சல் அணி ஆதிக்கம் செலுத்தி 79:60 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

மானிப்பாய் ஏஞ்சல் இன்ரநஷனல் பாடசாலை அணியை எதிர்த்து இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி மோதியது. தொடக்கம் முதல் ஏஞ்சல் அணியின் அகோரம் மைதானத்தில் நிலைபெற, எதிரணியால் புள்ளிகள் பெறமுடியவில்லை. முதற்பாதியாட்டத்தில் ஏஞ்சல் அணி, 22:00 என்று முன்னிலையில் இருந்தது. ஆட்டநேர முடியும் போது, ஏஞ்சல் அணி, 80:14 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதியது. முதற்பாதியாட்டத்தில் ஏஞ்சல் அணி, 24:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி கடுமையான போராட்டத்தை வெளிப்படுத்தியது. இருந்தும் புள்ளிகளின் முன்னிலை பெற முடியவில்லை. முடிவில் ஏஞ்சல் அணி, 49:48 என்ற புள்ளிகள் அடிப்படையில் திரில் வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியின் வெற்றிகள்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மல்லாவி மத்திய கல்லூரி அணி மோதியது. மத்திய கல்லூரி அணி, முதற்பாதியாட்டத்தில் 39:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது. தொடர்ந்தும், அதே ஆதிக்கத்தைச் செலுத்திய யாழ்ப்பாணம் மத்தி 65:37 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது. முதற்பாதியாட்டத்தில் 38:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முன்னிலை வகித்தது. அதே உற்சாகத்துடன் ஆடிய யாழ்ப்பாணம் மத்தி, 78:66 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது. யாழ்ப்பாணம் மத்தி அணி, முதற்பாதியாட்டத்தில் 39:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது. தொடர்ந்தும் சிறப்பாக ஆடிய யாழ்ப்பாணம் மத்தி அணி, 82:28 என்ற புள்ளிகள் அடிப்படையில் அபார வெற்றி பெற்றது.

மல்லாவி மத்திய கல்லூரி அணியின் வெற்றிகள்

மல்லாவி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது. முதற்பாதியாட்டத்தில் 22:21 புள்ளிகள் என சென்.ஜோன்ஸ் அணி முன்னிலை வகித்தது. எனினும், அதன் பின்னர் சுதாகரித்தாடிய மல்லாவி மத்திய கல்லூரி அணி 49:37 என்ற மொத்தப்புள்ளிகள் அடிப்படையில், சென்.ஜோன்ஸ் அணியை வென்றது.

மல்லாவி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணி மோதியது. முதற்பாதியாட்டத்தில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணி, 20:13என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. வழமைபோல இறுதிநேர உற்சாக ஆட்டத்தை வெளிப்படுத்திய மல்லாவி மத்திய கல்லூரி அணி, 47:43 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

யாழ்ப்பாணம் இந்து கல்லூரி அணியின் வெற்றிகள்

யாழ்ப்பாணம் இந்து கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி மோதியது. தொடக்கம் முதல் ஆட்டத்தை தம்கையில் வைத்திருந்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி, முதற்பாதியாட்டத்தில் 52:02 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது. அதே உற்சாகத்துடன் ஆடி, 85:07 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் இலகு வெற்றியைப் பதிவு செய்தது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா தமிழ் மகா வித்தியாலய அணி மோதியது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதற்பாதியாட்டத்தில் 33:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது. தொடர்ந்தும் சிறப்பாக ஆடி, 68:49 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் வெற்றிகள்

கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சாவகச்சேரி டிறிபேக் அணி மோதியது. கொக்குவில் இந்து அணி, முதற்பாதியாட்டத்தில் 34:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியாட்டத்திலும் சிறப்பாக செயற்பட்டு, 60:24 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மல்லாவி மத்திய கல்லூரி அணி மோதியது. கொக்குவில் இந்து அணி முதற்பாதியாட்டத்தில் 23:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியாட்டத்திலும், திறமையாக ஆடிய கொக்குவில் இந்து அணி, 51:13 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

வவுனியா தமிழ் மகா வித்தியாலய அணி வெற்றி

வவுனியா தமிழ் மகா வித்தியாலய அணியை எதிர்த்து இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி மோதியது. முதற்பாதியாட்டத்தில் வவுனியா அணி, 34:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது. தொடர்ந்தும் சிறப்பாக ஆடிய வவுனியா அணி, 61:26 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

### பெண்கள் அணிகளுக்கிடையில் நடைபெற்ற லீக் போட்டி முடிவுகள்

திருக்குடும்ப கன்னியர் மடம் அணி வெற்றி

திருக்குடும்பக் கன்னியர் மடம் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்து மகளிர கல்லூரி அணி மோதியது. திருக்குடும்ப கன்னியர்மட அணி, முதற்பாதியாட்டத்தில் 29:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. ஆட்டநேர முடிவில் திருக்குடும்ப கன்னியர் மடம் 50:38 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

உடுவில் மகளிர் கல்லூரி அணி வெற்றி

உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது. முதற்பாதியாட்டத்தில் கொக்குவில் இந்து அணி, 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது. எனினும் கடும் போராட்டத்தை வெளிப்படுத்திய உடுவில் மகளிர் கல்லூரி அணி, 54:53 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றி

கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி மோதியது. கொக்குவில் அணி, முதற்பாதியாட்டத்தில் 37:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது. தொடர்ந்தும், சிறப்பாக ஆடிய கொக்குவில் அணி, 68:30 என்ற மொத்த புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி வெற்றி

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதியது. வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி, முதற்பாதியாட்டத்தில் 18:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது. அதே உற்சாகத்துடன் ஆடி, 38:34 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் வென்றது. (க-26)

# வேகநடையில் வெண்கலம்

இளநிலைப் பிரிவினருக்கான தேசிய மட்டத் தடகளத் தொடரில் 20 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான வேக நடையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியைச் சேர்ந்த ஜே. சோபனா வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

இளநிலை பிரிவினருக்கான தேசிய மட்ட தடகளத் தொடர் கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. நேற்று நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் வேகநடையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியைச் சேர்ந்த ஜே.சோபனா ஒரு மணித்தியாலம் 12 நிமிடங்கள் 49 செக்கன்கள் 96 மில்லி செக்கன்களில் நடந்து வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தார். (க-29)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 99 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு நடத்தப்படும் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி அரியாலையூர் சுப்பிரமணியம் கௌசிகன், சுப்பிரமணியம் இநயராஜ் ஆகியோரின் ஞாபகார்த்தமாக நடைபெறும் இப்போட்டிகள் அணிக்கு ஏழுபேர் ஆறு பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட விலகல்முறையிலான போட்டியாகும்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன்னதாக 077 309 5745, 077 209 0814 எனும் இலக்கத்தொலைபேசி யூடாக பதிவுகளை மேற்கொள்ளலாம். (க)

## இனவாத அரசியலுக்குள்...

என தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸ்ஸநாயக்க. இனவாதத்துக்கு எதிராக சகல மக்களும் ஒன்றிணைந்து புதிய அரசியல் சக்தியை உருவாக்க முன்வர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் மே தினகூட்டம் நேற்று யாழ்.முற்றவெளியில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழில் இடம்பெறும் மே தினம் சரித்திரம் வாய்ந்த நிகழ்வாக உள்ளது. எமது நாட்டில் எந்தவித பாகுபாடும் இன்றி தொழிலாளர்கள் ஒடுக்கப்பட்டு வருகிறார்கள். அனைவரும் ஒன்று சேர்ந்து போராடவேண்டியுள்ளது. ஒடுக்குமுறை அநீதிக்கு எதிராக ஒன்று சேர்ந்து போராட வேண்டும். ஏகாதிபத்தியவாதிகள் எமது நாட்டை விட்டு சென்று 70 ஆண்டுகள் ஆகிவிட்டது. சுதந்திரம் கிடைத்துவிட்டதாக கொண்டாடுகிறார்கள்.

ஆனால் அண்மையில் அறிக்கை ஒன்று வெளியானது அதில் மந்த போசனை உள்ளவர்கள் இலங்கையில் 22 சதவீதமானவர்கள் உள்ளார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. போசாக்கின்மையால் வாடுகிறவர்களை தான் கடந்த கால அரசு உருவாக்கியுள்ளது. வயதுக்கு ஏற்ற வளர்ச்சி இல்லாத நலிவடைந்தவர்களை உருவாக்கியுள்ளார்கள். எமது பிள்ளைகளுக்கு சரியான உணவை கொடுக்கும் வருமானத்தை பெற்றுக்கொடுக்காத அரசாங்கம், என்ன அரசாங்கம்?

அத்துடன் கடன்காரர் நிறைந்த நாடு எமது நாடு. மாபெரும் கடன் பொறியில் எமது நாட்டு பிரஜைகள் சிக்கியுள்ளார்கள்.

பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பை பெற்று கொடுக்காத அரசு சாதாரண நபர்களுக்கு தொழில்வாய்ப்புக்களை பெற்று கொடுப்பார்களா? மாற்றங்கள் ஏற்படும் என நினைக்கிறீர்களா? மாற்றம் நடக்காது. தொழில் துறைகள் பல மூடப்பட்டுள்ளது. இங்குள்ள ஆட்சியாளர்கள் இருப்பதை மூடிவிட்டு விற்றார்கள். நாம் எதையும் அறியாது வருகிறோம் போகிறோம். ஒடுக்குமுறைக்குட்பட்டுள்ளோம். நாம் படும் துன்பம் எமது பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டுமா? இவை மாற புதிய சக்தி கட்டியெழுப்பப்பட வேண்டும்.

எமது மக்கள் 30 வருடங்களாக பாரிய யுத்தத்துக்கு முகம் கொடுத்தார்கள். இராணுவம், இந்திய இராணுவம், தமிழ் ஆயுத குழுக்களால் பாதிக்கப்பட்டார்கள், அவர்களால் சுட்டு கொல்லப்பட்டார்கள். அவர்களுக்கு அஞ்சி பயந்து வாழ்ந்தார்கள். மனைவி, கணவன், பிள்ளைகள், காணி, வியாபாரம், வீடு என்பவற்றை இழந்து பாரிய நெருக்கடிக்குள்ளான பிரதேசமாக உள்ளது.

பாதிக்கப்பட்ட பிரதேசத்தை கட்டியெழுப்ப எத்தனையோ விடயங்கள் உள்ளன. ஆனால் இங்குள்ள மக்களின் வாழ்க்கை எதியோப்பியாவை போல உள்ளது. என்ன அபிவிருத்தி செய்தார்கள்.

எந்த ஒரு பிரச்சினையும் தீர்க்க முடியாத ஆட்சியாளர்கள் தான் தற்போது உள்ளார்கள். காணாமல் போனவர்கள் பிரச்சினை, காணி பிரச்சினை, கல்வி தேவை என்பவற்றை பூர்த்தி செய்யாதுள்ளார்கள். இதில் மாற்றம் கொண்டுவர மாட்டார்கள். இதையும் விடகடும் பாதாள அழிவை நோக்கி கொண்டு செல்ல போகிறார்கள்.

இதை தடுக்க ஒன்றிணைந்து போராட உள்ளோம். ஆட்சியாளர்களுக்கு எதிராக இரண்டு தடவை ஆயுதம் ஏந்தி போராடினோம். குறிக்கோள் எதுவானாலும் ஆயுதம் ஏந்தி போராடியுள்ளார்கள். வடக்கு தெற்கென போராடி பலர் உயிர் நீத்தார்கள். மீண்டும். அநீதி ஒடுக்கு முறைக்கு எதிராக ஒன்றாக போராட வேண்டியுள்ளது.

70வருட ஆட்சியாளர்களுக்கு எதிரான போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். எமக்கு தெரியும் அது நடக்காது. தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் தீவிர இனவாத அரசியலுக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். தற்போது பிரபல்யமான அரசியல் இனவாத அரசியலாக மாறியுள்ளது. அவ்வாறான அரசியல் வாதிகள் மக்களை பிரிப்பதில் குறியாக உள்ளார்கள். ஒவ்வொரு இன மக்களும் ஏனைய இனத்தவரை சந்தேக கண் கொண்டு பார்க்கின்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

சிறிய பிரச்சினையையும் பெரிய பிரச்சினையாக இனவாத விசத்தை விதைத்துள்ளார்கள். தெற்கிலும் வடக்கிலும் பிரபலமான இனவாத அரசியல் தோன்றியுள்ளது. புதிய அரசியல் சக்தி எமக்கு வேண்டும். இனவாதத்துக்கு எதிராக சகல மக்களுக்கு ஒன்றிணைத்து போராட வேண்டும். அநீதிக்கு இனவாதத்துக்கு எதிராக போராட்டமாக இருக்க வேண்டும்.

மேலும் தற்போது விஞ்ஞான ரீதியான அமைச்சரவை என தெரிவித்து சங்கீத நாற்காலியில் இருப்பது போன்று அமைச்சரவையை பிரித்து கொடுத்துள்ளார்கள்.

அதேபோன்று கடந்த ஆட்சியில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிறைவேற்று அதிகாரத்தை பிரயோகித்து குருநாகலில் இருந்து ஆட்களை கொண்டு வந்து யாழ் நூலகத்தை எரித்தார். அதன் பின்னர் கறுப்பு ஜீலை நிர்மாணித்தார்கள். பல்லாயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டார்கள். இதற்கு காரணம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை தான். அழிவு மிகு ஜனநாயத்துக்கு முரணான இந்த முறை இல்லாது ஒழிக்க நாம் செயற்படுகிறோம்.

வடக்கிலும் தெற்கிலும் நாம் வேகமாக போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். வடக்கில் எம்மை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஒன்று சேர்வோம் என நம்புகிறோம். வடக்கில் ஒன்றாக போராட இந்த மே தின கொண்டாட்டம் ஆரம்ப புள்ளியாக அமைந்துள்ளது. எனவே புதிய அரசியல் சக்தியை உருவாக்க ஒன்றிணைவோம் என மேலும் தெரிவித்தார். (ம-9)

## கூட்டரசு எங்களை தொடர்ந்து...

விதத்தில் உரையாற்றினார் மாவை சேனாதிராஜா.

நெல்லியடி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

போர் முடிந்ததன் பின்னர் அமெரிக்க இராஜாங்க அமைச்சு எம்மை அழைத்தது அங்கு நாங்கள் சென்றிருந்தோம். அங்கே இந்த அரசும் இராணுவமும் போர்க்குற்றம் இழைத்திருப்பதாக கேட்டார்கள்.

இதனடிப்படையில் மனித உரிமை பேரவையில் தீர்மானம் கொண்டுவர வேண்டும் என்று வாதிட்டமையை ஒப்புக் கொள்ள வைத்தோம் என தனது நீண்ட உரையில் அவர் தெரிவித்தார். (ம-60)

## தேர்தலில் வாக்கு வங்கியை...

எனக் குறிப்பிட்டிருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அந்தப் பெரும் பின்னடைவிற்குப் பிற்பாடும் அவர்களோடு சேர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் அடிவருடிக் கட்சிகளும் ஒட்டுக்குழுக்களும் இணைந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தோற்கடிக்கவேண்டும் என்பதற்காக பேரினவாதக் கட்சிகளுடன் இணைந்து கூட்டாட்சி அமைத்துள்ளார்கள் என குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மேதினக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை நல்லூர் கிட்டுபூங்காவில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ்த் தேசியத்தைப் பொறுத்தவரை எங்களுக்கு சில முக்கியமான பொறுப்புக்கள் உள்ளன. அந்த முக்கியமான அடிப்படை விடயங்களில் எமது அமைப்பு தீவிரமாக இயங்கிவருகின்றது. மக்களது அன்றாட பிரச்சினைகளை எமது உள்ளூராட்சி உறுப்பினர்கள் ஊடகவும் உள்ளூராட்சி சபைகளுக்கு வேட்பாளர்களாக நியமிக்கப்பட்ட ஏனைய உறுப்பினர்கள் ஊடாகவும் வெளிக் கொணர்ந்து தீர்வுகாணும்வகையில் எமது செயற்பாடுகள் அமையும்.

அதேபோல தமிழ்த் தேசத்தைப் பொறுத்தவரை இரண்டு முக்கியமான விடயங்கள் இருக்கின்றன. எமது அமைப்பின் தலைமைப்பீடம் அந்த முக்கியமான கொள்கை விடயங்களில் மிகவும் தீவிரமாக இயங்கி வருகின்றது. முதலாவது எமது இனப்பிரச்சினைக்கான தீர்வு.

அந்த விடயம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏனைய கட்சிகளும் தமிழ்த் தேசிய நீக்கத்தைச் செய்ய முடிவெடுத்திருக்கின்றார்கள். தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து தமிழ்த் தேசிய நீக்கம் செய்தால் மட்டுமே நாங்கள் கடந்த 70 வருடங்களாக நிராகரித்துவந்த நாங்களாகவே விரும்பி ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு கொண்டு செல்லப்படுவோம் என்பதை நாங்கள் சுட்டிக் காட்டிவந்துள்ளோம்.

அந்தச் செயற்பாடுகள் போர் முடிந்த கையோடே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. தமிழ்த் தேசிய வாதத்தைப் பொறுத்தவரை எமக்கு மிக முக்கியமான அடையாளங்கள் உள்ளன. தமிழ்த் தேசிய பரம்பரையில் வளர்ந்து வந்த கட்சிகள். சிங்கக் கொடியை ஏற்றுக் கொண்டதில்லை. இரண்டாவது. இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழர்களிற்கு எதிரான அடக்குமுறை தினமாக பார்க்கின்ற விடயம்.

மூன்றாவது. தெற்கை மையப்படுத்தி செயற்படுகின்ற பேரினவாத கட்சிகளை நிராகரிக்கிறது. எமது மண்ணில் அவர்களுக்கு அங்கீகாரம் கொடுக்கக்கூடாது எனச் செயற்படுவது.

இந்த மூன்று விடயங்களும் மிக முக்கியமான விடயங்கள். ஆனால் தமிழ் அரசியலில் இருந்து தமிழ்த் தேசிய நீக்கம் செய்வதாக இருந்தால் மக்கள் இந்த மூன்று விடயங்களையும் மறந்துவிட வேண்டும். அந்த வகையில்தான் தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்டதாகக் கூறிவந்த கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்தப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின் இலங்கையின் சுதந்திர தினத்தில் பங்கேற்றது.

இதே மேதினம் போன்று 2012 மே தினத்தில் ஐக்கிய தேசியக் கட்சி யாழ்ப்பாணத்தில் மேதினக்கூட்டம் நடத்தவேண்டும் எனக் கேட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொண்ட மிகக் கேவலமான செயல் அரங்கேறியது. அந்தக் கொண்டாட்டத்தில் தமிழ்த் தேசியம் நிலைநாட்டப்பட்ட பின் அக் கட்சியின் தலைவராக இருந்த சம்பந்தன் வரலாற்றில் முதல் தடவையாக சிங்கக்கொடி ஏந்தினார்.

இது எல்லாம் அவர் வயது போன தன்மையினால் செய்த செயல்கள் அல்ல. தனது ஞாபகசக்தி குறைவினால் செய்த செயலும் அல்ல. அவ்வாறு பார்ப்பது எம்முடைய பலவீனம். இவை திட்டமிட்ட வகையில் செய்த செயல்கள்.

தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து தமிழ்த் தேசிய நீக்கம் செய்யவேண்டுமாக இருந்தால் இவ்வளவு காலமுமாகப் பார்க்கப்பட்ட சம்பவங்கள் எமது மனங்களில் இருந்து அகற்றப்படவேண்டும். அவை பிழையானவையாக நாங்கள் கருதாமல் நாங்கள் முழுமையாக நம்பி ஏற்றுக் கொள்கின்ற நிலைக்கு மக்களைக் கொண்டுவர வேண்டும். அதற்காக முன்னெடுக்கப்பட்ட விடயங்களே இவை.

இவற்றைத்தான் நாங்கள் எமது மக்களிடம் சுட்டிக்காட்டி வருகின்றோம் என மேலும் தெரிவித்தார். (ம-9)

# ஜே.வி.பியின் மே தினப் பேரணியில் சுமந்திரன் எம்.பி பங்கேற்பு



ஜே.வி.பியின் மேதினப் பேரணி நேற்று யாழ்ப்பாணம் பொஸ்கோ ஆரம்ப பாடசாலை மைதானத்தில் இருந்து ஆரம்பமாகியது. இந்நிகழ்வு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸ்ஸநாயக்க தலைமையில் நடைபெற்றது. நல்லூர் கோயில், யாழ்.வைத்தியசாலை வீதியூடாக யாழ்.மாநகர பிரதான மைதானத்தை சென்றடைந்து அங்கு விசேட பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இதில் யாழ்.பல்கலைகழக தொழிற்சங்கத்தினர், அனைத்துலக தொழிலாளர்கள் சங்கம், மின்சார சபையினர், அரச ஊழியர்கள், ஓய்வூதிய சங்கம், மீனவ சம்மேளனம், கைதிகளின் அமைப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

ஜே.வி.பியின் மே தின பேரணியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கொக்குவில் வாள்வெட்டு சந்தேக நபர்கள் மறியலில்

கொக்குவில் முதலி கோவில் பகுதியில் வைத்து கடந்த 26ஆம் திகதி ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவரை வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்று உத்தரவிட்டது.

அத்துடன், மற்றொரு சந்தேகநபருக்கு எதிராக போதிய சாட்சியங்களை எடுத்துக் காட்ட பொலிஸார் தவறியமையால் அவரை பிணையில் விடுவிக்க நீதிமன்று கட்டளையிட்டது.

இந்தச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்தார். வாள்வெட்டை மேற்கொண்டவர் ஆவா குழுவைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் கடந்த 28ஆம் திகதி இரண்டு பேரை பொலிஸார் கைது செய்து நீதிவானின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பொலிஸார் முற்படுத்தினர்.

இருவரில் ஒருவர் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். மற்றையவருக்கு எதிராக போதிய சாட்சியங்கள் இல்லாமையால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அத்துடன், கடந்த 29ஆம் திகதி மூன்றாவது சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவரையும் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். விசாரணைகள் இடம்பெறுவதாக பொலிஸார் மன்றுக்கு அறிவித்தனர்.

இந்த நிலையில் சந்தேகநபர்கள் இருவரினதும் விளக்கமறியலை வரும் 15ஆம் திகதி வரை நீடித்து நீதிமன்று கட்டளையிட்டது.(ம)

## யாழ்.பல்கலையில்...

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம், உலக தொழிலாளர் தினமாகிய மே தினத்தினை இலங்கை ஆசிரியர் சங்கம், சமூக விஞ்ஞான ஆய்வு மையம் என்பவற்றுடன் பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் இணைந்து யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 4.45 மணியளவில் நடத்தின.

அதில் சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தைச் சேர்ந்த அ.ஜோதிலிங்கம் அவர்களும், பல்கலைக்கழக ஊழியர் சங்க தலைவர் சி.கலாராஜ் அவர்களும்,

இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர்களில் ஒருவரான ஆ.திலீபன் திலீசன் அவர்களும் உரையாற்றினர். இதில் பெருமளவானோர் பங்கு பற்றியிருந்தனர். (ம)

## இன்று தேசிய...

பெற்ற சிங்கள திரைப்பட இயக்குநர், கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் இறுதி அஞ்சலி நாளான இன்று தேசிய துக்க தினமாக அரசு பிரகடனம் செய்துள்ளது.

கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் தனது 99ஆவது வயதில் காலமானார். அவரின் இறுதி அஞ்சலி இன்று புதன்கிழமை சுதந்திர சதுக்கத்தில் முழு அரச மரியாதையுடன் இடம்பெறவுள்ளது.

இந்த நிலையிலேயே இன்று தேசிய துக்க தினமாக அரசு பிரகடனம் செய்துள்ளது.(ம)

## விடுதலைக்காக...

தான் தமிழர்கள் தமது தார்மீக அடிப்படையிலான அரசியல் உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காக ஆயுதமேந்தி போராடினர்.

இனவிடுதலைக்காக அதியுச்சம் பெற்ற ஆயுதப்பொறிமுறை அதிகளவான பொருட் சேதங்களையும் அதி உன்னதமான உயிர்ச் சேதங்களையும் ஏற்படுத்தியபின் நிறைவுற்றிருக்கின்றது.

முள்ளிவாய்க்கால் மண் சொல்லி நிற்கின்ற செய்தியினை இன்னமும் சர்வதேசமும் இலங்கை அரசும் பன்னாட்டு அரசுறவியலாளர்களும் தாம் புரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இதுவரையில் ஏற்பட்டுள்ளதாக தெரியவில்லை.

தமது உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காக போராடிய இனக்குழுமத்தினை அதியுச்ச ஆயுத வன்முறையில் சிதைத்தழித்தால் அந்த இனத்தின் விடுதலை நோக்கிய பயணத்தினை முடக்கிவிடலாம் என்கின்ற மோசமான சிந்தனையினை எம்மை அழித்த தரப்புக்கள் உருவாக்கி வைத்திருப்பதானது இன்நல்லிணக்கத்துக்கும் எதிர்கால சகவாழ்விற்கும் இடையூறாகவே அமையும்.

போர்க்காலச்சூழல் அதன் தேவைகளைப் பூர்த்திசெய்து ஓய்ந்துபோய் ஒன்பதாண்டுகளை கடந்து செல்லவுள்ளோம். இந்த நிலையில் தமிழர்கள் உரிமைசார் விடயங்களில் தீர்க்கமான தீர்வின்றி சுபீட்சமான அபிவிருத்தியின்றி சிறையிலுள்ள எமது அரசியல் கைதிகளின் விடுதலையின்றி வெற்றிடமான ஒரு காலவோட்டத்தில் தமிழினம் பயணிக்கின்றது.

அழிக்கப்படும் ஒரு நிலையில் தமிழர்கள் ஆயுதமேந்தியபோது ஜனநாயகம் மனித உரிமைகள் தொடர்பில் வலியுறுத்தி சர்வதேச மத்தியஸ்தத்துடன் தமிழர்கள் நலனில் அக்கறைகொண்ட சர்வதேச நாடுகள் இன்றும் அதே பிரச்சினைகள் எம்மை விட்டகலாது சூழ்ந்துள்ள நிலையில் ஆயுதங்களற்ற இராணுவச் சமநிலையற்ற தமிழர் தரப்பை எங்கள் நியாயப்பாடுகளில் சர்வதேசம் கவனம் கொள்ளாதது கவலை அளிக்கின்றது.

அன்பான தாயக உறவுகளே! ஒன்றாகுதலே இனத்தின் இன்றைய தேவை. வருகின்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தில் அனைத்து உறவுகளும் அமைப்புக்களும் அரசியல்கட்சிகளும் ஒன்றிணைந்து ஓரணியாக ஒன்றுபட்டு செயலாற்ற வருமாறு அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

பேதங்கள், கோபங்கள், வியாக்கியானங்கள், கோட்பாடுகள் அனைத்தையும் இத்தினமதில் மறவுங்கள். முள்ளிவாய்க்கால் என்பது ஒரு இனத்தின் விடுதலைக்காக போராளிகளும் அதன் மக்களும் தீக்குளித்த மண். விடுதலைக் கனவுடன் ஆயிரம் ஆயிரம் வேங்கைகளும் பல இலட்சக்கணக்கான மக்களும் தங்கள் இன்னுயிர்களை ஆகுதியாக்கிய மண்.

விடுதலை வேண்டி ஒன்றாக போராடிய நாம் அந்த விடுதலையை வேண்டியவர்கள் நினைவில் கொள்ளப்படும் காலமதில் விலகி நிற்பதில் எவ்வித நியாயப்பாடுகளும் இல்லை என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-9-281)

## புதிய அமைச்சர...

தலைவரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றிலே அவர் இதனை தெரிவித்துள்ளார். இந்த சந்திப்பு கொழும்பு ஸ்ரீவஜிராஷர்ம பௌத்த நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிலையில் ஜீ.எல்.பீரிஸ் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். குறித்த உரையில் அவர் தெரிவித்ததாவது.

இந்த அமைச்சரவை மாற்றத்தின் மூலம் நாட்டிலுள்ள பிரச்சினை எதுவும் தீரப்போவதில்லை. ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்கே இவ்வாறான விடயங்களை அரசாங்கம் மேற்கொள்கிறது.

ஆகவே உடனடியாக பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடத்தி புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என கூட்டு எதிர்க்கட்சி வேண்டிக் கொண்டுள்ளது என கூறியுள்ளார். (ம)

## சுற்றிவளைப்பில்...

தொடர்பிலான குற்றங்கள் பதிவாகியுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, சட்ட விரோதமான முறையில் மதுபானம் வைத்திருந்த 191 பேர் இதன் போது கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)

## புதிய இராஜாங்...

அமைச்சரவை மாற்றங்களின் பின்னர் நேற்று செவ்வாய்க்கிழமை ஊடகவியலாளருக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி செயலகத்தில் இன்று காலை 10.30 மணியளவில் புதிய இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

நேற்று அமைச்சரவை மறுசீரமைக்கப்பட்டு 18 புதிய அமைச்சர்களுக்கான நியமனங்கள் ஜனாதிபதியால் வழங்கப்பட்டன. குறித்த 18 அமைச்சுக்கள் தவிர்ந்த ஏனைய அமைச்சுக்களில் எந்த மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை என அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமைச்சர் சரத் பொன்சேகாவிற்கு வழங்கப்படுமென எதிர்பார்த்திருந்த சட்டம் ஒழுங்கு அமைச்சு ரஞ்சித் மத்தும பண்டாரவிற்கு வழங்கப்பட்டதுடன், ரவி கருணாநாயக்கவிற்கு எந்த அமைச்சுப் பதவிகளும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## எழுச்சிப் பாடல்க...

கேற்றன. குறித்த பேரணியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன், யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் ஆர்னோல்ட், மாகாண சபை உறுப்பினர்கள், நகர மற்றும் பிரதேச சபைகளின் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், பங்காளிக் கட்சிகளின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் என பெரும் திரளானோர் பேரணியில் பங்கேற்றனர்.(ம-60)

## நாம்...

லேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக குறித்த மேதினச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மனித நாகரிகமானது இயற்கையின் சவால்களைக் கண்டு அஞ்சாத மனித உழைப்பினாலேயே உருவாக்கப்பட்டது. சுதந்திரத்திற்கான படைப்புக்கள் மற்றும் தொடர் போராட்டங்களில் ஈடுபட்ட மக்களின் அர்ப்பணிப்பினாலேயே அவை பொது உரிமைகளாக மாற்றம் பெற்றன.

மூன்று தசாப்த காலங்களாக இருந்த அசாதாரண சூழ்நிலைகளில் இருந்து விடுதலைபெற்று ஜனநாயகப் பாதையில் தற்போது பயணித்துக் கொண்டிருக்கின்றோம். மீண்டும் அந்த கசப்பான பாதையில் பயணிப்பதைத் தவிர்ப்பதற்கு நாம் உறுதி கொள்வதுடன், அவை குறித்து நாம் கற்றுக்கொண்ட கடுமையான பாடங்களை மறந்துவிடக் கூடாது என்பதையே இம் மேதினம் எமக்கு வலியுறுத்துகின்றது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு சொந்தமான வீடுகளைப் பெற்றுக் கொடுத்தல், தனியார்துறையினரின் அடிப்படைச் சம்பள எல்லையை சட்டரீதியாக உறுதி செய்தல், பிரசவ விடுமுறைகள், வீட்டுத் தொழிலாளர்களை தொழிற் சட்டத்தின்கீழ் கொண்டு வருதல் போன்ற விடயங்களுக்கு மதிப்பளித்து உழைப்பிற்குரிய கௌரவத்தினைப் பெற்றுக் கொடுப்பதே எமது இலக்காகும்.

ஒரு நாடு என்ற வகையில், நாம் அடைய வேண்டிய பொருளாதார சுபீட்சத்திற்காக நாம் ஒன்றாக உழைப்பதுடன், இன மத வேறுபாடுகள் அற்ற சுதந்திரத்திற்காக அணிதிரளும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் எனது வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களுக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## உழைக்கும் மக்க...

மக்களுக்கும் துணிச்சல் கிடைக்க வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

மே தினத்தை முன்னிட்டு நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள தனது மேதினச் செய்தியிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

நவீன தொடர்பாடல், தொழிநுட்ப முன்னேற்றத்துடன் ஊழியத்திற்கான பெறுமதி மற்றும் அதன் பயன்பாடு மிகவும் விரிவடைந்துள்ளது. உழைக்கும் மக்கள் என்போர் இனிமேலும் தொழிற்சாலையில், பண்ணையில் மாத்திரம் வேலை செய்வோர் அல்ல.

உருவாகியுள்ள பரந்த தொழில்ரீதியான சூழலில் வேலை செய்யும் மக்கள் தமது உரிமைகள் தொடர்பாக உணர்வுபூர்வமாக நோக்குதல், கலந்துரையாடுதல் போன்றே நாட்டிற்கும் மக்களுக்கும் தன்னால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புக்கள் தொடர்பாகவும் உரிய கவனத்தைச் செலுத்துவது மிகவும் முக்கியமானதாகும்.

உலக வரலாற்றில் தொழிலாளர் போராட்டங்கள் உழைக்கும் மக்களுக்குப் பல உரிமைகளைப் பெற்றுக் கொடுத்துள்ளதுடன், தற்காலத்தில் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக சம்பிரதாயப் போராட்டங்களைத் தாண்டிச் சென்ற புதிய முறைமைகளைக் கண்டறியும் சவால் நம் அனைவரின் முன்பாகவும் காணப்படுகிறது.

முன்னேற்றமடைந்த உலகுடன் கைகோர்த்து உண்மையான மறுமலர்ச்சியை நோக்கி எமது நாட்டை உயர்த்துவதற்கு உழைக்கும் மக்களின் உயர்ந்தபட்ச பங்களிப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன் என பிரதமர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (ம)

**வணிகத்துறையில் வேலைவாய்ப்பு**

எமது American நிறுவனமானது இலங்கையில் இறக்குமதி மற்றும் மொத்த வியாபாரங்களில் முன்னணியில் திகழ்கின்றது. இந் நிறுவனம் வடபகுதியில் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா) தனது புதிய பல கிளைகளை ஆரம்பிக்கவுள்ளதால் இப்பகுதியில் வாழும் இளைஞர்கள், யுவதிகளுக்கு பல வேலை வாய்ப்புக்களை வழங்கவுள்ளது.

பதவி

✓ விற்பனையாளர்கள் ✓ மேற்பார்வையாளர்கள்.

தகுதிகாண் பயிற்சியின் பின்

✓ காசாளர் ✓ களஞ்சிய பாதுகாவலர் ✓ அலுவலகர்

✓ உதவிமுகாமையாளர் ✓ முகாமையாளர்

தகுதியுடையோர் நேர்முகத் தேர்வினூடாக தெரிவு செய்யப்படுவர்.

(3821)

தொடர்பு :- 0766564030, 0771263805

**அண்ணா பொதிகள் சேவை**

876, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

லண்டன், ஜேர்மனி, கனடா மற்றும் சில நாடுகளுக்கு விலை குறைக்கப்பட்டுள்ளது

வெளிநாடு, உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

021 221 5656 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா | கனகராயன்குளம் | முல்லைத்தீவு

**PRINTING MACHINE**

விற்பனைக்கு

HEIDLE BERG CYLINDER

18 X 23 நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு.

(C-2470)

T.P 0777576342

M.SHAHUL HAMEED 140, NEW MOOR ST, COLOMBO 12.

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு

UK-550 /=Kg

கனடா-900 /=Kg

ஜேர்மனி-700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

**CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை**



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062

follow us cnrworldwideexpress

(க-2454)

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய பிரதேசங்களில் உள்ள O/L, A/L படித்தவர்களுக்கான 13 வகையான பதவி வெற்றிடங்கள் உள்ளன. உங்களுக்கு தகைமை இருப்பின் தொலைத்தொடர்பினை ஏற்படுத்தி முற்பதிவுகளை செய்து கொள்ளவும்.

வயதெல்லை 18-35 (3820)

076 666 8385, 077 848 5328

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

➤ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே

➤ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)

➤ யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org

(3812)

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

**தேவை**



>சமைப்பவர்

>சப்ளையர்

>கொத்து மாஸ்டர்

(C-2465)

தங்குமிடம், சாப்பாடு இலவசம்

தொடர்புக்கு 0774563959

6 மாதத்தில் 50,000 - 1 இல. சம்பளம் & வெளிநாட்டு விசா ஏற்பாட்டுடன்

புதிய அணி TOURISM & Hotel Management ஹொட்டேல் முகாமைத்துவக் கற்கை 4 MONTHS DURATION

Entry Level with FREE ENGLISH COURSE

பதிவுகளுக்கு 0777 36 16 798

9வது ஆண்டில் 9th Year

SIKARAM ACADEMY

FAST TRACK to CAREERS

Sri Lankan Entrepreneur of the Year 2017

இல.221-1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

021 221 9 221 www.sikaram.lk

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.